மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 24 ஞாயிற்றுக்கிழமை (08.03.2009)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:102

# பிள்ளையான் அணி ஆயுதக் களைவு!

# இராணுவப் பிரிவு கலைக்கப்பட்டது!!

## விடுதலைப் புலிகள் வெற்றிகொள்ளப்பட்டதால் ஆயுதங்கள் தேவையில்லையாம்

மட்டக்களப்பு, மார்ச்8

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு (பிள்ளையான் அணி) தமது வசம் இருந்த ஆயுதங்களை நேற்றுக் களைந்து அவற்றை வைபவ ரீதியாக இராணுவத்திடம் கையளித்தது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் இராணுவப் பிரிவும் உத்தியோகபூர்வமாக கலைக்கப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது. அதன் நிமித்தம் பிள்ளையான்அணியின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் படையினருடன் இணைந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை அரசாங்கப் படையினர் வெற்றி கொண்டு விட்டதால், தமக்கு இனிமேல் ஆயுதங்கள் தேவை இல்லை என்று - கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நேற்றைய ஆயுதக் களைவு வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.





தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் (பிள்ளையான் அணி) தம்வசம் இருந்த ஆயுதங்களை நேற்றுப் படையினரிடம் வைபவரீதியாகக் கையளித்தனர்.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நேற்று இடம் பெற்ற ஆயுதக்கையளிப்பின் போது கட்சியின் இரு பிரதிநிதிகள்ஆயுதங்களை கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தம்பத் பெர்னாண்டோவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்றும் இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்.மாவட்டத்தில் இருந்து பிற மாவட்டத்திற்கு பிரயாணம் மேற்கொள்வதற்கான கப்பல் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறமாட்டாது எனவும் அது நாளை திங்கட்கிழமை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் பிரயாணத்தினை (20 ஆம் பக்கம் பார்க்க)

வன்னியிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு மார்ச் 06 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட காயமடைந்தவர்களின் விவரம் 2ஆம் 19 ஆம் பக்கங்களில்

## குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்கள்

## ஏ-9 வீதியூடாக 40 லொறிகளில் நாளை எடுத்துவரப்படும்

### வாராந்தம் நூறு லொறிகளில் கொண்டுவர ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 8

யாழ். குடாநாட்டுக்கான அத்தியாவசியப் பொருள்கள் நாளை திங்கட்கிழமை ஏ-9 பாதை(கண்டி வீதி) ஊடாக எடுத்துச் செல்லப்படும். அத்தியாவசிய சேவைகள் நாயகம் எஸ்.பி.திவாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை: நாற்பது லொறிகள் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நாளை யாழ்ப்பாணம் செல்லும். அதனைத் தொடர்ந்து கிழமை ஒன்றுக்கு 80 முதல் 100 வரையான (20 ஆம் பக்கம் பார்க்க)

## ம.தி.மு.கவின் செயலாளர் நாஞ்சில் சம்பத் இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாகக் கைது



சென்னை, மார்ச்8

மதிமுகவின் கொள்கை பரப்புச் செய லாளர் நாஞ்சில் சம்பத் சனிக்கிழமை இரவு சென்னையில் கைதுசெய்யப்பட்டார்.

இம்மாதம் முதல் தேதியன்று திருப்பூரில், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், தனித் தமிழ் நாடு உருவாகவேண்டும் என்றும், டில்லியில் அதன் தூதரகம் அமைய வேண்டும் என்றும், தமிழகத்தில் உள்ள மாணவர்கள் அதற்குப் போராட வேண்டும் என்றும் அவர் பேசியதாக பொலிஸார் (20 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளை 45 சதுர கிலோ மீற்றருக்குள் முடக்கி விட்டதாக அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

முல்லைத்தீவு மாவட்டக் களமுனைகளில் வெவ்வேறு இடங்களில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே வெள்ளியன்று இடம்பெற்ற சண்டைகளில் விடுதலைப்புலிகள் குறைந்தது 32 பேர் கொல்லப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை உயர்நீதிமன்றத்துக்கு பாதுகாப்பு வழங்குமாறு தமிழக அரசிடம் கோரிக்கை

சென்னை மார்ச் 8

சென்னை உயர்நீதிமன்றத்துக்கு காவல் துறை பாதுகாப்பு வழங்குமாறு உயர்நீதிமன்ற நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த மாதம் 19ஆம் தேதி வழக்கறிஞர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே நடந்த மோதல் தொடர்பான சர்ச்சை நீடிக்கும் நிலையில், உயர்நீதிமன்றத்துக்கு காவல் துறை பாதுகாப்பு வழங்குமாறு தமிழக அரசிடம் உயர்நீதிமன்ற நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. (20 ஆம் பக்கம் பார்க்க)


## ஐ.நா. தலைமை அலுவலகம் முன்பாக தீக்குளித்த முருகதாஸின் இறுதிக்கிரியைகளில் பிரிட்டிஷ் எம்.பிக்கள்

லண்டன், மார்ச்8

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஜெனிவாவில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகம் முன்பாக தீக்குளித்து உயிர்நீத்த வர்ணகுலசிங்கம் முருகதாஸன் (வயது 26) என்ற இளைஞனின் பூதவுடல் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் லண்டனில் நேற்று தகனஞ்செய்யப்பட்டது. இறுதிக் கிரியைகளில் பிரிட்டிஷ் எம்.பிக்கள் பலரும் நகரங்களின் தலைவர்களும் பங்கேற்றனர்.

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி இவர் கடந்த மாதம் 19 ஆம் திகதி ஜெனிவாவில் ஐ.நா. அலுவலகம் முன்பாக தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்தார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையிலிருந்து காயப்பட்டு திருமலை வந்துள்ளோர் விவரம்

வன்னியில் காயமடைந்த பொதுமக்களில் 403 பேர் நேற்றுமுன்தினம் (06.03.2009) வெள்ளிக்கிழமை செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழுவினால் கப்பலில் திருகோண மலை வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

(கப்பலில் கொண்டுவரப்பட்ட போது மரணமான மூவரின் பெயர் விவரம் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை).

ரி.மகேந்திரன்(வயது52)-விசுவமடு, எஸ்.சசிகலா(வயது20)-முள்ளிவாய்க்கால், ஏ.றோஸ்மலர் (வயது48)- முல்லைத்தீவு, ஏ.அபிசன்(6 மாதம்)-முல்லைத்தீவு, ஏ.நிக்ஷன்(வயது07)-முல்லைத்தீவு, எஸ்.கோமதி(வயது31)-முல்லைத்தீவு, பி.சுப்பிரமணியம்(வயது64)-வவுனியா, ஏ.பரஞ்சோதி(வயது30)-கிளிநொச்சி,எஸ்.யசோதா(வயது27)-கிளிநொச்சி, எஸ்.யோகேஸ்வரி(வயது52)-கிளிநொச்சி, எம்.வேலாயுதன்(வயது67)-அல்பிட்டிய, டபிள்யூ.செல்வரட்ணம்(வயது50)மாங்குளம்-

ஐ.மனோன்மணி(வயது85)-யாழ்ப்பாணம், ஏ.வசந்தகுமாரி(வயது57)-கிளிநொச்சி, எஸ்.நிஷா(வயது10)-முல்லைத்தீவு, ஏ.செல்வரூபன்(வயது33)-முல்லைத்தீவு, எஸ்.லலிதாதேவி(வயது57)-யாழ்ப்பாணம்,ஏ.தெய்வானை (வயது65)-கல்முனை, ஜெ.அனுசாதேவி (வயது29) - மாத்தளன், ஜெ.மதுஷன்(வயது-07)-மாத்தளன், ஏ.தயாபரி(வயது39)- மன்னார், வி.சரஸ்வதி(வயது83)- பொக்கணை, நேசம்மதா(வயது57)-வட்டக்கண்டல்-

ஏ.அந்தோனியம்மா(வயது83)-அடம்பன், விநாசித்தம்பி(வயது68)-பளை, ஏ.கபிரியல்(வயது61)-மன்னார், வி.செல்லத் துரை (வயது81)-வவுனியா, டீ.ராஜேஸ் வரி (வயது31)-கிளிநொச்சி, பி.சலணி (வயது9), கிளிநொச்சி, பி.நிருஜா (வயது 2)- கிளிநொச்சி, பி.யாழினி(வயது8), கிளிநொச்சி, கே.சாவித்திரி(வயது 30)- மாத்தளன், கே.சுஜீ'வன்(வயது8)-மாத்தளன், கே.வனிதா(வயது05)-மாத்தளன், கே.தனுஷன்(வயது02)-மாத்தளன், முருகமூர்த்தி (வயது61)-சாவகச்சேரி, எஸ்.ராசன் (வயது28)-மாத்தளன், வி.ராஜேந்திரன் (வயது78)-புதுக்குடியிருப்பு, எஸ்.நிர்மலாதேவி (வயது30)-நாகர்கோயில், டீ.லோறன்ஸ்(வயது36)-மாத்தளன்-

ஏ.வசந்தி(வயது31)-மானிப்பாய், விஜயரோகினி(வயது26)முல்லைத்தீவு, ஏ.விதுஷா (வயது4)-மானிப்பாய், ஏ.லக்ஷிகா (வயது 9) -மானிப்பாய், ஏ.விதுஷன்(9 மாதம்)-மானிப்பாய், ரி.ரதம்(வயது57)- தெல்லிப்பழை, ரி.செல்வராஜ(வயது72)-யாழ்ப்பாணம், ஜெ.நவேந்திரன்(வயது 1.2)-பரந்தன், ஏ.ராஜேஸ்வரி(வயது19) -பரந்தன், என்.ஜெயந்தன்(வயது23)-பரந்தன், திருஷனா(வயது45)-விசுவமடு, எஸ்.சிவயோகம்(வயது73)-மாதகல், ஆர்.ரசீமா(வயது28)-மாத்தளன், ஆர்.விதுஷா(வயது2)- மாத்தளன், குணசேகரன்(வயது28)-யாழ்ப்பாணம், ரி.தேவி சறோஜா(வயது63)- புதுக்குடியிருப்பு-

கே.திருசெல்வராஜ (வயது 65)- முல்லைத்தீவு, எஸ்.செல்வராஸ் (வயது58) -கிளிநொச்சி, எஸ்.கமலம் (வயது70)-வட்டக்கச்சி, ஆர்.நிரோஜன் (வயது14)-சுந்தரபுரம், எம்.மதுர்ஷினி (வயது 9)- மாங்குளம், செபசாந்தன்(8 மாதம்)-மாங்குளம், எம்.ரவீந்திரா (வயது 19)-மாங்குளம், எம்.ஜெபதர்சன்(வயது 2)-மாங்குளம், ஆர்.பத்மலதா(வயது31)- பொக்கணை, முத்தாச்சி(வயது71)-பொக்கணை, ஆர்.கந்தவனம்(வயது69)-கண்டாவளை, ஐ.தெய்வானைப்பிள்ளை (வயது68)-கண்டாவளை, எம்.அழகன் (வயது69)-கிளிநொச்சி, ஆர்.விஜயரட்ணம் (வயது 60)-நாகர்கோயில்,எஸ்.நிருத்திகா (வயது 2)- நாகர்கோயில், கே.கிருஷ்ண பிள்ளை (வயது62) -பளை, கே.விவேகானந்தன்(வயது40)-பளை ,கே.முனியம்மா(வயது76)-சுதந்திரபுரம்-

ஆர்.லக்சுமி(வயது96)-புதுக்குடியிருப்பு, ரி.மயில்வாகனம்(வயது85)-வவுனியா, எஸ்.சந்தானம்(வயது69)-ஆண்டான்குளம், ரி.சிவமாலை(வயது70)-ஆண்டான்குளம், எல்.அமுதா(வயது33)-பூநகரி,மேரிலவநிதா (வயது13)-பூநகரி, எல்.டனிஸ்ரன்(வயது 09)-பூநகரி, எல்.ஜோதிகா(வயது 6)-பூநகரி, எல். விகாஸ்ரன் (வயது10), அருந்தவமலர்(வயது46)-முள்ளியவளை, வி.சின்னாச்சி (வயது75)-முள்ளியவளை, கே.பாமனி (வயது 28)-கற்சிலைமடு,கே.பானுஷன் (வயது 4)- கற்சிலைமடு, வை.சிவனு (வயது 74)-முல்லைத்தீவு, ஏ.அனுஷா(வயது25) -பரந் தன், ஆர்.கார்த்திகேசு(வயது67)-விசுவமடு, கே.யாழினி(வயது6)- பரந்தன், ஆர்.பூங்கோதை(வயது31) வவுனியா, ஆர்.கீர்த்திகா(வயது1) வவுனியா-

'கீர்த்தினா(வீயது5)வவுனியா, கே.டிஷாளினி(வயது2.5)-பரந்தன் , ஆர்.தெய்வநாயகம்(வயது50)-ஒட்டிசுட்டான், கே.கிசோபனா(வயது7)-பரந்தன், கலாமதி(வயது32)- சாவகச்சேரி, இ.அபிராமி(வயது4),சாவகச்சேரி, எஸ்.அமிர்தம் (வயது84)-மாத்தளன், எம்.இராமநாதன் (வயது71)- மாத்தளன், பி.தேவராணி (வயது78)-கிளிநொச்சி, எஸ்.கந்தசாமி (வயது67)-கிளிநொச்சி, ரி.மீனாட்சி (வயது 66)-பொக்கணை, ஏ.கிருஷ்ணமூர்த்தி (வயது55)-மல்லாவி, எம்.தங்கன் (வயது59) -யாழ்ப்பாணம், எம்.சின்ன மணி(வயது70)-யாழ்ப்பாணம், என். அன்ன மலர்(வயது 65)- மல்லாவி, ஆர்.தவராணி (வயது66)-யாழ்ப்பாணம், எஸ்.ராதகிருஷ் ணன் (வயது61)-யாழ்ப்பாணம், எஸ். பிரதீபன் (வயது25)-முல்லைத்தீவு-

எஸ்.கந்தையா(வயது70)-பரந்தன், ஆர்.மல்லிகா(வயது34)-சுதந்திரபுரம்,

(19 ஆம் பக்கம் பார்க்க)


## வீடு காணி விற்பனைக்கு

பழம் றோட் சந்தி, பலாலி வீதிக்கு அருகில் இரண்டு பரப்புக் காணி வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776102405

## பெண் பணியாள் தேவை

யாழ்.திருநெல்வேலி, தபாற்கட்டை சந்தியடியிலுள்ள விற்பனை நிலையத்திற்கு (Mother and Baby care) பெண் பணியாள் தேவை. (10.03.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 - 12 க்குள் நேரில் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

MOTHER AND BABY CARE

## படிவம்

இலங்கை விஞ்ஞான சேவை வகுப்பு II – தரம் II இன் பதவிகளுக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான படிவம்.

க. பொ. த (உ.த) ஆகஸ்ட் 2009 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான படிவம் உண்டு.

பாரதி பதிப்பகம்,
430, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்னை புத்தக நிலையம்
07,நவீன சந்தை,யாழ்ப்பாணம்.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 28 வயது, மகநட்சத்திரம், MBBS Doctor, Norway citizen பெண்ணிற்கு Doctor மணமகன் தேவை. 8 இல் செவ்வாய்+சனி உள்ளது. மொத்தக் கிரகபாவம் 22. இது ஒரு திருமணசேவை.
(www.thaalee.com) profil number 3425 T.P. NO: 252 3127, 2520619. இது தவிர இன்னும் 5000 மணமக்களுடைய படங்கள், விவரங்கள் ஜாதகங்கள் என்பன www.thaalee.com என்ற website இல் உள்ளன.

## கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் நாளை 09.03.2009 விநியோகிக்கப்படும்.

★ ராஜீவ் -
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

## விற்பனைக்கு

T.V.S. FLAME மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு
தொடர்பு: 14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம், 021 222 3493


## தவறிவிட்டது

கிருபானந்தன் தனபதி, 722400445V, 28B, புதிய சோனகத் தெரு, திருகோணமலை என்னும் முகவரியுடைய சாரதி அனுமதிப் பத்திரம் கடந்த 02.03.2009 அன்று சாவகச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை வீதி,கிராம்புவில் சாவகச்சேரி அல்லது, சோலை அம்மன் கோவில், மண்டுவில்,சாவகச்சேரி அல்லது 0774839890, 060 221 2300 என்னும் தொலைபேசி ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.


## மரண அறிவித்தல்

### இராசு வாமதேவன்

(களஞ்சிய முகாமையாளர், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)



கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், மடத்தடி உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட இராசு வாமதேவன் (05.03.2009) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசு-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், கதிர்வேலு காலஞ்சென்ற இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், கலாதேவியின் அன்புக் கணவரும், கபில்தேவ் (B.Sc. Computer Science 1st year,NORTH LANKA IIT) கார்த்திகா, நிலானி (வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கப்பிரகாசம், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் மனோன்மணி, வசந்தராணி, சகாதேவன் , லோகநாயகி (கொலண்ட்), வரதன்(சுவிஸ்), அரியமலர்(சுவிஸ்), கோடீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிர்மலாதேவி(கனடா), ரகு(கனடா), Dr.ரகுராம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வடக்கு இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
மடத்தடி, பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(63332)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை கயிலாசபிள்ளை



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை கயிலாசபிள்ளை கடந்த 04.03.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இராசமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கயிலாயபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, பழனித்துரை (முன்னாள் தலைமை ஆசிரியர், கொக்குவில் இந்து சிரேஷ்டபிரிவு), கண்ணுத்துரை (புகையிரதத் திணைக்களம்) மற்றும் புவனேந்திரன் (கனடா, ஓய்வு பெற்ற சுகாதார பரிசோதகர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணாகரன் (London) , மனோகரன் (Signal Engineer, Australia), திருமதி கருணாதேவி ஜெயசீலன் (Australia), திருமதி மனோகரி குகராஜா (கொக்குவில்), வசீகரன் (கொக்குவில்), லாலாகரன் (London), திருமதி கௌசி பாலச்சந்திரன் (London) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயமாலா, சோபனா, ஜெயசீலன், குகராசா, செல்வமலர், அனாமரியா, கருணாமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமி யாரும் கவின், டரன், அறுண், மயூரா, ஹாசன், ஜனா, லக்சனா, வானுசன், நிலோயன், வினோயன், மித்திரா, சினேகா ஆகி யோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34/4, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
T.P.No 0776171519
S.K.குகராஜா (மருமகன்).

## கண்ணீர்த் துளிகள்



யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் பழைய மாணவியும், ஆசிரியராகவும் பதில் அதிபருமாகக் கடமை புரிந்த

### திருமதி இலட்சுமிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

04.03.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் 1926 இல் இவ்வுலக வாழ்வில் தோன்றிப் பாடசாலையில் கல்வி பயின்று ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்டு வெளிவந்து 1948 ஆம் ஆண்டு தொடக்கம் எமது பாடசாலையில் ஆசிரியராகவும் பதில் அதிபராகவும் சேவை புரிந்து 1986 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வரை தனது சேவையை முடித்து ஓய்வுபெற்றார். அவர் சேவைக் காலம் பாடசாலையின் பொற்காலம் ஆகும். அவர் சமூகத்தின் இரு தலைமுறைகளுக்கு ஆசிரியராக இருந்து சேவையாற்றினார். கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் தனது சேவையை முற்று முழுதாகப் பரித்தியாகம் செய்துள்ளார். அவரின் இழப்பு இப்பாடசாலைக்கும், சமூகத்துக்கும் பேரிழப்பாகும். அவர்களின் குடும்பத்துக்கு அனுதாபம் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக விழிநீர் சொரிந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ
வித்தியாசாலையின்
பழைய மாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களால் முடியாதது எதுவுமில்லை என்று செயலிலே காட்டி நிற்கும் எமது சாதனைப் பெண்கள்

## இன்று சர்வதேச மகளிர் தினம்

வாழ்க்கையில் ஒவ்வொரு வகையிலும் பெண்களாலும் சாதிக்க முடியும் என்று எடுத்துக்காட்டி எங்களது சமூகத்தில் நிமிர்ந்து நின்று ஒளிரும் நான்கு மாதர்களை செவ்வி கண்டு 'உதயன்' வாசகர்களுக்கு இந்தச் சிறப்புப் பதிவுகளை இங்கே தருகின்றோம்.

**பற்றிக் அருமைநாயகம் ஜெயநாயகி (மாகியப்பிட்டி)**

எனது கணவருக்காகத் தான் நான் ஓட்டோ ஓட்டுவதற்குத் துணிந்தேன். 1996 ஆம் ஆண்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் எனது கணவரின் இரண்டு கால்களிலும் காயங்கள் ஏற்பட்டு நடக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. அவரது இடுப்புக்குக் கீழே உள்ள எந்தப் பாகமும் இன்றுவரை செயலிழந்தே உள்ளது.

அவருடைய காலில் ஏற்பட்ட காயத்தைக் குணப்படுத்துவதற்கு பல்வேறு வழிகளிலும் சிகிச்சைகளை மேற்கொண்டேன். இந்தியாவுக்குக்கூட சிகிச்சைக்காக கொண்டு சென்றேன். அப்போது அங்கே ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் ஓட்டோ ஓடுவதைக் காணக்கூடியதாக இருந்தது. இதுவே பின்னாளில் எனக்கு ஓர் உந்துசக்தியை வழங்கியது. எனது கணவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை முழுமையாகப் பலனளிக்கவில்லை. இன்றும்கூட அவரால் எழுந்து நடக்க முடியாத நிலை. நான்தான் அவரை எப் பொழுதும் பராமரித்து வருகிறேன். ஆரம்பத்தில் குடும்ப நல உத்தி யோகத்தராகக் கடமையாற்றினேன். எனது கணவரை சிகிச்சைக்காக இந்தி யாவுக்கு அழைத்துச் சென்று மீண் டும் திரும்பிவரத் தாமதித்ததால் அந்த வேலை பறிபோனது.

எனினும் என்னுடைய முயற்சியின் காரணமாக வலி.தென்மேற்கு பிரதேச சபையில் பட்டின சபை அலுவலகத்தில் கடமை புரிகிறேன்.

எனது கணவருக்கு கால் இயலாது என்ற காரணத்துக்காக அவரை தவிர்த்து விட்டு நான் மட்டும் தனியே எங்கேயும் போவதில்லை. அவரையும் என்னுடன் கூடவே அழைத்துச் செல்வேன். அதற்காக ஆரம்பத்தில் வாடகைக்குத் தான் ஓட்டோ பிடிப்போம். எனினும் அவர்கள் அதிகள வில் கட்டணம் வாங்கத் தொடங்கினார்கள். அத்துடன் எனது கணவரை ஓட்டோவில் ஏற்றி இறக்குவதற்கு அவர்கள் சிரமப்பட்டதையும், சினந்து கொண்டதையும் அவதானித்தேன். சிலவேளைகளில் அதை எண்ணிக் கவலைப்பட்டதுமுண்டு. இது இயலாத எனது கணவரையும் மனதளவில் காயப்படுத்தி அவரது உளநல னையும் பாதித்துவிடுமோ என நான் அஞ்சினேன். அதனால் நான் எனக் குள்ளே ஒரு முடிவெடுத் தேன்; எப் படியாவது கடன்பட்டு ஒரு ஓட்டோ வாங்க வேண்டுமென்று. அந்த எண் ணம் 2006 ஆம் ஆண்டிலேயே வெற்றியளித்தது.

அதனை ஓடுவதற்கு எனது கணவரும் எனது உறவினர் ஒருவரும் பயிற்சியளித்தனர். சரிவர ஓட்டோவை ஓட்டத் தொடங்கியதிலிருந்து எனது கணவரை நானே ஓட்டோவில் ஏற்றிப் பக்குவமாகக் கொண்டு செல்வேன். இதனால் பொருளாதார நிலையிலும் நாங்கள் பண இழப்பைத் தவிர்க்க




முடிந்தது. அத்தோடு தேவையற்ற மனக் குழப்பங்களையும் இல்லாமல் செய்தோம்.

நான் ஒரு பெண் என்பதால் ஓட்டோ ஓட்டுவதை எல்லோரும் ஒருவிதமாகப் பார்ப்பார்கள். ஆனால் நான் ஓட்டோ ஓட்டுகிறேன் என்ற நினைப்பு அந்த நேரங்களில் எனக்கு வராது. ஒரு சைக்கிளை ஓட்டும் போது என்ன மனநிலையில் இருப்பேனோ அதே போன்றே ஓட்டோவை ஓடும்போதும் இருக்கிறேன். அந்த வேளையில் எல்லாம் என்னுடைய கணவரை என்னோடு அழைத்துச் செல்கிறேன் என்ற திருப்திகரமான மனநிலையில் ஓட்டோவை ஓட்டுவேன்.

"ஆண்டவன் ஒருவாசலை மூடினால் இன்னொரு வாசல் திறப்பான்'' என்று சொல் வார்கள். அந்தவகையில் எனது கணவரால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டாலும் என்னு டைய மனோ வலிமையில் அசைக்க முடி யாத தெம்பினை எனக்கு இறைவன் ஊட்டியுள்ளான். பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கும், தொழில்ரீதியில் பால்வேறுபாடற்று எதனையும் செய்ய முடியும் என்பதற்கும் என்னைவிடச் சிறந்த உதாரணம் யாரும் இல்லை எனலாம்.

**திருமதி சிவசுப்பிரமணியம் புனிதவதி (சுழிபுரம் வயது - 60)**



சிறு வயது முதலே என்னிடம் சோம்பியிருக்கும் பழக்கம் இருந்தேயில்லை. எப்போதும், ஏதாவது செய்து கொண்டே இருப்பேன். என்னுடைய குடும்பம் விவசாயத்தைப் பின்புலமாகக் கொண்டது. எனவே விவசாயம் செய்வதிலும், மாட்டு வண்டில் சவாரி செய்வதிலும் எனக்கு இயல்பாகவே விருப்பம் ஏற்பட்டிருந்தது. அத்தோடு என் னையும் அறி யாமலே ஏதாவது சமூகசேவை செய்ய வேண்டு மென்ற எண்ணமும், அது தொடர் பான நடவடிக் கைகளிலும் தீவிரமாக ஈடு பட்டுள்ளேன். எனக்கு 11 வயதாக இருக்கும்போது, என்னைவிட வயது குறைந்த பிள்ளைகளை திருவடி நிலைப் பாடசாலைக்குக் கூட்டிச் செல்வேன். காலச்சுழற்சியில் நான் குடும்பத்தலைவியாகி, 3 பிள்ளைகளுக்குத் தாயான பின்னரும் எனது சமூக சேவை யுணர்வு மங்கிப்போய் விட வில்லை.

அதேநேரம் என்னுடைய குடும்பத்தினருக்குச் செய்ய வேண்டிய எல்லாவற்றையும், எதுவிதக் குறையு மின்றிச் செய்துவந்தேன். குறித்த நேரத் திற்குச் செல்வதென்பது என்னுடைய சுபாவம். அதனாற்தான் சகல காரியங்களுக்கும் நேரம் ஒதுக்கிச் செயற்பட முடி கின்றது.

1996 தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை மாட்டுவண்டிலில் மாணவர்களைப் பாடசாலைக்கு ஏற்றிச் சென்றதை நினைக்கும்போது இப்போதும் பெருமையாக இருக்கின்றது. பாடசாலை மாணவர்களை மாத்திரமன்றி எமது அயலில் உள்ளவர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் வண்டில் ஓட்டினேன். நான் குறைந்த கட்டணத்தைப் பெற்றதால், ஏனைய வண்டில் காரர்கள் என்மீது கோபம் கொண்ட நிகழ்வும் நடந்துதானிருக்கிறது.

ஒருமுறை இரவு ஒரு மணி இருக்கும். எமது வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பெண் ஒருவருக்குப் பிரசவவலி ஏற்பட்டு விட் டது. அந்த நடுச்சாமத்தில் ஆஸ்பத்தி ரிக்குக் கொண்டுசெல்ல வாகனக்காரர்கள் எவருமே முன்வரவில்லை. அதனால் என்னுடைய மாட்டுவண்டிலில்தான் அந் தக் கர்ப்பிணிப் பெண்ணைச் சங்கானை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். என்னுடைய துணிச்சலையும், எப்போதும் உதவும் குணத்தையும் பாராட்டாதவர்களே இல்லை.

என்னுடைய வயதினை ஒத்த பெண்கள் எல்லாம் அரட்டையடிப்பது, தொலைக்காட்சி பார்ப்பது என்று வீணாகப் பொழுதைக் கழிக்கிறார்கள். இப்படிப் பம்பரம் மாதிரிச் சுற்றித்திரிய வேண்டிய அவசியம் எனக்கில்லைதான். ஏனெனில் என்னுடைய பொருளாதாரநிலை செழிப்பாகவே உள்ளது. ஆயினும் நான் சார்ந்துள்ள சமூகம் முன்னேற ஏதோ என்னாலான பணிகளைச் செய்து வருகிறேன்.

கல்வியை இடைநிறுத்திய மாணவர்களை மீளவும் பாடசாலையில் இணைத்தல் வறியமாணவர்களுக்கு வருடந்தோறும் சிறுதொகையை அவர்கள் பெயரில் சேமிப் புப் புத்தகத்தில் இடுதல் எமது ஊர்ப்பா சாலைகளின் அபிவிருத்திக்கு உதவுதல், இணக்க சபையில் வருகின்ற சிக்கலான பிரச்சினைகளைத் தீர்த்தல், நீண்ட காலமாகத் திருமணமாகாத பிள்ளைகளுக்கு நல்ல வரனைத் தேடிக் கொடுத்தல், சிரமதானங் களை மேற்கொள்ளல் போன்றவற்றை இப்போதும் செய்து வருகின்றேன்.

தற்போது நான் சமாதான நீதிவான், விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர், சுழிபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், வலி.மேற்கு இணக்கசபை உறுப்பினர், வட்டுக் கோட்டை லயன்ஸ் கழக உறுப்பினர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர் என்னும் பொறுப்புகளைச் சுமக்க வேண்டியுள்ளது. எனினும் இது சுகமான சுமைதான்!

**இதயராஜ் சைலா (வயது 30-சாவற்கட்டு)**

1996 ஆம் ஆண்டு கடலிலே எனது கணவர் காணாமற்போனார். சிலகாலங்களின் பின்னரே அவர் இறந்ததை உறுதிப்படுத்தும் தடயம் கிடைத்தது. கணவர் இறந்த செய்தியை அறிந்து மற்றப் பெண்களைப்போல நானும் அழுதேன். என் வாழ்வே முடிந்து விட்டதென எண்ணினேன்.

எனது அம்மாவும் 1986 ஆம் ஆண்டு, எங்களுடைய அப்பாவை யுத்தத்தினால் இழந்து விதவையானவர். இந்நிலையில் கணவனை இழந்து, மனச்சோர்வுற்றிருந்த என்னை 'சாந்திகம்' நிறுவனத்தினர் ஆற்றுப்படுத்த முற்பட்டனர். அதன்போது 'என்போன்ற விதவைகளின் வாழ்வில் மலர்வை உண்டு பண்ண ஏதாவது செய்யலாம்' என அவர்கள் ஒரு யோசனை சொன் னார்கள். அதிலிருந்து உருவானதுதான் 'தாரகா' விதவைகள் மலர்வு மையம். இந்த நிறுவனம் 2002 ஆம் ஆண்டு தொடங் கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்து இன்று வரை நான்தான் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றேன்.

எமது சாவல்கட்டுப் பிரதேசத்தில் கடலில் தமது கணவர்களைத் தொலைத்து விட்டு விதவை யானவர்கள் பலர். அவர்களையும், ஏனைய விதவைகளையும் ஒன்றிணைத்து 'தாராகாவை' உருவாக்கினேன். எனினும் 'எத்த னையோ ஆண்களால்கூட ஒழுங்காக ஒருசங்கத்தை நடத்த முடியாமல் இருக்கிறது. இந்த லட்சணத்தில் இந்த வித வைகள் என்ன சாதிக்கப்போகிறார் கள்?' என்று பலர் கேலிசெய்தனர். அத்தோடு காகிதாதிகள், பைல் என்பவற்றை எமது சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் கொண்டுவரும்போது அதற்கும் பலர் நக்கல் கதைகள் சொன்னார்கள். அதற்கெல்லாம் பயந்து எமது நிர்வாக உறுப்பினர்கள் சிலர் மரக்கறி பைகளுக்குள் தமது அலுவலக ஆவணங்களை மறைத்து வைத்தபடி வந்த சம்பவங்களும் உண்டு. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறி விட்டது. அன்று எம்மால் எதுவுமே முடியாது என எண்ணியவர்களும் கேலி செய்தவர்களும் எமது உதவியைத்தேடி நாடி வரத்தொடங்கியுள்ளனர்.

தாரகா விதவைகள் மலர்வு மையத்தை நான் ஆரம்பித்தபோது, எமது சங்கத்தில் இணைந்தவர்களின் வீடுகளிலேயே கூட்டங்களை நடத்தினோம். எனினும் எமது விடாமுயற்சியின் விளைவாக இன்று



எமக்கென்றொரு நிரந்தரக் கட்டடத்தையும் அமைத்துள்ளோம். இன்று எமது சங்கத்தில் 90 இற்கும் மேற்பட்ட விதவைகள் இணைந்துள்ளனர்.

விதவைகளுக்கும், அவர்களது பிள்ளைகளுக்கும் தொழிற்பயிற்சிகள், தொழில் வாய்ப்புகள், கணனிப் பயிற்சிகள் என்பவற்றை வழங்கியுள்ளோம். எமது சங்கத்தினூடாகப் பயிற்சிபெற்ற பலர் இன்று சுயமாகத் தொழில் செய்து, வருமானத்தை ஈட்டி வருகின்றனர். ஏட்டுச் சுரைக்காய்த் தனமாகச் செயற்படாமல், யதார்த்தத்தைப் புரிந்து கொண்டதாலேயே இது சாத்தியமானது. இதனால் இப்போது பல விதவைகளின் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு சமூகத்தில் முதன்மையான இடத்திலும் நோக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

முன்பெல்லாம் விதவைகள் என்றால் அவர்களை மங்கள நிகழ்வுகளில் ஒதுக்கி வைப்பதே எமது பகுதியில் வழக்கமாக இருந்தது. ஆனால் இன்று தமது பிள்ளை களின் சுபகாரியங் களை விதவைகளே முன்னால் நின்று செய்யுமளவிற்கு ஒருபெரிய சமூக மாற்றத்தையும் எனது தலை மையிலான 'தாரகா' நிறுவனம் ஏற்படுத் தியிருப்பதை எண்ணும்போது உண் மையிலேயே பெருமையாகத்தான் உள்ளது. நான் 'தாரகா' வைத் தொடங்கிய போது,

**சந்திப்பும் படங்களும்: ஓளண்யன், கவிநேசன், காந்தன்**

இத்துணைதூரம் சாதிக்க முடியும் என்று எண்ணவில்லை. ஆனால் படிப்படியாக எதனையும் சாதிக்கும் மனோதைரியம் எமக்கு வாய்த்துள்ளது.

அரிசிமா, ஊறுகாய், இறால், மீன் முதலான பலபொருள்களை பதனிட்டு, பைகளில் அடைத்து விற்பனை செய்தோம். இதில் வரும் இலாபத்தில் எமது சங்கத்திற்கு ஒருபகுதியும், மிகுதி விதவைகளுக்கும் பகிரப்பட்டது. அவர்கள் தமது சேமிப்புக்காக அதனைப் பயன்படுத்தினர். வெறுமனே கூடிக் கதைப்பது மட்டுமல் லாது இவ்வாறான ஆக்க பூர்வ மான செயற் பாடு களுமே எமது வெற்றிக்கு காரணிக்ளாக அமைந்தன.

இத்தகைய சமூகமாற் றத்தை உண்டு பண்ணும் செயற்பாடு களில் நான் ஈடு பட்டதை அறிந்து அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம் உலக அமைதிக்காக வழங்கப்படும் 'நோபல்' பரிசிற்காக இலங்கையில் இருந்து எனது பெயரையும் சிபார்சு செய் தது. இது எனது சேவைகளுக்கு அளிக்கப் பட்ட கௌரவமாகவே எண்ணுகின்றேன்.

என்னைப்போல் இளம்வயதிலேயே விதவையாகிப்போன பெண்களால் எதனையும் சாதிக்க முடியும் என்பதற்கு நான் நல்லதொரு முன்னுதாரணமாக இருப்பதிலும் பெருமகிழ்வு எய்துகிறேன். இன்னும் போதிய நிதி உதவியும், பொருளுதவியும் (கணனி போன்றன) கிடைத்தால் தாரகா நிறுவனத்தின் பணிகள் விரிவடையும்.

**நவயோகராஜா ரஞ்சித் சாந்தினி ( வயது-42 மானிப்பாய்)**



எனக்கு சிறுவயதிலிருந்தே எல்லா விதமான வாகனங்களையும் ஓட்டுவது பிடிக்கும். தற்போது என்னுடைய குடும்பத்தில் பொருளாதார நிலை பின்தங்கியுள்ளதால் நான் ஒரு வேலை தேடவேண்டிய நிர்ப்பந்தம். இதற்காக மகளிர் அபிவிருத்தி நிலையத்தை நான் அணுகியபோது அவர்கள் தமக்கு ஒரு ஓட்டோ சாரதிதான் தேவை என்றார்கள். எனவே எனக்குத் தெரிந்த ஒருவரை ஓட்டோ ஓட்டிப் பழக்கிவிடுமாறு வேண்டினேன். அவரும் சம்மதித்தார். அவருக்குரிய சம்பளததை மகளிர் அபிவிருத்தி நிலையம் பொறுப்பேற்றது. நான் ஒரே நாளிலேயே ஓட்டோவைச் சரிவரச் செலுத்துவதற்குக் கற்றுக் கொண்டேன். அதன் பின்னர் ஓட்டோவை நான் அலுவலகத் தேவைக்காகப் பயன் படுத்தியபோது சில சிக்கல்களை எதிர் கொள்ள நேர்ந்தது. குறிப்பாக சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாததால் தொடர்ந்தும் ஓட்டோவை நான் ஓட்ட முடியாத நிலை தோன்றியது. எனவே தற்போது ஓட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் முயற்சி யில் ஈடுபட்டுள்ளேன். அது கிடைத்ததும் என்னுடைய வருமானத்துக்காக ஓட்டோவை ஓட்ட உள்ளேன். மற்றவர்கள் நான் ஓட்டோவை ஓட்டும்போது ஆச்சரியமாகப் பார்ப்பார்கள். எனக்கு அது ஒரு சாதனையை நிகழ்த்திய சந்தோசத்தைத் தரும். ********************

யாழ்ப்பாணத்தில் CIMA
வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன.
தொடர்புகளுக்கு:
CIMA இலங்கைப்பிரிவு
0112503880
MCS JAFFNA
021 222 6373
Jaffna College, Vaddukoddai.
021 222 3960
மேலதிக விபரங்களுக்கு 15/03/2009 ஞாயிறு உதயன் பத்திரிகையைப் பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ரியூட்டரி'களை மட்டும் நம்பி பாடசாலைக் கல்வி கை நழுவுகிறதா?

கடந்த காலங்களில் நகர்ப்புறத்தில் பிரபல பாடசாலை ஒன்றில் சாதாரண தரத்தில் அனைத்து மாணவர்களும் சித்தியடைந்ததற்காகப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாகப் பாராட்டி யாழ்ப்பாணத்துப் புலமையாளர்கள் ஆய்வுகள் எழுதினர். ஆனால் இம்முறை அதே பாடசாலைகளில் உயர்தரத்தில் விஞ்ஞான பாடங்களில் ஒட்டுமொத்தமாக மாணவர்கள் மண் கௌவ்விய போது எவரும் ஆய்வறிக்கை வடிக்கவில்லை. மாறாக நகர தேசிய பாடசாலையொன்றில் நடந்த பெற்றோர்களிற்கான கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றிய யாழ்ப்பாணத்து மூத்த முக்கிய கல்வியியலாளர் ஒருவர் தமது உரையில் 'நகர்ப்பகுதிப் பாடசாலை மாணவர்கள் விஞ்ஞான பாடங்களைத் தேர்வுசெய்து தகுதியற்றவர்கள் போதிக்கும் 'ரியூசனை'(தனியார் கல்வி நிறுவனங்களை) நம்பி மோசம் போய்விட்டதாகக் குறிப்பிட்டதுடன், கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் கலைத்துறையைத் தெரிவுசெய்து 3ஏ பெற்றமையைச் சுட்டிக்காட்டி நடந்த தவறுக்கு முழுக்க முழுக்க மாணவர்களும் அவர்களை வழி நடத்திய பெற்றோருமே காரணம் என்ற சாரப்படக் குறிப்பிட்டார்.

மேற்படி கருத்தில் இயல்பாகவே எமக்கு எழக்கூடிய யதார்த்த பூர்வமான வினாக்களை எடுத்து ஆராய்வோம். அவ்வினாக்களிற்கு விடை காணும்போது எம் மாணவர்களின் மீட்சிக்குரிய வழிகளும் பிறக்க நேரிடலாம்.

மேற்படி மூத்த கல்வியியலாளர் மட்டுமன்றி பிரதம விருந்தினர் தரத்திற்கு வரும் அனைத்துப் பிரமுகர்களும் தமது உரையில் பத்திரிகைகளில் மறுநாள் இரட்டை நிரல் செய்திக்கு ஏற்றவாறு சுயகற்றலையும் அந்தக்கால மட்டுப்படுத்தப்பட்ட போட்டி நிலையில் தமது வரையறுத்த தேடலிற்குரிய கற்றல் முறையையும் எடுத்து விடுவது வழமையாகும். ஆனால் தமது பிள்ளைகள் பாடத்திற்கு ஒரு 'ரியூட்டரி' சென்று பட்டம் பெற்றதை மறந்தோ அல்லது மறைத்தோ பேசுவர்.

சரி விடயத்திற்கு வருவோம். முதலாவதாக இவ்வருடம் விஞ்ஞான பாடங்களைத் தெரிவு செய்த மாணவர்கள் அனைவரும் தனியார் கல்வி நிலையங்களை மட்டும் நம்பி பாடசாலைக் கல்வியைக் கைவிட்டிருந்தனரா? தனியார் கல்விக்கூடங்கள் சரியாகப் போதிக்கவில்லை. அங்கே கற்பிப்பவர்கள் தகுதியற்றவர்கள் எனக் கூறுகிறார்கள் சிலர். அவ்வாறாயின் பாடசாலை இம்மாணவர்களிற்கு உரிய விதத்தில் உதவுகின்றனவா? தகுதியானவர்கள் என பட்டங்களும், அதன் பின்னரான பட்டங்களும், பயிற்சிகளும் பெற்ற பாடசாலை ஆசிரியர்களாழ் இம்மாணவர்களுக்கு ஒரு பாடத்தில் தானும் சாதாரண சித்தியைத்தானும் பெற்றுக் கொடுக்க முடியாமல் போனது ஏன்? கலைத்துறையைத் தெரிவு செய்த மாணவர்கள் அனைவரும் தனியார் கல்வி நிலையம் போகாமலா 3ஏ பெற்றனர்.

கலைத்துறையில் முழுச்சித்தி பெற்றவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி கானல்நீராகவே காணப்படுகின்றதல்லவா? எனவே அனைவரும் கலைத்துறைத் தெரிவு என்பது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதா? குறிப்பிட்ட தேசிய பாடசாலையொன்றில் பெருந்தொகையூானோர் ஒரு முறையும் இல்லாமல் இம்முறை 3'எவ்' பெற்றுள்ளனர்.

இவர்கள் எல்லோரும் இக்குறைந்த புள்ளி மட்டத்தில் உள்ளமையை முன்னரே ஏன் அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களால் அறிய முடியாமல் போனது?

காரணங்களை ஆய்ந்தால் புலமைப் பரிசிலில் வடித்தெடுத்து ஜி.சீ.ஈ சாதாரண தரத்திலும் ஒரே தரத்தில் பல திறமைச்சித்திகள் பெற்ற இம்மாணவர்கள் சரியான முறையில் வழிநடத்தப் பட்டிருந்தால் நல்ல பெறுபேற்றையே தந்திருப்பர். பாடசாலைகளும் தாமும் முழுப் பொறுப்பெடுத்து உழைக்க வேண்டும். வெறுமனே தவணைப் பரீட்சைகளை மட்டும் நம்பியிராமல் ஆசிரியர்கள் உள்ளகப் பரீட்சைகளை நடத்தி மாணவர்களின் நிலைகளை அவர்களிற்கும், பெற்றோருக்கும் உணர்த்தல் வேண்டும். உயர்தர மாணவர்களை புற செயற்பாடுகளில் அளவுக்கதிகமான ஈடுபாடு காட்டுவதை குறைக்க வேண்டும். பாடசாலையில் மதபீட போதனைகளிற்காக கற்றல் நேரங்களைச் செலவழித்தலைத் தவிர்க்க வேண்டும்.

இவையே உண்மையாக எதிர்காலத்தில் இந்தச் சரிவை சரிசெய்யக் கூடிய வழிவகைகள் என்பது வெளிப்படையாகும்.

சில பெற்றோர்களினதும் மாணவர்களினதும் கருத்துப்படி விஞ்ஞானத்துறை சார்ந்த மூத்த அனுபவமிக்க ஆசிரியர்கள்

**சத்தியன்**

கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இல்லாதிருந்தமையும் இதற்குப் பிரதான காரணம் என்கின்றனர்.

எது எப்படியிருப்பினும் தனி ஒரு நிறுவனத்தையோ, ஆசிரியர்களையோ நம்பியிராது பாடசாலைகளில் மாணவர்கள் நம்பிக்கை வைத்தலும், பாடசாலைகள் தம் பங்குணர்ந்து பொறுப்புணர்வோடு போதித்தலும் மட்டுமே மாணவர்களின் இத்தகைய வீழ்ச்சிகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும். ★

## இதுவும் ஒரு கலாசாரமா?

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று வடமராட்சியில் பிரசித்திபெற்ற ஆலயமான வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலுக்கு வழமைபோலச் சென்றேன். வழக்கத்திற்கு மாறாக அன்று ஆலய சூழலில் இளைஞர் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது. ஆலயத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒரு சில மாணவர்கள் தாக்கப்படுவதையும் நேரிற் கண்டேன். இது என்ன தெரியுமா? யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வடமராட்சி மாணவர்களின் அடாவடித்தனமான செயல். அங்கே மாணவர்கள் ராக்கிங் [பகிடிவதை]க்கு உள்ளாக்கப்பட்டுக்கொண்டிருந்தார்கள். வடமராட்சிப் பகுதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான புகுமுக மாணவர்கள், தமது சிரேஷ்ட மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் தரிசனத்தையும், அருட்கடாட்சத்தையும் பெறவேண்டும் என்பது ஒரு எழுதப்படாத விதியாகக் காலங்காலமாக நடந்து வருகின்றது.

தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக இந்த நடைமுறையைப் புகுமுக மாணவர்களும் சிரமேற்கொண்டு வருகின்றனர். எனினும் இந்த வருடம் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான சில புகுமுக மாணவர்கள் இந்த நடைமுறையின்படி சிரேஷ்ட மாணவர்களை அவர்களின் வீடுகளுக்குச் சென்று சிரம் தாழ்த்தவில்லை.

**கோணல் கோலங்கள்**

இதனால் தன்மானச் சிங்கங்களாய் சிலிர்த்தெழுந்த சிரேஷ்ட மாணவர்கள் தம்மை வந்து சந்திக்காமல் புறக் கணித்தவர்களுக்குத் தக்க பாடம் புகட்டக் காத்திருந்தனர். இதற்கு ஏற்றாற்போல் பெப்ரவரி 22ஆம் திகதி வடமராட்சிப் பகுதியினைச் சேர்ந்த சிரேஷ்ட, புகுமுக மாண வர்கள் இணைந்து செய்த வல்லிபுர ஆழ்வார் பொங்கல் அமைந்தது. இந்த வல்லிபுர ஆழ்வார் பொங்கலுடன், புகுமுக மாணவர்கள் மீதான பகிடிவதைகள் வடமராட்சிப் பகுதியில் ''இனிதே நிறைவுறுவதும்'' குறிப்பிடத்தக்கது.

இந்தப் பொங்கலுக்கு வந்த சில மாணவர்களே - சிரேஷ்ட மாணவர்களைச் சென்று சந்திக்காதவர்கள். சிரேஷ்ட மாணவர்களின் 'கவனிப்புக்கு' ஆளாகியுள்ளனர். ஆலயச் சூழலில் என்ன நடைபெறுகின்றது என்பதை நிர்வாகத்தினர் கவனிப்பதில்லையா?

எமது மாணவர்களே! ஏன் இத்தகைய கலாசாரத்தைப் பின்பற்றுகின்றீர்கள். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றான். வன்னியில் எமது உறவுகள் இறந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்காகப் போராட்டம் நடத்தும் நீங்கள் ஏன் இங்கே வசிக்கும் தமிழ் மாணவர்களாகிய உங்களது உறவுகளைப் பகிடிவதை என்ற பெயரில் சித்திரவதை செய்கின்றீர்கள். இன்று ஒவ்வொரு தமிழ் மாணவனும் என்ன நிலையில் இருக்கின்றான் என்பதைக் சிறிதுகூட உணராத நீங்கள் பல்கலைக்கழக மாணவர்களா? ஏன் தமிழனைத் தமிழன் சித்திரவதைக்குட்படுத்தி அதில் இன்பத்தை அனுபவிக்கின்றீர்கள். இந்த விடயத்தை வாசித்த பின்பாவது மாணவனாக அதுவும் ஒரு தமிழனாக நிமிர்ந்து நடப்பீர்களா?

- நவேந்தன்.

## யாழ்.மக்களுக்கு ஆபத்தில் உதவுவதற்காக வெள்ளையர் உருவாக்கிய அமைப்பு

**09.03.1841**

**Friend in need society** ஆரம்பிக்கப்பட்டது.

Friend in need society பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை செய்வதற்கென யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வெள்ளையர்களால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு. இதனைத் தமிழில் ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழகம் என மொழி பெயர்த்துள்ளனர். யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையை உருவாக்கியது இந்தக் கழகமே.

**யாழ்.ஆஸ்பத்திரி உருவாக காரணமானதும் இந்த அமைப்பே**

09.03.1841ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டட வளாகத்தில் ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. யாழ்.மத்திய கல்லூரி ஸ்தாபகரும் ஆரம்ப கால அதிபருமான பேர்சிவல் பாதிரியார், யாழ்ப்பாண நூல் நிலைய ஸ்தாபகரும் நீதிமன்றச் செயலாளருமான எவ்.சி.ஜினீனியர் (F.C.Gneenier) ஆகியோர் இக்கழகத்தின் அவசியம் பற்றி எடுத்துரைத்தனர்.

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

பல உள்ளூர் வாசிகளும் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டனர். அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தம் எட்டு ஸ்ரேலிங் பவுண் சந்தாவாக அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அந்தக் காலப் பெறுமதியில் எண்பது ரூபா. ஆபத்தில் உதவும் நண்பர்கள் கழகம் யாழ்ப்பாண மக்களுக்குப் பல அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளது.

- தாண்டவன்

## தவக்காலச் சிந்தனை



## ஆண்டவரின் குரலுக்கு செவி கொடுப்பவன் ஆசீரைப் பெற்றுக் கொள்கிறான்

இறை இரக்கத்தின் காலமாக அமையும் இத்தவக்காலம் புண்ணிய வாழ்வை நோக்கிய பயணத்தில் எமது ஆன்மீகத் தேடலை ஆழப்படுத்தும் காலமாகவும் விளங்குகின்றது. தமது ஏகமகனையே உலகின் குற்ற நீக்கப் பலியாக அனுப்பிய தந்தையாம் இறைவன். இந்நாளில், எமக்கு விடுக்கும் செய்தியாக; ''இவருக்குச் செவிசாயுங்கள்'' என்ற அழைப்பினை விடுக்கின்றார். இன்றைய சூழ்நிலையில் எம்மைச் சூழ்ந்து பல்வேறுபட்ட குரலொலிகள் எதிரொலித்த வண்ணமே இருக்கின்றன. அராஜகக் குரலொலி, அடக்கியாளும் குரலொலி, அதிரும் போர்க்குரலொலி, அநாதையின் குரலொலி, அபயக் குரலொலி, ஆண்டவன் குரலொலி இவ்வாறு ஒலிக்கும் குரல்களோ இன்னும் அதிகம்.

இவ்வேளையில் தான் தவம் புரியும் தகுந்த காலத்தில் வாழும் நாம் எம்மில் உள்வாங்கவேண்டிய குரலொலி எதுவென்று சற்றுச் சிந்திப்போம். உள்ளத்தின் ஆழ்நிலைக்குச் சென்று எம்மையே பின்னோக்கிப் பார்ப்போம். 'உன்னை அறிந்தால்; நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்? ஆம்! இந்தப் பாடல் வரியும் எம்மையே நாம் ஆழமாக அறிந்து, எத்தகைய குரலுக்கு நாம் செவிகொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம் என்பதை உணர்த்துகின்றது. ஆதிக்க நிலைகளால் எழும் அநீதத்தின் குரலுக்காக? அன்பின் தன்மையால் எழும் ஆண்டவன் குரலுக்காக? நாம் செவிகொடுக்கின்றோம்? பலரது வாழ்வில் அநீதத்தின் நிலை இலகுவானதாகவும் அன்பின் தன்மை கடினமானதாகவும் தோன்றுகின்றது. அன்பின் குரலோசைக்கு உட்படும்போது எம்மையே உடைத்து, நொருக்கி, பகிர்ந்து, விட்டுக்கொடுத்து, உதவிபுரிந்து, அர்ப்பணிப்பது மிகவும் கடினம். ஆனால் அங்குதான் இறைகுரலை நாம் உணரமுடியும், செவிசாய்க்கமுடியும். எனவே இம்மனமாற்றக் காலம் எம்மிலே ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் இக்கொடும் போர்ச்சூழலில் எமக்கு அண்மையில் ஒலிக்கும் அபயக்குரல்கள், அங்கங்களை இழந்து உதவிக்காக ஓலமிடும் குரல்கள், ஆறுதலுக்காக ஏங்கும் குரல்கள், அமைதி வாழ்விற்காக முழக்கமிடும் குரல்கள், விடுதலைக்காக வீரிட்டெழும் குரல்களே. அன்பின் தன்மை கொண்ட ஆண்டவன் குரல் என்பதை உணர்ந்து இத்தகையோர் மட்டில் சிறிதளவேனும் அக்கறை கொண்டு எம் வாழ்வைத் துன்புறும் சகோதரருக்காக அர்ப்பணித்து இறையாசீரைப் பெறுவோம்.

எஸ்.எம்.வுலோறன்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய லோக்சபா தேர்தலுக்கான திகதிகள் இவ்வாரம் அறிவிக்கப்பட்டன. ஏப்ரல் 16 முதல் மே 13 வரை 5 கட்டங்களாக தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதற்கு முன்னரே தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. இதில் 3 ஆவது அணி ஒன்று அமையும் என்ற ஹேஷ்யங்கள்

அணியைப்பற்றி பேசுவதை விட்டபாடில்லை.

இந்த முறை தேர்தல்களில் கம்யூனிஸ்ட் கட்சிகளை உள்ளடக்கி மூன்றாவது அணி அமையும் என தேவகவுடா கூறியுள்ளார். குறிப்பாக பராதிய ஜனதாவுக்கு எதிரான முஸ்லிம்

நரசிம்மராவுக்கு அடுத்து பிரதமராகும் தகுதி உடையவராக இருந்த சரத் பவார், சோனியா காந்தியின் திடீர் அரசியல் பிரவேசத்தால் கதிகலங்கிப் போனார்.

மிகவும் தகுதியானவரே. இது பலராலும் ஏற்கப்பட்ட விஷயம். கம்யூனிஸ்ட்களும் அவரை ஏற்கத்

# இந்திய தேர்தலில் 3ஆவது அணி!
# பிரதமராவாரா சரத் பவார்?


சரத் பவார்


பலமாக அடிப்படத்தொடங்கியுள்ளன. இந்த 3 ஆவது அணி என்ற கோஷம் இந்திய அரசியலில் பொய்த்துப்போன ஒன்று என கருதப்படுகிறது. எனினும், இந்தக் கோஷம் அவ்வப்போது தலைகாட்டாமல் விட்டதுமில்லை. இதற்கு முக்கிய காரணம் இருபிரதான தேசியகட்சிகளான காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதாவை அடுத்து பல பிராந்திய கட்சிகளும் இந்திய அரசியலில் வலுவாக காலூன்றி இருப்பதே. 90 களுக்குப் பின் இந்த பிராந்திய கட்சிகளின் தொல்லை தேசிய கட்சிகளுக்கு தாங்கொணாத் தொல்லையாக உருவெடுத்துள்ளது. தேசிய கட்சிகள் அந்தஸ்தை பிராந்திய மக்களின் அரசியல் மற்றும் சமூக அபிலாஷைகளை தேசிய மட்டத்தில் பிரதிபலிக்காததே இதற்கு ஏதுவாக அமைந்தது. பீஹாரில் ராஷ்ரிய ஜனதா தளம், ஐக்கிய ஜனதா தளம், உத்தரப்பிரதேசத்தில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி, முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடி கட்சி, தமிழகத்தில் பா.ம.க., ம.தி.மு.க., தே.மு.தி.க., மஹாரஷ்டிராவில் சரத்பவாரின் தேசிய வாத காங்கிரஸ் சிவசேனா ஆந்திராவில் தெலுங்கானா ராஷ்ரிய சமிதி, நடிகர் சிரஞ்சீவியின் பிராஜா ராஜியம், கஷ்மீரில் மக்கள் ஜனநாயக கட்சி என இவ்வாறு புதிய பிராந்திய கட்சிகளை பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். இவற்றில் சில பாரதிய ஜனதாவுடனும் வேறுசில காங்கிரஸுடனும் கூட்டு வைத்துள்ளன. இன்னும் சில இரண்டு பக்கமும் சாராது தனிவழி செல்லும் நிர்ப்பந்தத்தில் உள்ளன. இவ்வாறான தனிவழிக் கட்சிகள் அவ்வப்போது 3 ஆவது அணிக்கான தேவையை உணரத் தலைப்பட்டுள்ளன. அந்த வகையில் முன்னாள் பிரதமர் தேவகவுடாவின் கட்சி 3ஆவது அணி குறித்த முன்னறிவிப்பை தற்போது வெளியிட்டுள்ளது. இருப்பினும் இவ்வாறான ஒரு 3 ஆவது அணியின் பிரதான பிரதிகூலம் என்னவெனில், அவ்வணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்ற சர்ச்சையே ஆகும். இவ்வணியில் தேவகவுடா, ஜெயலலிதா, மாயாவதி என பிரதமர் பதவிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் உள்ளனர். இதனால் திசைக்கொன்றாக இழுபட்டு இக்கட்சிகள் மூக்குடைபடுவதே வரலாறு ஆகும். இருந்தும் இத்தலைவர்கள் 3ஆவது

மற்றும் கிறிஸ்தவ வாக்குகளை ஒன்று திரட்டும் முயற்சி வெற்றியடைந் தால் 3ஆவது அணி கணிசமான பெரும்பான் மையைப் பெறலாம். காங்கிரஸ் கட்சி 5 ஆண்டுகள் பதவியில் இருந்து விட்டதால் அக்கட்சி மீது வெறுப்படைந் துள்ள முஸ் லிம்களும் கிறிஸ்தவர் களும் யாருக்கு வாக்களிப்ப தென்று தெரி யாமல் உள்ள னர். இவர்கள் பாரதிய ஜனதாவுக்கு வாக்களிக்கமாட்டார்கள். எனவே, இந்த வாக்குகளை 3ஆவது அணிக்கு பெறுவது இலகு என தேவகவுடா திட்டமிடுவதாக தெரிகிறது. இது சரியான திசையிலான உத்தியே ஆகும். ஆனால், பிரதமர் யார் என்பதில்தான் சிக்கல் உள்ளது. 3ஆவது அணியில் உள்ள ஒவ்வொரு கட்சியின் தலைவரும் தானே பிரதமர் என மனப்பால் குடிக்கும் நிலைதான் இந்த 3ஆவது அணியின் சாபக்கேடாகும். உதாரணமாக ஜெயலலிதா பிரதமராவதற்கு மட்டுமன்றி அதற்கு மேல் ஏதாவது பதவி இருந்தால் அதற்கும் தாம் தகுதியானவரே என நினைத்துக் கொண்டிருக்கிறார். ஒருமுறை இவ்வாறு 3ஆவது அணிமூலம் பிரதமராகிய அனுபவமுள்ள தேவகவுடாவும் மீண்டும் பிரதமர் கதிரையில் ஏறிவிடத் தயாரிப்புகள் செய்வது தெரிகிறது. மாயாவதி என்பவர் உண்மையில் தகுதியான ஒருவராகும். எனவே, அவரையும் தவிர்த்துவிடமுடியாது.

- எஸ்.சுரேந்திரஜித்-

இந்தப்போட்டியில் இன்னொரு முக்கியமான நபரும் சேரக்கூடும். அவர்தான் சரத் பவார் ஆகும். மகாராஷ்டிர மாநிலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்ற பவார் பிரதமர் பதவிக்கு சகல தகுதியும் படைத்தவர் [illegible] பரமவைரிகள் [illegible] காங்கரஸ் கட்சியில் உண்மையில்

இதனால் சோனியா வெளிநாட்டவர் என்ற கோஷத்தின் மூலம் காங்கிரஸை உடைக்க அவர் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. அரசியலில் அவர் கண்ட ஒரே ஒரு தோல்வி இதுவாகும். இப்போது மீண்டும் சோனியா காந்தியுடன் சமரசம் செய்துகொண்டு மத்திய அரசில் பங்காளியாக சரத் பவார் விளங்கினாலும் அவரது தனிக்கட்சி காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெயியேற எந்நேரமும் தயாராகவே உள்ளது. மகாராஷ்டிர மாநிலத்திலும் சரத் பவார் கட்சியும் காங்கிரஸும் கூட்டணி ஆட்சியையே நடத்துகின்றன. எனினும், எதிர்வரும் லோக்சபா தேர்தலில் பவாருடன் கூட்டைத் தொடர சோனியா விரும்பவில்லை. இந்த கூட்டணியில் பவார் கட்சிக்கே அதிக லாபம் என காங்கிரஸ் தலைமை கருதுகிறது. இதனால் சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி மகாராஷ்டிராவில் தனித்தே போட்டியிடக் கூடும். அம்மாநிலத்தின் 48 இடங்களில் 10 இடங்களுக்குமேல் பவார் கட்சியில் வெல்லப்பட வாய்ப்புண்டு. இதனால் தேர்தலுக்குப்பிறகு காங்கிரஸுக்கோ பாரதிய ஜனதாவுக்கோ ஆட்சியமைக்க பெரும்பான்மை போதாவிட்டால் பவார் முக்கியத்துவம் பெறுவார். இவ்விரு கட்சிகளில் ஒன்றுக்கு ஆட்சியமைக்க பவார் உதவலாம் மற்றொரு சந்தர்ப்பமாக 3ஆவது அணி ஆட்சியமைக்கும் சாதகமும் உண்டாகலாம். அப்போது பவார் பிதமராவதற்கு உச்சகட்ட வாய்ப்புகள் உள்ளன. வயதான பவார் பிரதமராவதற்கு உள்ள கடைசி வாய்ப்பு இதுவென கருதப்படுகிறது. அவருக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டு மென்பதை இந்தியாவில் சகல மட்டத்தினரும் ஏற்றுக்கொள்கின்றனர். உதாரணமாக பாரதிய ஜனதா கூட்டணியில் உள்ள மகாராஷ்டிர கட்சியான சிவசேன்ாக்கட்சி கூட பவாருக்கு மறைமுக ஆதரவு தெரிவித்துள்ளது. அதாவது, பாரதிய ஜனதாவை விரோதித்துக்கொண்டு பவார் பிரதமராக சிவசேனா ஆதரவளிக்கவும் கூடும். சிவசேனா கட்சி


தேவகவுடா


ஜெயலலிதா


மாயாவதி

மஹாராஷ்டிராவின் பூர்வீக குடிகளான மராட்டியர்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற கட்சி பவாரின் கட்சியும் இவ்வாறான மராட்டிய கட்சியே. எனவே, இந்தியாவில் முதல் மராட்டிய பிரதம மந்திரி உருவாக தாம் தடையாக மாட்டோம் என ஏற்கனவே சிவசேனா சூசகமாகத் தெரிவித்தும் உள்ளது. அதுமட்டுமன்றி தற்போதைய ஜனாதிபதி பிரதீபா பட்டேல் தேர்ந்தெடுக்கப்படவும் சிவசேனா உதவியது. அதாவது, பாரதிய ஜனதாவின் கூட்டணியில் இருந்தவாறே மராட்டியர் என்ற ஒரே காரணத்தால் பிரதீபா பட்டேலை சிவசேனா ஆதரித்தது. இவ்வாறு பவாரையும் ஆதரித்தால் அவர் பிரதமராவது நிச்சயம். தேவகவுடா, ஜெயலலிதா, மாயாவதி போன்ற ஏனைய [illegible]தலைவர்களைக் காட்டிலும் பவார் பிரதமர் நாற்காலியை அலங்கரிக்க

தயங்கமாட்டார்கள். சரத் பவாரின் நிர்வாகத் திறமை உலக றிந்ததாகும். 3 வருடங் களுக்கு முன் வங்குரோத்து நிலையில் இருந்த இந்திய கிரிக்கெட் சபையை சரத் பவார் பொறுப்பேற்றார். இன்று உலக கிரிக்கெட் கவுன்சிலை ஆட்டிப்படைக்கு மளவுக்கு இந்திய கிரிக்கெட் சபை வான ளாவ வளர்ந்துள்ளது. பவாரின் நிர்வாகமே இதன் காரணம் என்பது தெளிவாகும். 2011இல் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) இனது தலைவராகவும் பவார் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவரது நிர்வாகத் திறமையை வியந்தே மேலைநாடு களின் கிரிக் கெட் நிர்வாகிகள் இந்த மகுடத்தை அவருக்குச் சூடி வைத்துள்ளனர். ஆக இவரை பிரதமர் கதிரையில் இருத்தி அழகு பார்க்க பலரும் விரும்புவது நியாயமே.

எனினும் 3ஆவது அணியில் பவார் இன்னும் சேரவில்லை. அவ்வாறு சேர்ந்தாலும் தேர்தலுக்குமுன் 3ஆவது அணியின் பிரதமராக அறிவிக்கப்படமாட்டார் எனத் தெரிகிறது. ஆனால், இவ்வாறு அறிவித்தால் 3ஆவது அணிக்கு வாக்குகள் பல மடங்கு உயரும் என கணிப்புகள் கூறுகின்றன. 3ஆவது அணி பிரதமர் வேட்பாளர் இன்றியே போட்டியிடும் என தேவகவுடா கூறுகிறார். அத்துடன் இம்முயற்சி இன்னும் உருப்பெறவில்லை. ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம், தமிழகத்தில் அதிமுக, கர்நாடகாவில் தேவகவுடாவின் ஜனதா தளம், மேற்குவங்கத்திலும் கேரளாவிலும் கம்யூனிஸ்ட் கட்சி என கட்சிகள் ஒருமித்து இந்த 3ஆவது அணி அமைக்கப்படலாம். ஒருவேளை தேர்தலுக்குமுன்பு இவ்வணி அமையாவிட்டாலும் தேர்தலின் பின் காங்கிரஸுக்கோ, பி.ஜே.பிக்கோ பெரும்பான்மை கிடையாவிட்டால் 3ஆவது அணி அதன்பிறகு உருவாகலாம். இவ்வாறுதான் 1996இல் தேவகவுடா பிரதமரானார் என்பது நினைவுகூரத்தக்கது.

3ஆவது அணியை எப்படியும் ஜெயலலிதா குழப்புவார் என்பது தெரிந் ததே. தேர்தலின்பின் திமுக அரசை கவிழ்க்க தனது எம்.பிக்கள் பலத்தை ஜெயலலிதா உச்சகட்டமாக பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஜெயலலிதா பிரதமராவதை 3ஆவது அணியின் எந்த கட்சியும் விரும்பாது.

அவரும் எந்த மார்க்கத்திலாவது திமுக ஆட்சியை கவிழ்க்கவே முயல்வார். இது ஏனைய கட்சிகளுக்கு ஒத்துவராத கொள்கையாகும். ஆனாலும் தேர்தலில் கரைசேர ஜெயலலிதாவின் ஒத்துழைப்பு அவசியமே. சரத் பவார் பிரதமராவதற்கு அம்மா ஒத்துழைக்கக் கூடும். சோனியா காந்தியை பழிதீர்க்கவேணும் அவர் இதைச் செய்வார் என்பது நிச்சயம். ஆனால், பிரதி உபகாரமாக திமுக ஆட்சியை கவிழ்க்க கோரினால் பிரதமர் சரத் பவாருக்கு வாஜ் பாய்க்கு ஏற்பட்ட சங்கடமே நேரிடும். ஒருவேளை சரத் பவார் பிரதமரானால் இந் திய ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இரு பெரும் பதவிகளையும் மராட்டியர்கள் இருவர் ஒருங்கே வகித்த பெருமை உண்டாகும். மராட்டிய அரசின் சத்ரபதி சிவாஜிக்கு அளிக்கும் கௌரவம் இதுவாகும் என சிவசேனா தலைவர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











மல்லாகம் மாவட்ட நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவனுக்கு மல்லாகம் மாவட்ட நீதி பதி ரி.ஜே.பிரபாகரன் தலைமையில் பிரியாவிடை நிகழ்வு நடத்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற நீதிபதி பொலிஸ் அணிவகுப்பு மரியாதையுடன் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, மல்லாகம் மாவட்ட நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் ஆகியோர் உரையாற்றுவதையும் அருகில் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி அ.பிறேம் சங்கர் அமர்ந்திருப்பதையும் அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம். யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உரையாற்றுவதையும் ஓய்வுபெற்ற நீதிபதிக்கான நினைவுப் பரிசிலை மல்லாகம் மாவட்ட நீதிபதி வழங்கிக் கௌரவிப்பதை கீழ்வரியில் உள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: நேசன்)

# கொழும்பு துறைமுகத்திலிருந்து புலிகளுக்கு சென்ற பொருள்கள் குறித்து விசாரிக்க நடவடிக்கை

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கடந்த காலங்களில் கொழும்புத் துறைமுகத்தின் சுங்கப் பகுதியினூடாக உலகின் அதி நவீன ஆயுதங்கள், அச்சக நவீன உப கரணங்கள், மற்றும் மிகவும் விலை மதிப்புள்ள தொலைத் தொடர்பு சாதனங்கள் விசேட கொள்கலன்கள் மூலம் புலிகளுக்குச் சென்றடைந்துள்ள தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பெரும் மோசடி எவ்வாறு நடைபெற்றது? இதன் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் யார்? என்பவற்றைக் கண்டறிய துரித விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு வெள்ளியன்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார். அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

2002 ஆம் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்றுள்ள இந்த மாபெரும் மோசடியின் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்ற விவரத்தை இன்னும் சில தினங்களில் அரசு வெளியிடும். கிழக்கில் கப்பம் கோரல், ஆள்கடத்தல் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதிருக்கின்றனர் என சில ஊடகங்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் சிலர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (சி)


## தவறிவிட்டது

இல.463, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய மார்க்கண்டு கைலாசபதி என்பவரது தே.அ.அ. (472254723V) மக்கள் வங்கி ஸ்ரான்லி றோட்டுக்கும் கன்னாதிட்டிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: சண்முகா நகைக்கடை
இல. 301/1, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

தொட்டிலடி, சங்கானை வைரமுத்து சிவபாலன் என்பவருடைய தே.அ.அ. (481434262V), D.L., J/P.I.C, Chair man meadiation Board I.C, மோட்டார் சயிக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ் என்பன 02.03.2009 அன்று மினி பஸ்ஸில் (Bus Route 788) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.259, K.K.S.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

## சன்ரெல் தொலைபேசி விற்பனைக்கு

எனது செந்தப் பாவனையில் உள்ள சன்ரெல் தொலைபேசி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
T.P. No:- 077 651590,
021 4590316

## வீடு வாடகைக்கு

யாழ்.நல்லூர், கோயில் வீதி ICRC சந்திக்கு அண்மையாக, வசதியான வீடு உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0715357514, 0718220474, 0112386699

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு.

ராஜீவ்
குளப்பிட்டி றோட்,
ஆனைக்கோட்டை.

## மணமகள்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1976, விசாகம் 4 ம் பாதம், கிரகபாவம் 20, உயரம் 5' 10'' கனடாவில் குடியுரிமையுடைய மணமகனுக்கு ஓரளவு படித்த அழகிய மணமகள் தேவை. தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்களும் தொடர்புகொள்ளலாம். மணமகன் பெற்றோர், சகோதரங்களுடன் கனடாவில் வசிக்கிறார். மிகவிரைவில் கொழும்பு வரவுள்ளார். மற்றும் 1972, விசாகம் 4 ஆம் பாதம், கிரக பாவம் 34 ,5 இல் செவ்வாய், 5' 10'' உயரமுடைய பிரபல தொழிலதிபருக்கு மணமகள் தேவை. உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது. உடனடித் தொடர்புகளுக்கு: தொ.பே: 0776184434, 0774047531. E-mail: vanimb@yahoo.com

## வீடு வாடகைக்கு

நாவலர் வீதியில் கோயில் வீதியை அண்டிய பகுதியில் 2000 சதுர அடிக்கு மேல் விஸ்தீரணமுள்ள, சகல வசதிகளுடன் வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. அரச அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு இல: 060 221 4181


# ஜெயலலிதாவின் உண்ணாவிரத அறிவிப்பு ஆறுதலளிக்கிறது; சிவாஜிலிங்கம் எம்.பி.

திருச்சி, மார்ச் 8

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா நாளை திங்கட்கிழமை உண்ணாவிரதம் நடத்தப்படும் அறிவித்துள்ளமை ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் உரிய நடவடிக்கை எடுக்காத மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் திருச்சி உழவர் சந்தையில் வியாழக்கிழமை இரவு பொதுக்கூட்டம் நடந்தது.


இந்தக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் தமிழர்களைக் காப்பற்ற வலியுறுத்தி அ.தி.மு.க. சார்பில் தமிழகத்தில் உண்ணாவிரதப்போராட்டம் நடத்தப்படும் என்று ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அவருடைய அறிவிப்பு ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது. இந்தப் போராட்டம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் திருப்பு முனையை ஏற்படுத்துவதாக அமையும்.

இதன்மூலமாக மத்திய, மாநில அரசுகளுக்கு நெருக்கடி ஏற்படும் - என்றார். (அ)


## சிவமயம்
## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சண்முகராசா இலங்கைநாதன்

அன்னை மடியில் 20-06-1945 | ஆண்டவன் அடியில் 06-02-2009

இலங்கை நாதனெனும் இணையிலாத் திருமகனார்
துலங்கு புகழ் வர்த்தகராய் தான் திகழ்ந்து - நலந்திகழும்
தைத் திங்கள் பூர்வபக்க துவாதசியாம் திதியதனில்
வையகத்தை விட்டு வானுலகு எய்தினார் விரைந்து.

எமது குடும்ப விளக்கின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

639/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர். (83319)

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும், யா/புத்தூர்
ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி அதிபருமாகிய
சி.மகேஸ்வரதாசன்
அவர்களின் அன்புத் தந்தை
கந்தையா
சின்னத்தம்பி
(இளைப்பாறிய ஆசிரியர்)
காலமாகியதையிட்டுத் துயரடைந்திருக்கும் உள்ளங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(சி/557421) கோப்பாய் கல்விக் கோட்ட அதிபர் சங்கம்.

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை வரதராஜா (பாபு)

[கிருஷ்ணா கபே உரிமையாளர், அச்சுவேலி வர்த்தக சங்க உப தலைவர்]



அச்சுவேலி இராஜவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை வரதராஜா 06.03.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் யோகலிங்கம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தமயந்தியின் அன்புக் கணவரும் பார்த்தீபன், லக்ஷ்மன், விதுஷன் (அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வரலட்சுமி (சந்திரா, 120, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்), ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற சிறீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வல்லிபுரம், நித்தியானந்தன், பங்கயச்செல்வி, கலைச்செல்வி, விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜ வீதி, அச்சுவேலி.
குடும்பத்தினர். (83322)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஆளப்பட வேண்டும்

சிறுகதை

இவன் எதிர்பார்த்துக் கொண்டு வந்தது போலவே எல்லாம் இருந்தது. வீட்டில் இவனுக்கு எவரும் முகம் கொடுப்பாரில்லை. வெளியே சென்று வீடு திரும்பி வருவதற்குச் சற்றுத் தாமதமானால், இந்தச் சொற்ப நேரப் பிரிவே இவர்களுக்கு நெஞ்சிற் கனக்கும். அதை இறக்கி விடுவது போல 'அப்போய்' என இதயத்துள் வந்து விழுந்து தோயும் குதூகல வரவேற்பு இன்று இவனுக்கில்லை. 'அப்பா' என்று ஒரு போதும் அழைத்தறிய மாட்டார்கள். அப்படி அழைப்பது இவர்களைப் பொறுத்தவரை அந்நியப்பட்டு நிற்பது போல ஓர் உணர்வு. எப்பொழுதும் 'அப்போய்'தான். அதில்தான் எத்தனை நெருக்கம்!

இவன் தலையைத் திருப்பி உள்ளே பார்க்கின்றான். சின்னவன்கள் இருவரும் வெளியில் இல்லை. பெரியவளும் அங்கில்லை. இவனுக்கு விளங்கிக் கொண்டு விடுகிறது. படித்து முடித்து பெருகும் சஞ்சிகை களைப் போட்டு வைப்பதற்கென்று சிமெந் தினால் ஒரு 'பிளேட்' அறைக்குள் கட்டி வைத்திருக்கின்றான். அது இப்பொழுது பாதுகாப்பு வலயம் ஆக்கப் பட்டுவிட்டது. தம்பிகள் இருவரையும் அணைத்து வைத்துக் கொண்டு பெரியவள் அங்குதான் இருப்பாள்.




மனையாளை அடுக்களைக்குள்ளே போய்த் தான் தேட வேண்டும். இரவு நேரத்து உணவு தயாரிப்பதில் இவள் மும்முரமாக ஈடுபட்டிருப்பாள்.

சின்னவள் விறாந்தைப் படியில் வந்து விசமத்துக்கு அமர்ந்திருக்கிறாள். இவளுக்குப் பின்னே அஞ்சி அஞ்சி நடுங்கிக் கொண்டு கிடக்கிறது ஜாம் போத்தல் விளக்கு. அதன் மங்கலான வெளிச்சம் மெள்ள மெள்ள ஒளியை இவள் முகத்தில் தடவித் தடவிப் போகிறது. கடுமையும் இறுக்கமும் உறைந்த முகத்துடன் இவள் மௌனித்துக் காத்திருக்கின்றாள். இது அப்பாவை எதிர்பார்க்கும் காத்திருப்பு.

இவனுக்குப் புரிந்து போகிறது. இன்று இவனோடு போர் தொடுக்கத் தயாராகிக் கொண்டிருக்கின்றாள். அதற்கான எத்தனங்கள் தான் இந்த மௌனமும் அலட்சியமும்.

இது ஒன்றும் இவனுக்குப் புதுமை இல்லை, முன்னரும் இவள் எச்சரித்திருக்கிறாள். ஒருசமயம் இவனுக்குச் சொல்லியும் இருக்கின்றாள். ''கேற் பூட்டிப் போடுவன்....நீங்கள் போய் அப்பாச்சி வீட்டிலே தான் படுக்க வேண்டிவரும்'' அப்படி ஒரு கண்டிப்பு. இவன் உள்ளம் மலர அப்பொழுது மெல்லச் சிரிக்கின்றாள்.

'அப்பாச்சி' என்றே இவளைச் செல்லமாக இவன் அழைப்பதுண்டு. சாயலில் இவள் இவன் அம்மா போல், அப்பாச்சி போல, அப்பாச்சிக்கு மனசு பூப்போல, அது மென்மையானது. வெள்ளை மனசு. வெளித் தோற்றத்தில் மாத்திரந்தான் இவளுக்கும் இந்த இறுக்கமெல்லாம், பிறர் இன்னல் கண்டு உள்ளம் நெகிழ்ந்து கரைந்து, கசிந்து போகின்றவள் இவள். 'அசல் அப்பா' என்று பெயரெடுத்தவள். அதில், இவளுக்கு மனசுக்குப் பிடிபடாத ஒரு பெருமை. இவள் மனசின் எதிர்பார்ப்பு என்ன என்பது இவனுக்குத் தெரியும். அப்பா இவள் சொல்லை மீறி நடக்கக் கூடாதென்று எண்ணுகின்றவள் இவள்.

இவளைக் கண்டும் கண்டுகொள்ளாதவன் போல உதட்டுக்குள் மெல்லச் சிரித்த வண்ணம், சயிக்கிளை வீட்டுச் சுவரில் சாய்த்து விட்டுக்கொண்டு உள்ளே நுழைவதற்குப் படியில் கால் எடுத்து வைக்கின்றான்.

பதற்றமான இந்த வேளையிலும் காலங் கடந்து வீட்டுக்கு வந்து நிற்கும் அப்பாவின் பணிவின்மை இவள் மனதில் சீற்றத்தை மூட்டுகின்றது.

''பெரியப்பா மூண்டுமுறை வந்து வந்து விசாரிச்சுப் போட்டுப் போகுது'' வார்த்தைகளில் வெக்கை அடிக்கிறது; முகம் திருப்பாமல் பேசுகின்றாள்.

ஓ......! இது புதிய முறையிலான ஓர் எச்சரிக்கை.

யார் சொல்லுக்கும் அடங்காமல் இருக்கலாம்; ஆனால் பெரியப்பாவுக்கு அடங்கித் தானே ஆக வேண்டும், இந்த அப்பா!

இவனுக்கு உணர முடிகின்றது. அண்ணா வந்து தேடிக்கொண்டு போயிருப்பாரென்று.

''பிள்ளை, அப்பா நிக்கிறானே?''

''இல்லைப் பெரியப்பா''

''அவனுக்கு நேரகாலந் தெரியாது..... எப்ப பாத்தாலும் இலக்கியமும் கூட்டமும்.....'' உள்ளூரச் சினந்துகொண்டு போயிருப்பார்.

சற்றுத் தாமதித்து மீண்டும் வந்திருப்பார். ''பிள்ளை அப்பா வந்திட்டானே?''

''இல்லைப் பெரியப்பா''

மறுபடியும்......மறுபடியும்.....அண்ணா தேடிக்கொண்டு இருப்பார்.

அண்ணா இவனைத் தேட வேண்டும். வேறு யார் தான் இவனை வந்து தேடப் போகின்றார்கள்! இவனல்லவா தனக்குக் கீழுள்ளவர்களைத் தேட வேண்டியவன். அண்ணா தேட வேண்டும்..... இன்றும்..... நாளையும்..... அதன் பிறகும்...... இவன் மனசுக்கு அது வேண்டும் போல மனசு தவிக்கிறது. அண்ணா 'அவன்' என்று சொல்ல வேண்டும். 'நிக்கிறானே' என்று கேட்க வேண்டும். நெஞ்சுக்கு நெருக்கமானவர்களின் ஆளுமை கொள்ளும் உள்ளத்துள் இருந்து இந்த 'அவன்' வந்து விழுகின்றபோது. இதயமெல்லாம் நிறைந்து போகிறது. 'அவன்', 'அவள்', 'நீ' எப்படி எல்லாம் இனிக்கின்றது! பூப்பூவா மலர்ந்து விழுவது போன்ற வார்த்தைகள். வார்த்தைகளுக்கு ஏது பொருள்? அது எங்கிருந்து எழுகின்றதோ, அந்த இடத்துக்கு உரியதல்லவா அதன் அர்த்தம்!

வியர்வையில் உடல் நனைந்து நசநசக்கிறது. உடைகளை மாற்றிக் கொண்டு சில்லென்று குளிர்ந்த நீரில் திளைத்தெழும்புவதில் என்ன சுகம்! என்ன இதம்! அண்ணா 'அவன்' என்று சுட்டும்போது ருசிப்பது போல, எங்கெல்லாம் இந்த மனசுக்கு வேண்டும் சுகங்கள் கொட்டிக் கிடக்கின்றன என்று ஒரு கணம் இவன் மனசு நினைவு கொள்ளுகின்றன.

மனைவி அடுக்களைக்குள் இருந்து வெளியே வருகின்றாள். இவள் அறிவாள் இவனுக்கு இப்பொழுது ஒரு தேநீர் தேவை. இவன் வீடுவந்து சேர்ந்தபோது வழமை போல, 'வந்தாச்சோ?' என்று இவளும் இன்று குரல் கொடுக்கவில்லை. இவளுக்குக் கால் நூற்றாண்டு காலம் இவனோடு வாழ்ந்து பெற்ற அனுபவம், இது ஒன்றும் இவளுக்குப் புதிசல்ல. (14 ஆம் பக்கம் பார்க்க....)



1960 களில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் பிரவேசித்து, இதுவரையில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் பல நாவல்களையும் படைத்துள்ள மூத்த எழுத்தாளர் ''தெணியான்''. இவரது இயற்பெயர் கந்தையா - நடேசு.

பொலிகண்டி, கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் வரிசையில் முக்கிய இடம் பிடித்தவர்: சிறந்த பேச்சாளர்.

இவரது முதல் சிறுகதை 'தவிப்பு', 1964 ஆம் ஆண்டில் 'விவேகி' யில் பிரசுரமாகியது.

விடிவை நோக்கி, கழுகுகள், மரக்கொக்கு, பொற்சிறையில் வாடும் புனிதர்கள், காத்திருப்பு என்பவை இவரது நாவல்களில் அதிகமாகப் பேசப் பட்டவையாகும்.

இவை தவிர கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் மற்றும் வானொலி நாடகங்கள் என்பவற்றையும் எழுதியுள்ளார்.

சொத்து, மாத்துவேட்டி என்ற பெயர்களில் இவரது சிறுகதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன.

இவரது 'மரக்கொக்கு' நாவலுக்கு 1994 ஆம் ஆண்டின் சிறந்த நாவலுக்கான சாகித்திய மண்டலப் பரிசும், வேறு பல பரிசுகளும் கிடைத்துள்ளன. இவரது ''நான் ஆளப்பட வேண்டும்'' என்ற சிறுகதை இவ்வார இலக்கியப் பொழில் பகுதியை அலங்கரிக்கிறது.

# ஒப்பற்ற ஆழமான அன்பின் வெளிப்பாடே காதல்; பண்டைத் தமிழரின் வாழ்வில் கனிந்து சிறந்தது

காதல் என்பது காதுக்கினிய சொல்; கருத்துக்கினிய பொருள். காதல் உண்டாயின் இவ்வுலகில் எல்லாம் உண்டு; காதல் இல்லையேல் ஒன்றும் இல்லை. ''காதல், காதல், காதல் - இன்றேல் சாதல், சாதல், சாதல் என்று பாடினார் பாரதியார். ஆயினும், அச்சொல்லை எல்லோரும் கூசாமல் பேசுவதில்லை. சின்னஞ் சிறியவர் காதில் அது விழலாகாதாம். கன்னியர் வாயில் அது வரலாகாதாம். இப்படி ஏன் அச்சொல் ஒதுக்கப்படுகின்றது? தமிழ்க் கவிகள் காதல் என்ற சொல்லை எடுத்தாளவில்லையா? நீதி நூல்களில் அச்சொல் வரவில்லையா? திருப்பாடல்களில் அது இடம் பெறவில்லையா? காவியங்களிலும், நீதி நூல்களிலும் திருப்பாசுரங்களிலும் பயின்ற அழகிய தமிழ்ச் சொல்லை ஏன் கூசிக் கூசிப் பேச வேண்டும்? தேவாரத்திலே அடியாரது காதல் பேசப்படுகின்றது.

''காதலாலே கருதும் தொண்டர்
காரணத்தர் ஆகி''

நின்ற சிவபெருமானைச் சுந்தரர் பாடுகின்றார். இன்னொரு பெரியார் - திருஞான சம்பந்தர் - இறைவன் திருநாமத்தை ஓதும் காதலடியார் பெருமையைக் கூறுகின்றார்.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே''

என்பது அவர் திருப்பாட்டு. இவ்வாறு தேவாரம் முதலிய தெய்வப் பாடல்களிற் பயின்ற காதல் என்ற சொல்லைக் கடிசொல்லாகக் கருதலாமோ?

காதல் என்ற சொல்லின் பொருள்தான் என்ன? அன்பு என்றாலும் காதல் என்றா லும் பொருள் ஒன்றே. பெற்றோர்க்குப் பிள்ளையிடம் உள்ள அன்பு காதல்தான். 'கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்' என்று கவிஞர் பாடவில்லையா? பெற்ற பிள்ளையைக் காதலன் என்று கூறுவதுண்டு. வாலியின் மைந்தனாகிய அங்கதனை 'வாலி காதலன்' என்று குறிக்கின் றார் கம்பர். இவ்வாறே நண்பனையும் காதலன் என்று கவியரசர் கூறுவர், கங்கைக் கரையிலே இராமனுடைய நண்பனாயினான் குகன்; அவன் அன்பிற்குக் கங்குகரையில்லை. அது கண்ட இராமன்,

''சீதையை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதலனாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணான்
யாதினும் இனிய நண்ப இருத்தி ஈண்டு எம்மொடு என்றான்''

எனவே பக்தியும் காதல்; பிள்ளைப் பாசமும் காதல்; நேசமும் காதல்; சுருங்கச் சொல்லின் தலைசிறந்த அன்பே காதல்.

இவ்வளவு விரிந்த பொருளில் வழங்கிய காதல் என்ற சொல், இப்பொழுது ஆண், பெண் என்னும் இரு பாலாரிடையே உள்ள அன்பையே பெரும்பாலும் குறிக்கின்றது. காதலன் என்றால் கணவன்; காதலி என்றால் மனைவி. இவ்விருவரையும் இல் வாழ்க்கையில் இழுப்பது காதல். பின்பு இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடைபெறச் செய்வதும் காதல். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பதுபோல இல் வாழ்க்கையில் ஈடுபட்ட இருவரையும் ஒரு நெறிப்படுத்துவது காதல். ''காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்தீதில் ஒரு கருமம் செய்பவே'' என்றார் ஒரு கவிஞர்.

ஆதியில், காதல் மணமே தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிற்று. 'காதல் இல்லாத வாழ்க்கை உயிரில்லாத உடல் போன்றது' என்பது தமிழர் கொள்கை.

காமம் என்ற சொல்லும், காமன் என்ற பெயரும் தமிழ் நூல்களிலே எடுத்தாளப்பட்டாலும் இன்று அவை இழிந்த பதங்களாகவே எண்ணப்படுகின்றன. காமம் என்பது இன்பம் என்ற பொருளைத் தருகின்றது. திருவள்ளுவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப் படவில்லை என்று தெரிகின்றது. அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலைப் பற்றி எழுதிய திருவள்ளுவர் இன்பப் பகுதிக்குக் காமத்துப் பால் எனப் பெயரிட்டார் என்றால், அவர் காலத்தில் காமம் இழிந்த சொல்லாகக் கருதப்படவில்லை என்பது தெரிகின்றதல்லவா?

ஆயினும், காலகதியில் காமம் என்பது துன்மார்க்கத்திற் பெறும் இன்பத்தைக் குறிப்பதாயிற்று. காமி, காமுகன் முதலிய சொற்கள் தூர்த்தன் என்ற பொருளிலே வழங்குகின்றன. காதல் என்பது உணர்ச்சி; கற்பு என்பது ஒழுக்கம். உணர்ச்சியால் ஒன்று பட்ட நம்பியும் நங்கையும் (தலைமகனும் தலைமகளும்) ஒருவரையொருவர் தமக்கே உரியவராகக் கொண்ட நிலையிலே தோன்றும் ஒழுக்கமே கற்பு என்பர்.

## மனதாலும் பிற ஆடவரை நினையாமை கற்பு; சோதனையின்போது மென்மை வன்மையாகிவிடும்!

சீதையின் காதலில் வைத்து இந்த உண்மையைக் காட்டுகிறார் கம்பர். மிதிலை மாநகரத்தில் கன்னி மாடத்தின் மேடையிலே நின்ற சீதையும் வீதியின் வழியாகச் சென்ற இராமனும் தற்செயலாக ஒருவரையொருவர் நோக்கினர். இருவர் கண்நோக்கும் ஒத்தது; காதல் பிறந்தது. காதலர் இருவரும் ஒருவர் இதயத்தில் ஒருவர் புகுந்து உறவாடினர்.

இந்த நிலையில் இராமன் தன்னுடன் வந்த தம்பியோடும் முனிவரோடும் வீதி யிற் சென்று மறைந்து விடுகின்றான். அவன் இன்னான் என்று அறியாள் சீதை. அவன் எங்கே சென்றான் என்பதும் உணராள்; ஆயினும், அவனையே கருத்தில் அமைத்து கரைந்து உருகுகின்றாள். அதே வேளையில் ஓடி வருகின்றாள் அவள் தோழியாகிய நீலமாலை; ஆனந்த முத்து ஆடுகின்றாள்: பாடுகின்றாள்: ''தோழீ! என்ன செய்தி?'' என்று கேட்கின்றாள் சீதை. அப்போது தோழி சொல்கின்றாள்: ''அயோத்தி அரசனுடைய மைந்தன்; அஞ்சன வண்ணன்; செந்தாமரைக் கண்ணன்; அவன், தம்பியோடும் முனிவரோடும் நம் மாளிகைக்கு வந்தான்; உன் திருமணத்திற்காக வைத்திருந்த வில்லைக் கண்டான்; எடுத்தான்; வளைத்தான்; ஒடித்தான்'' என்று கூறி முடிக்கின்றாள்.

அப்பொழுது சீதையின் மனம் ஊசலாடத் தொடங்கிற்று; கவலையும் உண்டாயிற்று, வில்லை எடுத்து வளைத்து ஒடித்த வீரன், தான் கன்னி மாடத்தில் இருந்து கண்ட ஆடவனோ? அல்லனோ? என்ற ஐயம் பிறந்தது. அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு தோழி சொல்லிய அடையாளங்களை மீளவும் நினைத்துப் பார்த்தாள்.

ஆனால், நொடிப் பொழுதில் மற்றொரு கருத்து அவள் மனதில் புகுந்து, ''என் தோழி சொல்லிய அடையாளங்கள் எல்லாம் உடைய மற்றொருவன் வில்லை வளைத்து ஒடித்திருந்தால் நான் என்ன செய்வேன்?''

அந்த ஏக்கத்தினிடையே ஓர் ஊக்கம் பிறந்தது; உணர்ச்சியினிடையே ஒழுக்கம் எழுந்தது. காதல் கற்பாக உருவெடுத்தது. ''அவன் அல்லனேல் இறப்பேன்'' என்று சீதை முடிவு செய்தாள். கண்ணாற் கண்ட காதலனும், வில்லை ஒடித்த வீரனும் ஒருவனேயாயின் அவனை மணம்புரிந்து வாழ்வேன்; இல்லாவிட்டால் இறந்து படுவேன்' என்று உறுதி கொண்டாள் சீதை. கற்புநெறி என்பது இது தான். காதலனையன்றி மற்றோர் ஆடவனை மனத்திலும் கருத ஒருப்படாத உறுதியே கற்பு எனப்படும். இதையே திருவள்ளுவர் வியந்து பாடினார்.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்''

*என்பது அவர் திருவாக்கு.*

கற்புடைய மாதரிடம் மென்மையும் உண்டு. மனத்திண்மையும் உண்டு. பொறுக்கும் திறமும் உண்டு. மாறுபட்டோரை ஒறுக்கும் திறமும் உண்டு. சிலப்பதிகாரத்தின் கதாநாயகியாகிய கண்ணகியிடம் இவ்விரு தன்மைகளையும் பார்க்கின்றோம். மென்மையும் பொறுமை யும் வாய்ந்த கண்ணகி, மதுரை மாநகரில் தன் கணவனை இழந்தபோது வன்மையின் வடிவம் கொண்டாள். கற்பெனும் திண்மை அவ்வடிவத்திலே களிநடம் புரிந்தது. அத் திண்மையைக் கண்டு திடுக்கிட்டான் அரசன்; அப்பால் அவள் பேசிய திடமொழியைக் கேட்ட போது மயங்கி விழுந்து மாண்டான். தவறு செய்த அரசனைக் கற்பின் திண்மையால் ஒறுத்த கண்ணகி, வீரபத்தினியாகத் தமிழ் நாட்டிலே போற்றப்பட்டாள். அன்று முதல் இன்றளவும் கண்ணகி, மாதர்குல மணிவிளக்காய், வீரக் கற்பின் விழுமியக் கொழுந்தாய் விளங்குகின்றாள்.

***



நன்றி-தமிழ் இன்பம்-
டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை.

## அப்பா மகனுக்கு எழுதுவது!

வசதியாகத்தான் இருக்கிறது
மகனே.....
நீ என்னைக் கொண்டு வந்து
சேர்த்த
முதியோர் இல்லம்.

பொறுப்பாய் என்னை
ஒப்படைத்துவிட்டுச்
சலனமின்றி நீ
வெளியேறியபோது,
முன்பு நானும் இதுபோல்
உன்னை வகுப்பில்
விட்டுவிட்டு
என் முதுகுக்குப் பின்னால்
நீ கதறக் கதறக்
கண்ணீரை மறைத்தபடி
புறப்பட்ட காட்சி
ஞாபகத்தில் எழுகிறது!

முதல் தரமிக்க
இந்த இல்லத்தை
தேடித் திரிந்து
நீ தேர்ந்தெடுத்ததை
அறிகையில்.....
அன்று உனக்காக நானும்
பொருத்தமான பள்ளி
எதுவென்று.....
ஓடி அலைந்ததை
ஒப்பீடு செய்கிறேன்!

இதுவரையில்
ஒருமுறையேனும்
என் முகம் பார்க்க
நீ வராமற்போனாலும்,
என் பராமரிப்பிற்கான
மாதத்தொகையை
மறக்காமல் அனுப்பி
வைப்பதற்காக
மகிழ்கிறேன்!

நீ விடுதியில் தங்கிப்
படித்த காலத்தில்
உன்னைப் பார்க்க
ஆவல் இருந்தாலும்,
படிப்பை நினைத்து
உன்னைச் சந்திக்க மறுத்ததன்
எதிர் வினையே
இதுவென்று
இப்போது அறிகிறேன்!

இளம் வயதினில்
நீ சிறுகச் சிறுகச்
சேமித்த அனுபவத்தை
என் முதுமையில்
மொத்தமாக எனக்கே
செலவு செய்கிறாய்.

ஆயினும்......
உனக்கும், எனக்கும்
ஒரு சிறு வேறுபாடு.
நான் கற்றுக் கொடுத்தேன்
உனக்கு ......
வாழ்க்கை இதுதானென்று ....!
நீ கற்றுக் கொடுக்கிறாய்
எனக்கு..........
உறவுகள் இதுதானென்று......!

க.திரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

தோற்றம்
1957
08
17



மறைவு
2009
02
01

## அமரர் திருமதி. கலாநந்தி சந்திரமோகன்

Managing Director of Spanckaa General Merchants and Engineering Consultants (Pvt) Ltd.

கடந்த 01.02.2009 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர்.திருமதி. கலாநந்தி சந்திரமோகன் அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று 08.03.2009 மு.ப. 10.00 மணிக்கு பம்பலப்பிட்டி இல:75, லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற உள்ளதனை அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்ற இவ்வேளையில் இவ் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### *நன்றி நவிலல்*

எமது இதய தெய்வம் கலாவின் மறைவினை அறிந்து நேரில் வருகை தந்தும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தும், மலர் வளையங்கள் வைத்தும், துண்டு பிரசுரங்கள் வெளியிட்டும், அன்னாரது இறுதி கிரிகைகளில் கலந்து கொண்டவர்கள் உதவிகள் பல புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.மேலும் கடந்த ஒன்றரை வருடங்களாக சிகிச்சை அளித்து வந்த வைத்திய கலாநிதி Dr.Mahendra Perera அவர்கட்கும், Apollo மருத்துவமனை டாக்டர்களுக்கும், மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் அவர்கள் வழங்கிய நீண்ட கால அதியுயர் மருத்துவ சேவைக்காக அவர்களுக்கும் எமது மனம் உகந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அன்றைய தினம் கலாநந்தி அறக்கட்டளை நிறுவன அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம் பெறவுள்ளது (Kalananthi Trust Fund For Cancer Care)

கணவன் : N.Chandramohan
Chairman
Spanckaa General Merchants and
Engineering Consultants (Pvt) Ltd
Working Director
SriLanka Social Security Board
Ministry of Social Services and Social Welfare

No:60, Peterson Lane,
Colombo- 06
0094-60-2181182
0094-11-2365958

பிள்ளைகள்: ஐஸ்வரியா, ஐஸ்வரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாயத்தீவில் ஓர் அழகிய இளவரசியைக் கண்டதும், அவளை விடுவித்ததும், நன்றிப் பெருக்கோடு இளவரசி இந்திரவர்மனின் கைகளைப் பற்றிக்கொண்டதும் சந்திரவர்மனுக்கு ஒரு கனவு போலவே தோன்றியது. கண்ணிமைக்கும் நொடிக்குள் இவையெல்லாம் நடந்துவிட்டன.

இளவரசியிடமிருந்து தன் கரங்களை விடுவித்துக்கொண்ட இந்திரவர்மன் ''பெண்ணே! நீ யார்? எதற்காக இங்கே சிறைப்பட்டிருக்கிறாய்?'' என்று இளவரசியை நோக்கிக் கேள்விக்கணைகளைத் தொடுத்தான். ஆனால் அவனின் கேள்விகளுக்குப் பதிலேதும் சொல்ல முடியாதவளாய் விக்கி, விக்கி அழத் தொடங்கினாள் இளவரசி. அவள் அழுது முடிவதற்குள் எஞ்சியிருந்த ஏனைய இரு அறைகளையும் திறந்து பார்த்துவிட்டு சந்திரவர்மன் சோர்வுடன் நடந்து வந்தான்.

''என்ன சந்திரா! தளர்ந்துபோய் வருகிறாய்?'' என்றான் இந்திரவர்மன்.

''ஒன்றுமில்லை. உண்பதற்கு ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். எதுவுமே தென்படவில்லை'' என்று சந்திரவர்மன் பதில் கூறினான்.



''பெண்ணே! உன்னைப் பார்த்தால் ஒரு நாட்டின் இளவரசிபோல் தெரிகிறதே?'' என்று அவளிடம் பேச்சுக் கொடுத்தான் சந்திரவர்மன்.

''ஆம்! நான் மகதநாட்டு இளவரசி மணிமொழி! பழந்தோட்டத்தில் நான் தோழியருடன் விளையாடிக்கொண்டிருந்தபோது மாயக்கிழவி என்னைக் கவர்ந்து வந்து விட்டாள். இப்போது என்னை நரபலி கொடுப்பதற்கான ஆயத்த வேலைகளைச் செய்ய, என்னை அடைத்துவிட்டு எங்கோ சென்று விட்டாள்'' என்று ஒரே மூச்சில் தன் கதையைக் கூறினாள் மணிமொழி. *(தொடரும்)*

## அன்பு

அன்பு என்பது உண்மையிலே உக்கிரமானதொரு சக்தியாகும். அது நம்மை மிக உயரத் தூக்கு எடுத்துச் சென்று இலேசாகவும் காற்றுப் போலவும் ஆக்கி விடும். இப்போது உலகிற்கு தேவை அன்பு இனிமையான அன்பு. உலகிற்கு உண்மையிலே தேவைப்படுவது என்னவெனில் அன்பைப் பற்றிய சரியானதும் நுட்பதிட்பமுமானதொரு விளக்கமேயாகும். உண்மையான அன்பானது புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை, மரியாதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். அன்பு சமநிலையுடையது. அதாவது தன்னிடமும் கடவுளிடமும் தன்னைச் சார்ந்தவர்களிடமும் இசைந்திருக்கும் அன்பு சுயநல மற்றது. அன்பு ஆத்மாவின் உயிர் நாடி. அன்பு இல்லாவிடின் வாழ்க்கையின் பொக்கிஷங்கள் யாவும் எமது பார்வைக்கும் அனுபவத்துக்கும் இல்லாமல் பூட்டப்பட்டுவிடும். எனவே உண்மையிலே அன்பு தான் திறவுகோல்.*

**பு.தனுசங்கா**, தரம்-7C,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

## விடுகதையும் விடைகளும்

01. இரண்டு கிணறுகளுக்கு ஒரு பாலம். அது என்ன?
**மூக்கு**
02. கிட்ட இருப்பான். ஆனால் எட்டிப் பார்க்க முடியாது. அது என்ன?
**முதுகு**
03. கிணற்றைச் சுற்றிப் புல். அது என்ன?
**கண்புருவம்**
04. தலையைச் சீவினால், தாளில் மேய்வான். அவன் யார்?
**பென்சில்**
05. உலர்ந்த காம்பில், மலர்ந்த பூ. அது என்ன?
**குடை**
06. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல. பட்டை அடித்திருப்பான்; சாமியல்ல. அவன் யார்?
**அணில்**
07 பச்சைக்குதிரை, வெள்ளைக் குதிரை, மண்நிறக் குதிரை உள்ளே போய் வெளியே வந்தால் சிவப்புக் குதிரை அவை என்ன?
**வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு**

உ.தக்சாயனி, தரம்-9, உடுவில் மகளிர் கல்லூரி.

## சிந்தனைத் துளிகள்

★ பெற்றோரை மதியுங்கள் பிறர் உங்களை மதிப்பார்கள்.
★ அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை எனவேஎல்லோரிடமும் அன்புசெய்யுங்கள்.
★ நேரத்தைச் சேமியுங்கள் அது உங்கள் எதிர்காலத்துக்கு உதவும்.
★ இளமையில் கற்றுக்கொள்ள வேண்டியவை கல்வி, ஒழுக்கம், பணிவு, பொறுமை என்பனவாகும்.

**க.பிரவீந்தன்**, தரம்-4, யா/நுணாவில் கிழக்கு, அமிர்தாம்பிகை வித்தியாலயம்.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 06

1. நவாலிப் பகுதியில் உள்ள இடிகுண்டு எப்போது தோன்றியது?
2. காரைநகர், சுப்பிரமணிய வீதியில் உள்ள கிணற்றடி மடத்தைக் கட்டுவித்தவர் யார்?
3. பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது எப்போது தாக்குதல் நடத்தப் பட்டது?
4. சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் நாள் எது?
5. இந்திய வெளிவிவகார அமைச்சரின் பெயர் என்ன?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 18.03.2009 இற்கு சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

### விடை தெரியுமா? - 03
சரியான விடைகள்

(1) நல்லூர்.
(2) வல்லிபுரம் பகுதி.
(3) சங்கடம் படலை. (திண்ணை என்பதும் பொருந்தும்)
(4) ரபேல் நடால். (5) ஹிலாரி கிளின்டன்

### பரிசுபெறுவோர்


01. ஒ.நிதூசன், தரம் - 8 C, யாழ்.இந்துக்கல்லூரி.
02. தி.நிரோஜன் தரம் - 8E, காரைநகர், கலாநிதி தியாகராஜா ம.ம.வி.
03. க.மாலவன், 180, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
04. ஸ்ரீ.ஜனார்த்தனி, தரம் - 8A , வட்டு.இந்துக் கல்லூரி.
05. ஜெ.துவாரகா, தரம் - 3C, யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாட.
06. தி.சுதன், தரம் - 8C, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

குறிப்பு:
விடை தெரியுமா பகுதியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குகொள்ளவும். விடைத்தாள்களுடன் சிறுவர்கதிர் விண்ணப்பப் படிவம் கட்டாயம் இணைக்கப்படவேண்டும்.

## மாணவர் தூரிகை


**வி.யசோதரன்**, தரம் - 3 A,
யா/ஸ்கந்தவரோதய கல்லூரி.


**உ.அஜித்தா**, தரம் - 9,
யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தி.


**ந.லம்போதரன்**, தரம் - 7 E,
யா/பத்திரிசியார் கல்லூரி.


**இ.கோசலன்**, தரம் -
யா/சன்மார்க்க மகா வித்திய


**சி.சிவாரகவன்**, தரம் - 8A,
யா/தமிழ் கந்தையா வித்தியாசாலை.



**ப.பார்த்தீபன்**, தரம் - 8 A,
யா/சோண்டாவில்/ இ/ம/ வித்தி.

## செய்தித்தாள்



அழகான காகிதத்தில்
அச்சிட்ட செய்தித்தாள்
நாள்தோறும் வருகுது
நல்ல செய்தி தருகுது

அனல் பறக்கும் செய்திகளை
அற்புதமாய்த் தருகுது
அயல்நாட்டு நடப்பெல்லாம்
அழகழகாய் தருகுது



நாட்டு நடப்பையெல்லாம்
நாம் படிக்கத்தருகுது
நல்ல பல விடயங்களை
நாள் தோறும் வழங்குது

நாளும் வரும் நாளிதழ்கள்
நல்ல செய்தி தருகுது
நாளும் செய்தி பார்ப்பதால்
நமது அறிவு வளருது.

வி.கௌதமி, தரம்-8D
யா/வேம்படி மகளிர் உ/த பாடசாலை

## நமது கடமைகள்

முத்தான குழந்தைகளே
முதல் மணி அடிக்கும் முன்
வகுப்பினில் இருப்போம்
கடைசி மணி அடித்த பின்
விவேகமாய் பறப்போம்
கவனமாய் கற்போம்
பயன் தரும் என்றும்
ஒழுங்காய் நிற்போம்
உயர்வோம் என்றும்
மாலையில் மணம்போல்
விளையாடி முடிப்போம்.

உடல் சுத்தம் செய்து
படிக்கத் துடிப்போம்
வீட்டுப் பாடம்
செய்ய மறவோம்
நாட்டு நடப்பை
நாளிதழில் பார்ப்போம்
தொலைக்காட்சிப் பெட்டிக்கு
காய் விட்டு விடுவோம்
தொழில், கல்வி சேர்ந்த பின்
இமயம் தொடுவோம்.

க.விகானா, தரம்-3C,
யா/இ.ம.ஆ.பாடசாலை.




## ஏழையின் புத்தி

ஓர் ஏழைபிச்சை எடுத்துக்கொண்டு தெருவழியாக நடந்து சென்றான். ஒரு பணக்காரன் அவனை அழைத்து ''என்னிடம் நூறு கட்டித் தங்கம் இருக்கிறது. உனக்குப் பத்துக் கட்டிகள் கொடுக்கிறேன். என்னைப் புகழ்ந்து பேசுவாயா?'' என்று கேட்டான். ''எதற்காக உங்களைப் புகழவேண்டும்?'' என்று கேட்டான் ஏழை. ''அப்படியானால் ஐம்பது தங்கக் கட்டிகளைத் தந்தால் என்னைப் புகழ்வாயா?'' என்று கேட்டான் பணக்காரன்.



''என்னிடம் ஐம்பது தங்கக் கட்டிகளைக் கொடுத்தால், உங்களிடம் இருப்பதும் ஐம்பது தங்கக் கட்டிகள் தானே! அப்போது நாமிருவரும் சம அந்தஸ்துள்ளவர்களாகி விடுவோம். நான் எப்படி உங்களைப் புகழ்வது?'' என்றான் ஏழை.

''சரி, என்னிடம் இருக்கும் எல்லாத் தங்கக் கட்டிகளையும் உன்னிடம் கொடுத்தால் அப்பொழுதாவது என்னைப் புகழ்வாயா?'' என்று கேட்டான் பணக்காரன். ''அவ்வளவு தங்கமும் என்னிடம் இருந்தால், எதற்காக நான் உங்களைப் புகழ வேண்டும்? தங்கம் இருக்கும் என்னைத்தான் நீங்கள் புகழ வேண்டும்'' என்றான் ஏழை.★

ஜெ.ஜெயவர்மன், தரம் - 8A ,யா/ மகாஜனக்கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..................................
தரம் :-..................................
பாடசாலை :-..................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.......................... ..........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தானில் பயங்கரத்தில் மாண்டு மீண்டு திரும்பியது இலங்கை அணி

பாகிஸ்தானில் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாடச் சென்ற இலங்கைக் கிரிக்கெட் அணி பயங்கரத்தில் சிக்கி மீண்டு கொழும்பு திரும்பியுள்ளது. உலகில் எங்கும் நடந்திராத பயங்கரமான அனுபவம் இலங்கை அணிக்குக் கிடைத்திருக்கிறது.


மயிரிழையில் உயிர் தப்பியமையால் வீரர்கள் அனைவரும் மிகுந்த அதிர்ச்சியுடன் நாடு திரும்பியதைக் காணமுடிந்தது. விளையாட்டு உலகில் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ள இந்தச் சம்பவத்தினால் ஏனைய கிரிக்கெட் அணிகளின் வீரர்களும் அதிர்ச்சியில் உறைந்துபோய் உள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரில் விளையாடச் சென்ற இலங்கை வீரர்கள் மீது, பயங்கரவாதிகள் செவ்வாய்க்கிழமை திடீர் தாக்குதல் நடத்தினர். லாகூரில் பஸ்சில் சென்று கொண்டிருந்த வீரர்களைச் சுற்றிவளைத்த பயங்கரவாதிகள், துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டனர். இந்தப் பயங்கரத் தாக்குதலில் இலங்கை அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன உள்ளிட்ட எட்டுப் பேர் காயமடைந்தனர். ஆறு பொலிஸார் மற்றும் இரண்டு அப்பாவி மக்கள் பரிதாபமாகக் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் பயங்கரவாதச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதனால், இங்கு கிரிக்கெட் விளையாட அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா போன்ற அணிகள் மறுத்தன. இதன் விளைவாக இங்கு நடக்க இருந்த மினி உலகத் தொடர் ஒத்திவைக்கப்பட்டது. மும்பைத் தாக்குதலைத் தொடர்ந்து, இந்திய அணியும் பாகிஸ்தான் பயணத்தை ரத்து செய்தது. இப்படி முன்னணி அணிகள் புறக்கணித்ததால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திவாலாகும் நிலை ஏற்பட்டது. இந்தச் சூழலில் பாகிஸ்தான் சென்று விளையாட இலங்கை அணி முன்வந்தது. முதல் கட்டமாகக் கடந்த ஜனவரியில் நடந்த ஒருநாள் போட்டித் தொடரில் இலங்கை அணி வென்றது.

## லாகூரில் பயங்கரம்

அடுத்து இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இரு அணிகளும் மோதின. கராச்சியில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. இரண்டாவது டெஸ்ட் லாகூரில் நடந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை மூன்றாம் நாள் ஆட்டம் நடக்க இருந்தது. இதில் பங்கேற்பதற்காக இலங்கை வீரர்கள் சொகுசு பஸ்சில் போட்டி நடக்கும் கடாபி மைதானத்துக்குக் காலையில் வந்தனர். மக்கள் நெரிசல் மிகுந்த 'லாகூர் லிபர்டி மார்க்கெட்' அருகே பஸ்வந்தபோது, முகமூடி அணிந்த 12 பேர் அடங்கிய பயங்கரவாதக் கும்பல் கண்மூடித்தனமாக நாலாபுறமிருந்தும் சுடத் தொடங்கியது. குண்டுகள் பறந்தன.



முதலில் பஸ்சின் ரயரைக் குறிவைத்துப் பயங்கரவாதிகள் சுட்டுள்ளனர். பின் கைக் குண்டை வீசினர். இது பஸ்சின் மீது விழாததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. தொடர்ந்து 'ஏ.கே.47' ரகத் துப்பாக்கி மூலம் பயங்கரவாதிகள் சுட்டனர். இதில் பஸ்சின் கண்ணாடிகள் நொறுங்கின. வீரர்களின் பாதுகாப்புக்காகப் பயணித்த பொலிஸார் திருப்பிச் சுட்டனர். ஆனால் கடும் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல், ஆறு பொலிஸார் பலியாயினர். பஸ் அருகே சென்று கொண்டிருந்த அப்பாவி மக்கள் இரண்டு பேர் பலியாகினர்.

அசம்பாவிதத்தை மேலும் தடுக்க, துரிதகதியில் செயற்பட்ட பஸ் சாரதி பஸ்ஸை மிக வேகமாகச் செலுத்தி, அனைவரையும் பாதுகாப்பதில் மும்முரமானார். இலங்கை வீரர்கள் மீது குண்டுகள் பாய்ந்தன. இலங்கை அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன, திலான் சமரவீர, அஜந்த மெண்டிஸ், பரணவிதாரண, குமார் சங்ககார, உதவிப் பயிற்றுநர் போல் பாபரஸ், நடுவர் அஹ்சன் ராஜா உள்ளிட்ட எட்டுப் பேர் காயமடைந்தனர். வெடிகுண்டுத் துகள்கள்தான் வீரர்கள் சிலர் காயமடையக் காரணமாக அமைந்தன. இவர்களுக்கு உடனடியாக அருகிலிருந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இது குறித்து இலங்கை அணித்தலைவர் ஜயவர்த்தன கூறுகையில், ''தாக்குதல் நடத்தப்படுவதை உணர்ந்து நாங்கள் அனைவரும் கீழே படுத்துக் கொண்டோம். வீரர்களுக்கு லேசான காயம்தான் ஏற்பட்டது'' என்றார்.

பாகிஸ்தானில் நடந்த இந்தக் கொடூரத் தாக்குதல், கடந்த ஆண்டு இறுதியில் மும்பையில் நடத்த பயங்கரத் தாக்குதலை நினைவூட்டும் விதமாக அமைந்திருந்தது. இத்தாக்குதலைத் தொடர்ந்து இலங்கை அணி டெஸ்ட் தொடரை ரத்துச் செய்து விட்டு நாடு திரும்பியது. கிரிக்கெட் வீரர்கள் மீது முதல் முறையாக நடத்தப்பட்டுள்ள இத்தாக்குதலுக்கு இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. சர்வதேச கிரிக்கெட் சபையும் கவலை தெரிவித்துள்ளது.



## பாதுகாப்புக் குறைபாடு

'இத்தாக்குதல், பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு மிகப் பெரும் 'அடியாக' அமைந்துள்ளது. பயங்கரவாதிகள் ஆட்டோவில் வந்தனர். சம்பவம் நடந்த இடத்தில் இருந்த மரங்களின் பின்புறம் பயங்கரவாதிகள் துப்பாக்கியுடன் சுற்றித் திரிவது வீடியோவில் காண்பிக்கப்பட்டது. இப்படிப் பயங்கரவாதிகள் சுதந்திரமாகத் திரிந்தது, பாதுகாப்பு மிகவும் பலவீனமாக உள்ளதை அம்பலப்படுத்தியுள்ளது. இனி இங்கு கிரிக்கெட் உட்பட எந்த ஒரு விளையாட்டும் நடப்பது சந்தேகமே.




பாகிஸ்தான், பயங்கரவாதிகளின் புகலிடமாகத் திகழ்கிறது என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது' என இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## 2011 உலகக்கிண்ணம் ரத்து?

எதிர்வரும் 2011 இல் பாகிஸ்தானில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடக்க உள்ளது. ஆனால் பாகிஸ்தானில் தற்போது நடந்துள்ள தாக்குதல், இலங்கையில் நடக்கும்போர் மற்றும், பங்களாதேஷில் நடந்த துணை ராணுவ வீரர்கள் கலவரம் காரணமாக, பாகிஸ்தானில் உலகக் கிண்ணப் போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டு, வேறு நாட்டுக்கு மாற்றப்பட வாய்ப்பு உள்ளது. இது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது, என எதிர்பார்க்கப்படுகிறது.

## எங்கும் ரத்தம், உடைந்த கண்ணாடி சிதறல்கள்

பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் மீது தாக்குதல் நடந்த இடத்தில், ரத்தமும், உடைந்த கண்ணாடிகளும், சீட்டுக் கட்டுகளும் சிதறிக்கிடந்தன. பாகிஸ்தானில் ஆப்கன் எல்லையை ஒட்டிய பகுதிகள் மற்றும் வடமேற்குப் பகுதிகளில் பயங்கரவாதிகளின் வன்முறைகள் அதிக அளவில் நடந்தாலும், கிழக்குப் பகுதியில் உள்ள லாகூர் நகரம், பாதுகாப்பான நகரமாகவே கருதப்பட்டது. ஆனாலும், கலாசாரம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நகரில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திவிட்டனர். இதன்மூலம் லாகூர் பாதுகாப்பான நகரம் என்ற எண்ணம் முறியடிக்கப்பட்டுள்ளது. லாகூர் கடாபி மைதானத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்தது. தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் 'ஏ.கே.47' ரக துப்பாக்கிகள், ராக்கெட் மூலம் செலுத்தப்படும் கைக்குண்டுகள் போன்றவற்றைச் செலுத்தித் தாக்குதல் நடத்தியதில் பொலிஸார் ஐந்து பேர் பலியாகினர்.






துப்பாக்கி சுடும் சத்தத்தையும், குண்டு வெடிக்கும் சத்தத்தையும் கேட்டேன். உடன் என்னுடைய கடையைவிட்டு வெளியேறி ஓடினேன். அப்போது துப்பாக்கி ஏந்திய இருவர் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். சுட்ட பயங்கரவாதிகள் எல்லாம் 20 முதல் 25 வயதிற்கு உட்பட்டவர்கள். அவர்கள் ஓடிக் கொண்டே சுட்டுக் கொண்டிருந்தனர்' என, பூக்கடை வைத்திருக்கும் அப்துல் ஷாகூல் என்பவர் கூறினார்.

இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள், வெள்ளை நிறக் காரில் வந்தனர். உடன் அந்தக் காரில் வெடிகுண்டுகள் இருக்கலாம் என, சந்தேகம் அடைந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அனைவரையும் எச்சரித்தார். நிருபர்களையும் பின்னால் செல்லும்படி கூறினார்.

கடாபி மைதானத்தைச் சுற்றிய பகுதிகள் மார்க்கெட் என்பதால், அங்கு ஏராளமான கடைகள் மற்றும் அலுவலகங்கள் உள்ளன. சண்டை நடந்த இடத்தில் இருந்து 'ஏ.கே-47' ரக துப்பாக்கி ஒன்றையும், பிளாஸ்ரிக் பையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு கைக்குண்டுகளையும் பொலிஸார் கைப்பற்றினர். மும்பையில் நடந்த தாக்குதலைப் போலவே லாகூரிலும் தாக்குதல் நடந்தது. ஆனால், மும்பைத் தாக்குதலில் பயங்கரவாதிகளில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் கொல்லப்பட்டனர். இங்கு அப்படி இல்லை. பயங்கரவாதிகள் தப்பி விட்டனர்.

சம்பவத்தை நேரில் பார்த்த, பிரதமர் யூசுப் ரஸா கிலானியின் பத்திரிகை பிரிவு முன்னாள் செயலர் ஷாகித் பஷீர் கூறுகையில், '' முதலில் குண்டு வெடிக்கும் சத்தத்தை கேட்டேன். அதைத் தொடர்ந்து துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. உடன் மறைவிடங்களில் இருந்து வெளியே வந்த பயங்கரவாதிகள் பல பகுதிகளில் இருந்தும் பஸ் மீது தாக்குதல் நடத்தின. உடன் கிரிக்கெட் வீரர்களின் பாதுகாப்புக்கு வந்த பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தியதால், பயங்கரவாதிகள் தப்பி ஓடிவிட்டனர்- என்றார்.

## சாதுரியமான பஸ் சாரதி

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் ஜயவர்த்தன கூறியதாவது:

நாங்கள் வந்த பஸ்சின் ரயரை குறிவைத்து முதலில் பயங்கரவாதிகள் சுட்டனர். அதன் பின்னரே பஸ் மீது தாக்குதல் நடத்தினர். உடன் நாங்கள் எல்லோரும் தரையில் படுத்துக் கொண்டோம். சண்டை 30 நிமிடம் நடந்தது. சம்பவத்தில் 6 பொலிஸார் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். அனைத்து பகுதிகளில் இருந்தும் பயங்கரவாதிகள் சுட்டாலும், நாங்கள் வந்த பஸ்சின் சாரதி பஸ்சை வேகமாக ஓட்டிச் சென்று அனைவரையும் காப்பாற்றிவிட்டார். உண்மையிலே அவர்தான் 'ஹீரோ' என்றார்.

## வீரர்கள் கொழும்பு திரும்பினர்

பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த வீரர்கள் உட்பட இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்கள் அனைவரும் புதன்கிழமை காலை கொழும்பு வந்தனர். அவர்களை அழைத்து வருவதற்காக, 'ஸ்ரீ லங்கன் ஏயர்லைன்ஸ்' நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் கொழும்பில் இருந்து லாகூர் சென்றது. செவ்வாய்க்கிழமை இரவு லாகூர் சென்றடைந்த அந்த விமானம், கிரிக்கெட் வீரர்களுடன் புதன்கிழமை காலை கொழும்பு திரும்பியது.




இந்த அதிர்ச்சிகரமான தாக்குதல் தொடர்பாக லக்ஷர் - இ - தொய்பா அமைப்பு உட்படப் பல்வேறு தீவிரவாத அமைப்புக்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்தியாவின் ஆதரவுடன் தமிழ் நாட்டில் இருந்து வந்த குழுவொன்றே இந்தத் தாக்குதலை நடத்தியதாகப் பாகிஸ்தானின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். மும்பைத் தாக்குதலை மேற்கொண்ட அமைப்பே இந்தத் தாக்குதலையும் நடத்தியதாக இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே பாகிஸ்தானில் தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புப் போதுமானதாக இல்லை எனவும் இலங்கை அணி வீரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஒருநாள் தொடருக்கு வழங்கப்பட்டதைப் போல டெஸ்ட் தொடருக்கான பாதுகாப்பு அமையவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். இலங்கைவீரர்கள் அனைவரும் தற்போது மிகவும் அதிர்ச்சி யடைந்த நிலையில் உள்ளதாகவும் அவர் களுக்குத் தற்போது ஓய்வு தேவைப்படு வதாகவும் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எது எவ்வாறாயினும் எதிர்காலத்தில் சர்வதேசப்போட்டிகள் நடைபெறும் போது பாதுகாப்பு விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய தேவை இப்பொழுது எழுந்துள்ளது என்பது மட்டும் தெளிவாகியுள்ளது. ****

அதிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திரை விமர்சனம்

## த.நா-07 - அல - 4777

பையனைப் போலவே, தமிழ் சினிமாவில் புதியதொரு பரிசோதனை முயற்சியாகத் தடம் பதித்துள்ளது த.நா.-07 - அல 4777 திரைப்படம். அஜ்மல், பசுபதி, சிம்ரன், மீனாட்சி போன்றோர் நடித்துள்ள இப்படத்தை லட்சுமி காந்தன் இயக்கியிருக்கிறார். வங்கியில் உள்ள தன் அப்பாவின் ஆவணங்களை மீட்டு, சொத்தை அடைவதற்காக அஜ்மல் புறப்படுகிறார். வழியில் கார் பழுதாகிவிட பசுபதியின் வாடகைக் காரில் பயணிக்கிறார் அஜ்மல். அவர் அவசரமாகச் செல்லும்படி கூற, பசுபதியும் சாலை விதிகளை யெல்லாம் மீறிக் காரை ஓட்டுகிறார். கார் விபத்துக்குள்ளாகிறது. அஜ்மல் அவ்விடத்திலிருந்து அகன்று விடுகிறார். எனினும் வங்கியில் உள்ள ரகசியப் பெட்டியின் சாவியைக் காரில் தவறவிட்ட அஜ்மல், திரும்பிவந்து பசுபதியிடம் அதைக் கேட்கிறார். பசுபதி மறுக்கிறார். இதன்போதுதான் தன் கணவர் ஒரு கார்ச்சாரதி என்ற உண்மை சிம்ரனுக்குத் தெரியவருகிறது. இதனால் தனது கணவனை விட்டுப் பிரிகிறார். அஜ்மலின் காதலியான மீனாட்சியும் அவரை விட்டுப் பிரிகிறார். இதன் முடிவு என்ன என்பதையே விறுவிறுப்பாகச் சொல்கிறது த.நா.-07 அல 4777 படம். படம் முழுவதும் ஒரேநாளிலேயே நடந்து முடிவதைப் போல் காட்டப்பட்டுள்ளது.

இதனை சுவாரசியம் குன்றாமல் இயக்கியுள்ளார் லட்சுமிகாந்தன். பசுபதி, சிம்ரன் ஆகியோரின் நடிப்பு அருமையாக உள்ளது. ஆர்.வி.குருதேவின் ஒளிப்பதிவு, விஜய் அன்ரனியின் இசை என்பனவும் படத்துக்குப் பலம் சேர்க்கின்றன. தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் கார் இலக்கத்தைப் படத்தின் தலைப்பாக்கி, படத்திலும் வித்தியாசம் காட்டியுள்ளனர். படம் பார்த்து முடிகையில், ஒரு விறுவிறுப்பான ஆங்கிலப்படத்தைப் பார்த்த திருப்தி ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.★



## அரசியலில் உலக அழகி

உலக அழகி ஐஸ்வர்யாராயும் அரசியலில் குதிக்க உள்ளார். இவரின் மாமனார் அமிதாப்பச்சனும், மாமியார் ஜெயப்பிரதாவும் ஏற்கனவே அரசியலில் குதித்துள்ளனர். எனினும் இவர்கள் இருவரும் சினிமாவில் பெற்ற வெற்றியைப்போல் அரசியலில் பெறமுடியவில்லை. ஜெயப்பிரதா இப்போதும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகவே இருக்கின்றார். இந்நிலையில் தன் அழகினாலும் நடிப்பினாலும் உலகில் உள்ளவர்களைத் தன் ரசிகர்களாக்கிய ஐஸ்வர்யாராயும் அரசியலில் நுழைவதற்குத் தயாராகிவருவதாகக் கூறப்படுகின்றது. அநேகமாக இம் முறை இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் அவர் போட்டியிடலாம் என நம்பப்படுகிறது. இந்நிலையில் ஐஸ்வர்யாராயைத் தமது கட்சியில் இணைப்பதற்குத் தலைவர்கள் பலரும் முயற்சித்து வருவதாகவும் தெரிகிறது.







## சுப்பிரமணியபுரத்துக்கு விருது

சுப்பிரமணியபுரம் படத்துக்கு மலையாள மாத்ருபூமி விருது கிடைத்துள்ளது. சுப்பிரமணியபுரம் படத்தின் திரைக்கதை சமீபத்தில் மலையாளத்தில் நூல் வடிவமாக வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றது. இதன் தொடர்ச்சியாக அண்மையில் கேரளாவில் புகழ்பெற்ற 'மாத்ருபூமி' என்ற பத்திரிகை சுப்பிரமணியபுரம் படத்தைக் கடந்த ஆண்டில் வெளியான படங்களில் இந்திய அளவில் பதித்த 'வழக்கமான தடத்தை உடைத்து புதுத்தடம் படம்' என்று தேர்ந்தெடுத்து விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. திருவனந்தபுரத்தில் கேரள திரையுலகமே திரண்டிருந்த இவ் விழாவில் கலந்து கொண்ட மலையாள சூப்பர் ஸ்டார்களான மம்முட்டியும், மோகன்லாலும் சுப்பிரமணியபுரம் படத்தின் இயக்குநர் சசிக்குமாரைத் தட்டிக் கொடுத்து வாழ்த்தியுள்ளனர்.

## கங்கை அமரன் ஆவேசம்



நகைச்சுவை நடிகர் விவேக்கை ஒரு பிடிபிடித்திருக்கிறார் கங்கைஅமரன். "பத்மஸ்ரீ விருது லட்சக்கணக்கான பணத்தை வீசி எறிந்து வாங்கக் கூடிய ஒரு பொருளாக மாறிவிட்டது. நடிகர் நாகேஷுக்கு வழங்கப்படாத விருது எனக்குத் தேவையில்லை என்று கூறி நடிகர் விவேக் தனக்கு வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதை தூக்கி எறிய வேண்டும். அப்படி அவர் செய்தால்தான் அவர் மானமுள்ள கலைஞன். பத்மஸ்ரீ விருதை விவேக் நிராகரித்தால் அவருக்கு நானே பாராட்டுவிழா வைப்பேன்" என்று ஒரு விழாவில் முழங்கியுள்ளார் கங்கை அமரன். அப்படி என்னதான் விவேக் மீது அவருக்குக் கோபம் என்று எவருக்கும் புரியவில்லை.

## இவர்களுக்கு டும்... டும்... டும்...



சின்னத்திரை நடிகர் சஞ்சீவுக்கும் சின்னத் திரை நடிகை ப்ரீத்திக்கும் திருமணம் நிச்சயமாகிவிட்டது. இவர்கள் இருவரும் எந்தவொரு சின்னத்திரைத் தொடர்களிலும் இணைந்து நடித்திராத போதிலும் எப்படியோ காதலாகிக் கசிந்து கல்யாணம் வரை வந்துவிட்டார்கள். நடிகர் சஞ்சீவ் இளைய தளபதி விஜய்யின் நெருங்கிய நண்பர் என்பதால் சஞ்சீவ்-ப்ரீத்தி திருமணத்தை விஜயே முன்னின்று நடத்தி வைக்கவுள்ளார். மார்ச் 12 ஆம் திகதி இவர்கள் திருமணம் சென்னையில் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலமர்வுகள்

மண்டுவில், மார்ச் 8

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கடமை புரியும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்கள், விசேட கல்வி ஆசிரியர்கள் ஆகியோருக்கான செயலமர்வுகள் நாளை மறுதினம் 10 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-59)

## விண்ணப்பம் கோரல்

கோப்பாய், மார்ச் 8

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் இலக்கியப் போட்டிகளுக்கான சுற்றுநிருபங்களும், விண்ணப்பங்களும் வலி.கிழக்குப் பிரிவு பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் திறந்த போட்டியாளர்கள் மேற்படிப் போட்டிக்கு சிறுகதை, பாடலாக்கப்போட்டி, கவிதைப்போட்டி ஆகிய தலைப்புக்களில் தாம் விரும்பிய எந்தத் தலைப்பையும் தெரிவு செய்து பங்குபற்றமுடியும்.

விண்ணப்பங்களைப் பிரதேச செயலகத்தில் பெற்றுத் தமது கிராம அலுவலரின் சிபார்சுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக ஆக்கங்களுடன் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸ் கேட்டுள்ளார். (203-72)


### விற்பனைக்கு

புதிய SAMSUNG 17 Inch CRT Monitor (1Year Warranty) விற்பனைக்குண்டு.
விலை. ரூ. 8000/=
T.P.:0773155100.
(83286)

### தவறிவிட்டது

'நிழல்' சமூக சேவை அமைப்பின் "பனர்" "Banner" அண்மையில் தவற விடப்பட்டுள்ளது. தகவல் தெரிந்தோர் தொடர்பு கொள்ளவும்.
T.P.:0774041904, 0779906483, 0602219055.

### விற்பனைக்கு

யமஹா நியூஸ் மேற் (Yamaha News Mate) மோட்டார் சைக்கிள், China புதிய ஜெனரேற்றர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:N.நிறஞ்சன், விசுவத்தனை வீதி, பண்ணாகம், சுழிபுரம். (காரைநகர், பிரதான வீதி, சித்தன் கேணிச் சந்திக்கு அருகில்). ஞாயிறு மு.ப.10 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை மட்டுமே பார்வையிடலாம். எனவே நேரத்தைக் கவனத்திலெடுத்து வீணான அலைச்சல்களைத் தவிர்க்கவும்.

### திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

### www.thaalee.com (இது ஒரு திருமணசேவை)

மணமக்களே!

இன்றுடன் உங்கள் திருமணப் பேச்சு வார்த்தையில் உள்ள சிரமங்கள், தாமதங்கள், சிக்கல்கள் என்பவற்றைத் தீர்த்துக்கொள்ள விரும்பினால் உடனே எமது www. thaalee. com என்கின்ற websiteஐ நாடுங்கள். இதில் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய படங்கள், ஜாதகம் மற்றும் சகல விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். மேலும் உங்களுடைய Profileஐ நீங்களே இதில் பதிவுசெய்து கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு எம்மை நேரடியாக நாடுங்கள். அல்லது படம், ஜாதகம், முழு விவரம் என்பவற்றை எமது விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் ஆவன செய்வோம்.
S.Sarma J.P
45/1, Madampitiya Road, Colombo - 15.
T.P: 2523127, 2520619

### STUDY IN INDIA

GARDEN CITY COLLEGE
BANGALORE UNIVERSITY DEGREES
*Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK*

Courses Offered


BCA Bachelor of Computer Application
B.Sc. Computer Science/Microbiology/Genetics Biotechnology/Fashion and Apparel Design
B.A. Journalism/B.Com Computers
BBM Bachelor of Business Management
BHM Bachelor Of Hotel Management
BPT Bachelor of Physiotherapy
LAW Bachelor of Law

* 5 Star status assessed by NAAC
* Super Graded Facilities, Hostels & Environment
* Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying
www.studyingcc.com
தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
14
★
12
★
1961



ஆண்டவன் திருவடியில்
18
★
02
★
2008

## அமரர் கந்தையா சிவதாசன் (சிவா)

*திதி:பூர்வபக்க திரயோதசி (08.03.2009)*

குடும்பத்தின் முதுகெலும்பாய் நீர்வேலியின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் தெய்வமே!
எத்தனை கனவுகளுடன் எம்மை பாசமுடன் வளர்த்தீர்கள்.
எம்மோடு நீங்கள் வாழ்ந்த எழில் நிறைந்த அந்த நல்வாழ்வு
எப்போது இனிவருமோ.
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்று அழைக்க நீங்கள் இல்லையே.
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயர்.
தவிக்கிறது போன உங்கள் உறவினுக்காக.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

பூதர்மட ஒழுங்கை,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (83272)

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்:
மனைவி. நிரோசலோஜினி,
பிள்ளைகள்: கனேலோஜன், அம்ருணா, ஹரிதன்.
குடும்பத்தினர்.

## குறைந்த கட்டணத்தில் UK யில் கல்வி

BA, BBA, MBA, BSc, MSc,
After graduation two years workpermit
We are the OFFICIAL REPRESENTATIVE of
Anglian College London
Grafton College of Management Sciences
Ireland
London
Apply Now
April 2009
Intake
SOUTH LONDON COLLEGE
Graduate School
Admission
Certificate Courses
Diploma Courses
Undergraduate Courses
Postgraduate Courses
and many more courses.....
VISA consultancy to any country any category
Fresh
Re Apply
Appeal

UK, USA, CANADA, AUSTRALIA, UKRAINE, POLAND, BELARUS FRANCE, GERMANY, ITALY, SWISS, RUSSIA, NEW ZEALAND ஆகிய நாடுகளுக்கான Student, Visit Business, Migration மற்றும் Settlement, Working holiday Maker ஆகியவற்றுக்கான (Visa) ஒழுங்குகள் மற்றும் Documentation செய்து தரப்படும்

எம் மூலம் விண்ணப்பித்து பூரண பலனை அடைந்தவர்களின் விபரங்கள் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்

சகல பாடநெறிகளும் குறைந்த கட்டணத்துடன் பயிலும் வசதி
அடிப்படை தகைமை O\L. IELTS அவசியமில்லை

குறிப்பு:-

✓ எமது நிறுவனத்தின் சகல விசா செயற்பாடுகளும் அனுபவம் வாய்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் சட்டத்தரணிகளால் செய்து தரப்படுகின்றன.
✓ எமது நிறுவனத்தின் மூலம் விசா விண்ணப்பம் செய்தவர்களும் அல்லது Appeal செய்தவர்களும் பரி பூரண பலனையே அடைந்திருக்கிறார்கள்.
✓ இதுவரை எம்மூலம் தொடர்பு கொண்ட எவருக்கும் Visa நிராகரிக்கப்பட்டதில்லை. இதுவே எமது நிறுவனத்தின் வெற்றி. எனவே Visa மற்றும் Appeal செயற்பாடுகளில் பலனை அடைய எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வருவதற்கான ஒழுங்கு செய்துதரப்படும்

PARANAN ASSOCIATES (PTE) LTD
403,1/1 Galle Road, Wellawatte, Colombo- 6. T.P:2551241 Fax:2507932
Mobile:0777-370292 www.paranan.com email: info@paranan.com


## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்

## வீதி வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

1. யாழ் அரச அதிபர் அவர்களின் பணிப்புரைக்கமைவாக வடமராட்சி கிழக்கு (குடத்தனை) உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட பின்வரும் வீதி திருத்த வேலைகளுக்கான மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | வீதியின் பெயரும் வகையும் | நீளம் (அடியில்) | அகலம் (அடியில்) | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு ரூபா | மீளளிக்க முடியாத கேள்வி வைப்பு ரூபா | ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | கற்கோவளம் புனிதநகர் இணைப்பு வீதி | 10 | 5265 | 67000.00 | 1000.00 | C-5 |
| 2. | வராத்துப்பளை புனிதநகர் இணைப்பு வீதி | 10 | 1050 | 18000.00 | 800.00 | C-8 |
| 3. | கற்கோவளம் கடற்கரை வீதி | 10 | 1755 | 25000.00 | 800.00 | C-8 |
| 4. | ஆனைவிழுந்தான் புனிதநகர் வீதி | 10 | 1025 | 14000.00 | 800.00 | C-10 |

2. கேள்விப்பத்திரங்கள் எதிர்வரும் 09.03.2009 ஆம் திகதி தொடக்கம் 24.03.2009 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் காலை 9.00 தொடக்கம் மதியம் 1.00 மணிவரை வழங்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களைப் பெறவரும்போது ICTAD பதிவு புத்தகத்தையும் (மூலப்பிரதி) கொண்டுவருவது மிகவும் அவசியமானதாகும்.
4. கேள்விப்பத்திரங்கள் 11.03.2009 ஆம் திகதி காலை 10.00 மணி தொடக்கம் 25.03.2009 ஆம் திகதி காலை 10.15 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
5. கேள்விகள் யாவும் 25.03.2009 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்விகளைச் சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிப்பது மிகவும் அவசியமானதாகும்.
6. பூரணப்படுத்தப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு இடதுபக்க மேல் மூலையில் வீதி வேலைக்கான கேள்வி எனக்குறிப்பிட்டு, வீதிகளின் பெயரையும் குறிப்பிட்டு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது இவ்வேலைக்கென பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடலாம்.
7. இவ்வேலைக்கான தாரினை சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரே கொள்வனவு செய்து பயன்படுத்த வேண்டும்.
8. (அ) மேலே (1) ஆவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள கற்கோவளம் புனிதநகர் இணைப்பு வீதியின் 2 ஆம் கட்டத் தாரிடல் வேலை தவிர்ந்த ஏனைய வேலைகள் அனைத்தையும் ஒப்பந்தம் கைச்சாத்தான திகதியில் இருந்து நூற்று ஐம்பது (150) கலண்டர் நாள்களுக்குள் முற்று முழுவதுமாக பூர்த்தி செய்ய வேண்டும். 2 ஆம் கட்டத்தாரிடல் வேலையினை ஒப்பந்தத் திகதியில் இருந்து இருநூற்று நாற்பது (240) கலண்டர் நாள்களுக்குள் முற்று முழுவதுமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
   (ஆ) மற்றைய மூன்று வீதிகளினதும் 2ஆம் கட்டத் தாரிடல் தவிர்ந்த ஏனைய வேலைகள் அனைத்தையும் ஒப்பந்த திகதியில் இருந்து நூற்று இருபது (120) கலண்டர் நாள்களுக்குள் முற்று முழுவதாக பூர்த்தி செய்ய வேண்டும். 2 ஆம் கட்டத்தாரிடல் வேலையினை ஒப்பந்தத்திகதியில் இருந்து நூற்றெண்பது (180) கலண்டர்நாள்களுக்குள் முற்று முழுவதுமாகப் பூர்த்திசெய்ய வேண்டும்.
   (இ) எக்காரணம் கொண்டும் காலநீடிப்புகள் அனுமதிக்கப்படமாட்டாது.
9. மேலதிக விபரங்களுக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

[illegible]
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.
(ஏ/557385)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச மகளிர் தினச் சிறப்புமலர் - 2009

## மகளிர் அபிவிருத்தி நிலையம் - யாழ்ப்பாணம்

பெண்களுக்கெதிரான வன்முறை என்பது சமுதாயத்தைப் பாதிக்கும் பிரச்சினையே!



குடும்ப வன்முறை பெண்களை அபிவிருத்தித் திட்டங்களில் பங்குபற்றும் சந்தர்ப்பங்களைத் தடுக்கின்றது.

'வீட்டு வன்முறைக்கு விடைகொடுப்போம்'

### அரச அதிபரின் ஆசிச்செய்தி

சர்வதேச மகளிர் தினம் உலகெங்கும் கொண்டாடப்படும் இந்நாளின் உன்னதமான நோக்கம் மகளிர் நிலையை மேம்படுத்தி அதன்வழி சமுதாயத்தை மேம்படுத்தலாகும். வீட்டிலிருந்து வியாபித்து வளரும் சமூக அமைப்பில் பெண்களின் முக்கியத்துவம் என்றுமே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டை, மொழியை, நதியை, கடலை ஏன் இயற்கைத் தோற் றங்கள் அனைத்தையும் உலகம் தாயின் வடிவிலேயே காணத்தலைப்பட்டது. அன்பின் வெளிப்பாட்டை மட்டுமே பெண்ணிடத்தில் கண்ட சமுதாயம் தனது பரிணாம வளர்ச்சியில் அவளிடம் அடங்கிக் கிடந்த அறிவையும் வெளிக்கொணர முற்பட்டதனால் இன்று சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் பெண்களின் ஆற்றல்கள் திறம்பட வெளிப்பட் டுள்ளன.

இன்று எமது சமுதாயத்தில் கல்வி, தொழில், சமூகம் சார்ந்த எத்துறைகளிலும் ஈடுபடுவதற்குப் பெண்களுக்குத் தடைகள் ஏதுமில்லை. இன்று பெரும்பாலான பெண்கள் தாம் பெற்ற கல்வியின் மூலம் தமது வாழ்வாதார வழிகளை வகுத்துக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றமையால் சுதந்திரமாய்ச் செயற்படுகின்றனர்.

தமது விடியலுக்கு வழியமைத்த கல்வியின் முக்கியத்துவத்தைப் பெண்கள் நன்குணர்ந்து கொண்டால் தமது உரிமைக்காக யாரிடமும் மன்றாடத் தேவையில்லை. அந்நாளில் தமது முன்னேற்றத்திற்குச் சவாலாய் அமைந்த எத்தனையோ தடைகளையெல்லாம் தாண்டி நிறைவாக வாழ நினைக்கும் பெண்களின் வாழ்வில் நம்பிக்கையை ஊட்டுவதாகவே சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் அமையவேண்டும்.

நெறி பிறழாது நின்று பெண்மையின் மேலான பண்புகளைக் காத்து நல்லதொரு சமுதாயத்திற்கு அடித்தளமிடும் தாய்க்குலத்திற்கு நன்றிக் கடனாய் சர்வதேசமும் கொண்டாடும் மகளிர் தினமான இன்று மகளிர் நிலையுயர்ந்து நிறைவு பெற என் நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

### 2009 சர்வதேச மகளிர் தினம்

நவீன விஞ்ஞான வர்த்தக உலகம் புரட்சிகரமான மாறுதல்களைக் கண்டு முன்னேற்றத்தின் உச்சாணிக் கொப்பில் நிற்கின்றது. மானுடம் விழிப்புப் பெற்ற, மனிதப் பெறுமானத்தின் மகத்துவம் மேலானது என்ற செய்தியை ஊன்றிக்கிரகிக்கவல்ல எவரும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உடற்கூற்றியல் ரீதியாக அன்றி வேறு பேதங்கள் காணமாட்டார்கள்.

ஆனால் காண்கின்றார்கள். அதை நாம் காண்கின்றோம். இன்னமும் பேதமைகளில் இருந்து நாங்கள் விடுபடவில்லை என்ற உண்மை நிலையை இது எமக்கு வெளிப்படுத்துகின்றது.

ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து உலகை மாற்ற வேண்டுமாயின் கூறுபட்ட வேறினங்களாக ஓரினம் இன்னோரினத்தை அடக்குதல் செய்கின்ற கருத்து நிலையில் நாங்கள் விழிப்புப் பெறவேண்டும். பெண் அடிமைத்தனத்திற்கு எதிராக உரத்து குரல் எழுப்ப வேண்டும்.

அகிலத்து மகளிரெல்லாம் ஓரணியில் நின்று பெண்ணின மேன்மைக்காக முன்னெடுக்கின்ற விழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

ப.கிரிதரன்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

### சாதிப்பவர்களாக பெண்கள் விளங்குகின்றனர்

''பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் பிறந்து வந்தோம்'' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க இன்று சர்வதேசத்தில் பெண்கள் தமக்கென ஓரிடம் பதித்துள்ளனர்.

வேதகாலத்திலும், பழந்தமிழர் காலத்திலும் பெண் கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டி வாழ்ந்துள்ளனர். பெண் ஒரு சமுதாயத்தை வழிநடத்திச் செல்லும் தலைவியாக இருந்தாள். கட்டுப்பாடுகள் என்ற பெயரால் பெண்களின் உரிமைகள் நசுக்கப்பட்டன. சமயத்தின் பெயரால் பெண்களை அடக்கி வைக்க முயன்றார்கள். பெண்களை பலவீனமானவர்களாகக் காட்டும் இலக்கியங்களைப் படைத்தார்கள். ''வரதட் சணை'' என்னும் கொடுமையைத் திணித்து பெண் கல்விக்கும் சாவு மணியடித்தனர். இன்று பெண்கள் விழித்துக் கொண்டனர். இன்றைய சமுதாயத்தின் சகல பக்கங்களிலும் பெண்களின் முக்கியத்துவம் ஓங்கி ஒலிக்கின்றது. கல்வி, அரசியல், நிர்வாகம், தொழில்துறை, விளையாட்டு, பாதுகாப்பு என எங்கும் பெண்களின் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன.

ஆண்களை விடப் பல மடங்கு பொறுப்புக்களைத் தானாக ஏற்று அனைத்திலும் சாதனை படைப்பவர் களாக பெண்கள் விளங்குகின்றார்கள். எல்லாப் பொறுப்புக்களையும் சிறப்புடன் நிறைவேற்றும் பெண்ணினத்தின் முன்னோடிகளை இன்று நம் சமூகத்திலே நாம் காண்கின்றோம். ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களுக்கு எந்தவித உரிமையும் கிடைப்பதில்லை எனக்கூறி வாழாதிருப் பதில் பயனில்லை.

ஆரம்பகாலத்தில் அறிவும் தலைமைத்துவமும் கொண்ட பெண் எவ்வழி முறைகளால் நலிவுபடுத்தப்பட்டாளோ அதற்கு எதிரான வழியில் சென்று மீண்டும் அந்நிலையை அடையவேண்டும். சர்வதேச மகளிர் தினமான இன்று நாம் கூடி காத்தி ரமான முடிவெடுப்போம்.

மகளிர் அபிவிருத்தியில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு செயற்பட்டுவரும் மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் இணைந்து திட்டமிடுவோம், செயற்படு வோம், வெற்றி காண்போம் .

திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்,
யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர்.

### ஆசிச் செய்தி

வருடந்தோறும் மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுவது யாவரும் அறிந்த விடயம். பெண்களின் உணர்வு பூர்வமான சிந்தனைகள், ஆற்றல்கள் என்பவற்றை வெளிப்படுத்த மகளிர் தினம் தளம் அமைத்துத் தருவது பெருமைக்குரியது. இந்நாளில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையம் எண்ண அலைகளைத் தொகுத்து வீசுவதும் நாம் அறிந்ததே.

அறிவில் தெளிவு, நெஞ்சில் உறுதி, அகத்தில் அன்பு கொண்ட பெண்ணினம் அடிமைப்பட்டு, அவலப்படுத்துவதனையே பெருமையாகக் கருதும் சமூகம் இன்றும் உள்ளது. ஒரு பெண் தனித்து வெளியில் செல்ல உள்ள தடைகள், பொருளாதாரத்தில் விடுதலை பெறமுடியாத சூழ் நிலைகள், திருமணத்தில் ஏற்படும் இடையூறுகள், ஆண்கள் பொருளீட்ட வெளியிடங்களிற்கு செல்லும்போது தனித்து வாழும் பெண்களிற்கு ஏற்படும் சிக்கல்கள் எனப்பலவாறாக சமூகத்தில் இழையோடிக்கொண்டுதான் இருக்கின்றன.

பெண்ணின் பெருமைகளை நமது கவிஞர்கள், துறவி கள், பெரியோர்கள் பாடியும், எழுதியும் உள்ளனர் என்பது வெளிப்படை. பல நிறுவனங்களும் இதில் கரிசனையாக உள்ளன. இவ்வரிசையில் காலத்தின் தேவைகருதி தற்காலத்தில் பெண்ணினத்திற்கு ஏற்படும் இன்னல்கள், இடைஞ்சல்களை உள்வாங்கி அவற்றிற்குரிய தீர்வுகள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள் என்பவற்றை முன்வைத்து, செயலாற்றி வருவதே யாழ்ப்பாணம், மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆகும். இது பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். எதிர்காலத்திலும் இந் நிலையத்தின் சேவைகள் செவ்வனே அமைய நல் ஆசிகளை நல்குவதில் பேருவகை அடைகின்றேன்.

திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம்
அதிபர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

### பெண்களைப் புறந்தள்ளிய அபிவிருத்தி பூரணமானதல்ல

மகளிர் தினம் மகளிருக்கு மட்டும் உரியதல்ல. இங்கே விழிப்படையவேண்டியது ஆண்களே. குடும்பக் கட்டுக்கோப்பில் தம்மைச் சார்ந்துள்ள பெண்களை ஒருபடி கூடத் தாண்டவிடாது தமது தலைமைத்துவத்தை தளரவிடாது பேணிவரும் அதேநேரம் பெண்கள் விடுதலை, சமத்துவம் பற்றி மேடைகளில் பேசுவதற்கும் கல்விசார் நிலையங்களில் கலந்துரை யாடுவதற்கும் ஆண்களும் தாம் சளைத்தவர்கள் அல்ல என்று முன்வருகின்றார்களே. ஐ.நாவின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் முன்னாள் பிரதி நிர்வாகப் பணிப்பாளர் ஸ்ரீபன் லூயிஸ் கூறிய கூற்று இங்கேயும் பொருந்துவதாக அமையும். 'அறுபது வருடங்க ளுக்குப் பின் ஐ.நா.தற்போது தான் உலகில் பால் நிலைப்பிரிவில் பெண்களும் ஆண்களும் உள்ளனர் என்பதைக் கண்டு பிடித்துள்ளது என்று கூறியுள்ளார்.

பெண்களின் முன்னேற்றத்தைப் பற்றி பிரகடனங்களையும் சிபார்சுகளையும் முன்வைத்து அங்கத்துவ நாடுகளைத் துருவித் துருவி கேட்கும் ஐ.நாவில் 40 வருடங்களின் பின்னரே ஓர் பெண் இணைச் செயலாளர் பதவியேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இன்று தனது விடுபட்ட குறைபாட்டை முன்னேற்றும் முயற்சியில் ஐ.நா.வில் தனியாக ஓர் பெண்கள் முகவர் நிலையம் அமைப்பதற்கான முன்மொழிவுகள் ஏற்பாடு செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவது பெண்களுக்கு மகிழ்ச்சியான விட யமே.

இதேபோல் அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட நிறுவனங்கள், கல்விசார் நிலையங்கள் யாவற்றிலும் பால்நிலையை அடிப்படையாகக் கொண்ட நோக்கில் இருபாலாருக்கும் சம சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்க ளும் வழங்குவது சமூகத்தின் இணை வாழ்விற்கு ஏற்புடையதாக அமையும். பெண்களைப் புறம் தள்ளிய அபிவிருத்தி பூரணமானதல்ல. திட்டமிடலா ளர்கள், கொள்கை வகிப்பவர்கள் கூட அரசியல் அவதானிகளாக மட்டும் இயங்காது பெண்களைத் திட்டங்களுள் இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பங் களுக்கு இடமளித்துப் பெண்களுக்கு உரிய வாய்ப்புக் களை வழங்குதல் இன்றைய தேவையாகும். கால ஓட்டத்தில் பெண்கள் பின்நிற்கப் போவதில்லை. அபிவிருத்தியாயினும் சரி, அரசியல் ஆயினும் சரி பெண்கள் ஈடுபடத் தயங்கப் போவதில்லை. மகளிர் தினத்தில் மட்டும் போடும் கோஷங்களல்ல இவை. சந்திக்கப்போகும் காலங்கள் தமது சுமைகளோடு சலிப்படையாத பெண்கள் தம்மைப் பலமுள்ள சக்தியாக இனங்காட்டிக்கொள்ள கிடைக்கும் சந்தர்ப்பங் களே இவை.

சரோஜா சிவச்சந்திரன்
பணிப்பாளர், மகளிர் அபிவிருத்தி நிலையம்.

### மகளிர்தினம் சர்வதேச மயமாக்கப்பட வேண்டும்

மனித உரிமைகளை அடித்தளமாக வைத்துக் கொண்டாடப்படும் நாளே சர்வதேச மகளிர் தினமாகும். குறைந்த சம்பளம், தொழிலாளர் பாதுகாப்பற்ற வேலைச்சூழல் முதலிய வற்றினைக் கண்டித்து 1909 தொடக்கம் 1911 ஆகிய ஆண்டுகளில் நியூயோர்க் நகரத்தில் பெண் தொழிலாளர் கூடித் தமது தேவைகளை முன் வைத்தனர். சமுதாயத்தின் எல்லா மட்டங்களையும் ஊடுருவிச் சென்ற இந்த ஒன்றிணைப்பு உலகெங்கும் பெரும் அலைகளை உந்தி விட்டது. 1910ஆம் ஆண்டு ஜேர்மன் தேசத்தைச் சேர்ந்த Clara Zetkin என்பவர், பெண்களின் தலைமைத்துவம், அரசியல் தீர்மான பீடங் களில் அவர்களது பங்களிப்பு, சமுதாயத்தில் பெண் களின் பொருளா தார சமத்துவம் என்பவற்றை முன்வைத்து மகளிர் தினமானது சர்வதேச மயமாக்கப்படவேண்டும் என்று வாதாடினார். அவரது அன்றைய முன்னெடுப்பு நூறு ஆண்டுகள் புரண்டோடியிருப்பினும் இன்றும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங் களாக அமைகின்றன.

2009ஆம் ஆண்டில் சர்வதேச மகளிர் தினம் எம் மத்தியில் கொண்டாடப்படும்போது உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

★பெண்கள் அன்றைய சவால்களை இன்றும் எதிர் நோக்குகின்றனரா?

★பெண்களது குரல் இன்று சமுதாயத்தில் தகுந்தளவிற்கு பலப்படுத்தப்பட்டுள்ளதா?

★பெண்களது உரிமைகள், மனித உரிமைகள் எனக் கணிக்கப்படுகின்றனவா?

★நாளாந்தம் பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளுக்கு தகுந்த மதிப்பு அளிக்கப்படுகின்றதா?

★சகல மட்டங்களிலும் தீர்மான பீடங்களில் பெண்களின் பங்களிப்பு தகுந்தளவிற்கு உள்ளதா?

★பெண்களிற்கு எதிரான வன்முறை, பலாத்காரம், பகிடிவதை, சேட்டைகள் இன்னும் சமுதாயத்தில் நிலவுகின்றனவா? சிந்திப்போம் ....

சிராணி மில்ஸ், அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி.

### யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆசிச் செய்தி

மகளிர் அபிவிருத்தி நிலையம் இவ்வருடம் மகளிர் தினத்தை இன்றைய தினம் கொண்டாடுவது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். மகளிர் தின நிகழ்வுகளை ஒவ்வொரு வருடமும் கொண்டாடி வருவதன் தொடர்ச்சி இது.

இந்நிறுவனம் தனது வழமையான நடவடிக்கைகளில் மகளிர் மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்கும் பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் மகளிர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டின் மகளிர் தின நிகழ்வும் இவர் களின் செயற்பாடுகளுக்கு மகுடம் வைப்பது போன்றதே. பல்வேறு சமூக கட்டுப்பாடுகளுக்கும், பாதிப்புக்களுக்கும், பாகுபாடுகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் கணிசமான பெண்களுக்கு இந்நிறுவனம் இக்கட்டான இச்சூழ்நிலையிலும் ஆற்றி வரும் சேவை அளப்பரியது, மகத்தானது, பாராட்டுக்குரியது.

இந்நிகழ்ச்சி சிறப்புறவும், நிறுவனம் வளர்ந்து தொடர்ந்து மகளிருக்கு சேவையாற்றவும் பிரார்த் திக்கின்றோம்.

சீ.வீ.கந்தையா சிவஞானம், தலைவர்
யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஆளப்பட வேண்டும்.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

எத்தனை இரவுகள்! ஒரு இரவு இலக்கியம்..... மறுஇரவு சமூகம்..... அடுத்த இரவு அரசியல்...... இப்படி எத்தனை கூட்டங்கள்! எத்தனை இரவுகள் இவனுக்காகக் காத்திருந்திருக்கின்றாள்! பேய் உறங்கும் சாமத்தில் தான் உறங்காது இவன் சுகமாக வீடு வந்து சேர வேண்டுமே என்று ஏங்கிக் கொண்டு கிடந்திருக்கிறாள். 'உங்களைத் தெரியாதே எனக்கு!' என்று மாத்திரம் சுருக்கமாக இப்பொழுது இடை யிடையே சொல்லிக் கொண்டிருக்கிறாள். இவன் இப்படித்தான் என்பது இவள் தீர்மானம். இவன் தன் சொல்லைக் கேட்டு நடப்பதில்லை என்று ஒரு வெப்பிசாரம் இவள் மனசில் என்றும் உண்டு. இப்பொழு தெல்லாம் சின்னவளை மெல்ல முன்னுக்கு வைத்து தான் தந்திரமாக விலகிக் கொண்டு விடுகின்றாள்.

இவன் முன் ரீப்போமீது தேநீரைக் கொண்டு வந்து வைக்கிறாள். ஏதிலார்போல் ஒரு தடவை இவன் முகத்தைப் பார்த்து விட்டு மெல்லத் திரும்புகிறாள். எப்பொழுதும் தேநீர் தன் கையில் இவள் தர வேண்டும் என்பது இவன் எதிர்பார்ப்பு. இவளுக்கு இது தெரியும்; தெரிந்தும் மனசில் இருக்கும் அதிருப்தியை வெளிக்காட்டுவதற்கு இவளுக்கு இப்பொழுது வேறென்ன வழி!

இவர்கள் அறியாததல்ல - காலம் கடந்து போவது மறந்து- இவன் தன் நண்பருடன் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்திருப்பான். இலக்கியகாரர்கள் பலாக்காய்ப்பால் போல ஒட்டிக் கொண்டுவிட்டால், விடுபட முடியாமல் இழுபடுகின்றவர்கள். இவன் வீட்டிலிருந்து புறப்பட்டுப் போன வேளை, எல்லாம் சுமுகமாகவே இருந்தது. சுமார் எட்டு மணி இருக்கும். இவன் நண்பரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்புவதற்குத் தயாரானான். அந்த வேளை பார்த்து பலாலியில் இருந்து ஷெல் வந்து விழுவதற்கு ஆரம்பிக்கிறது. மேலும் அரைமணி நேரம் தாமதம். அதன் பிறகு விரைவாக வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். மீண்டும் ஷெல் அடி தொடங்குகிறது. இடைநடுவில் தரித்து நிற்பதற்கு விரும்பாத இவன், வேகமாக வந்து சேருகின்றான்.

ஷெல் அடி, குண்டு வீச்சு, ஹெலித் தாக்குதல் என்றால் அண்ணா வந்து இவனைத் தேடுவது வழக்கம். புத்தகம் என்றும் நண்பர்கள் என்றும் இவன் எங்காவது அலைந்து கொண்டிருப்பான். 'என்ன பேச்சும்...... எழுத்தும்..... எல்லாத்தையும் விட்டிட்டி இந்தப் பிள்ளையளோட வீட்டிலே இருக்க வேணும்' என்பது அண்ணாவின் விருப்பம். குழப்பமான நேரங்களில் அவன் வீட்டோடு இருந்தால் அவருக்கு நிம்மதி. உலகம் மோனித்திருக்கும் வேளையிலும் நாய் குரைத்தால், இரண்டு வீடு தள்ளிக் குடியிருக்கும் அண்ணா எழுந்து வந்து இவன் வீட்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு போனார் என்பதெல்லாம் இவனுக்கெப்படித் தெரியவரும்! பிள்ளைகள் சொல்லுவார்கள். 'பெரியப்பாவின் மூத்த குழந்தை அப்பா', இவன் மனசு பிஞ்சுக் குழந்தையாக அப்பொழுது கெக்கலி கொட்டும்.

மேடைகளில் ஏறி நின்று பட்டி மன்றங்களில் காற்றுடன் இவன் சமர் புரிந்த காலம். அரங்க மேடையில் உயர நின்று நட்சத்திரமாக ஜொலித்து பூமிக்கிறங்கி வருவதற்கிடையில் நள்ளிரவு தாண்டிவிடும். எப்பொழுதும் இவனுக்குத் துணையாக வரும் நண்பர்களில் ஒருவராவது இவனைக் காத்து நிற்பார். இவன் வீடு நோக்கி அவரோடு புறப்படுவான். அந்தச் சமயத்தில் இவன் பின்னால் சயிக்கிள் ஒன்று தொடர்ந்து சிலபோது வந்து கொண்டிருக்கும். துணை வந்த நண்பர் அவர் வீடு வந்ததும் பிரிந்து போய விடுவார். இவன் தனித்து விடப்படுவான். திருடர்களும் அஞ்சி ஒடுங்கும் பயங்கர நடுநிசியில், தொட்டால் கையில் ஒட்டிக்கொள்ளும் மைஇருளில் இவன் போய்க் கொண்டிருப்பான். அப்பொழுதும் அந்தச் சயிக்கிள் சற்றுப் பின் தங்கி இவனுக்குக் காவலாகப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். வீட்டுக் 'கேற்'றில் இவன் வந்து தரித்து நிற்பான். அந்தச் சயிக்கிள் - அண்ணா - மெல்ல இவனைக் கடந்த வண்ணம் 'ஆ.....போய்ப்படு' என்று சொல்லிக் கொண்டு போகும்.

பள்ளிவிட்டு வீடு வந்தால் முப்பத்தைந்து வயதிலும் சின்னக் குழந்தையாக இவன் அம்மாவைத் தேடிக்கொண்டு ஓடுவான். அணிந்திருக்கும் சேட்டைக் கழற்றி ஆணியில் தொங்க விட்டுப் படுக்கையில் அம்மா அருகே அமர்ந்து விடுவான். அம்மா எழுந்து ஈன்ற பசு இளங்கன்றை நாவினால் நக்குவது போல, இவன் முதுகை மெல்ல மெல்லத் தடவிக் கொடுப்பாள். நித்தமும் இது நடக்கும்.

இவன் ஆத்மாவை வருடி விடுவது போல அந்தக் கரத்தின் மென்மையான வருடல்.... அதனை அடைந்து பரவசம் கொண்ட அந்தக் கணங்கள்.... அதற்காக இன்றும் இவன் உள்ளம் ஊமையாக ஏங்கித் தவிக்கும். அப்பொழுது தடவிக் கொடுத்த வண்ணம் என்றாவது அம்மா சொல்லுவாள்!

''அப்பூ...... நீ சிகரெட் நல்லாக் குடிக்கிறியாம்.... இரவிரவாகக் கிடந்து இருமிறியாம்......அண்ணா வந்து பேசிறான்''

இந்த அம்மா ..... எழுபத்தைந்தில் ஓர் இரவு இவன் பேசிக் கொண்டிருந்து, பின் வீடு திரும்புகின்றான். அதிகாலையில்...... இருள் கலையாத இருண்ட காலையில் இவனை வந்து எழுப்புகின்றார்கள். அம்மா சொல்லாமல் கொள்ளாமல் 'பக்'கென்று போய்விட்டாள். ஓ.......உறங்குவது போலுமல்லவா சாக்காடு! பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஐயா போனபோது வேதனையாகத்தான் இருந்தது. பொறுப்புக்களைச் சுமக்க வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சை இறுக்கியது. ஆனால் எல்லாமாக அம்மா இருந்தாள். அம்மா போன பிறகு இவன் எவருமில்லாத ஓர் அநாதையாகித் தனித்துப் போய் விட்டதான ஓர் உணர்வு நெஞ்சில் எழுந்து நின்றது. அப்பொழுது தான் எல்லாமாக இதுவரை அம்மா இருந்தாள் என்பது இவனுக்குள் முழுமை கொண்டது.

இப்பொழுது இவனுக்குமேல் அம்மா இல்லை; அண்ணா.

இவன் ஒரு தினம் பள்ளிக்குப் போகவில்லையெனில் மருமக்கள் வந்து வீட்டில் சொல்லுவார்கள். 'மாமா பள்ளிக்குடம் வரவில்லை அம்மா; எப்படியோ இது அண்ணாவுக்குத் தெரிந்துவிடும். இவனுக்கேதோ சுகவீனம் என்று எண்ணிக்கொண்டு அடுத்தவேளை 'தம்பி' என்ற வண்ணம் வந்து நிற்பார். பரிவுடன் இழைந்துவரும் அந்தக்குரலை மீண்டும் மீண்டும் கேட்க வேண்டும் போல, ஆவல் பொங்கி எழும். இடையிடையே 'பள்ளிக்குக் கள்ள மொழிக்க வேணும்' என மனசுக்கு அப்பொழுது தோன்றும், இந்தப் பொங்குதலுக்கெல்லாம்........

இவனுக்கு யார் இல்லை?

இவன் எதனைத் தேடிக் கொண்டிருக்கிறான்?

மனைவி, மக்கள், சகோதரிகள், மருமக்கள், பெறாமக்கள், மைத்துனர்கள் என்று.....ஒரு கணம் இவன் முகம் வாடிப் போனால், மீண்டும் இவன் முகத்தின் மலர்ச்சியைக் காண வேண்டுமென்று நெஞ்சு பொருமித் தவிக்கும் இதயங்கள்...... நெஞ்சுக்கு நெருக்கமாக எல்லாம் இருந்தும் இவன் எதனைத் தேடிக் கொண்டிருக்கிறான்!

வான் கடிதங்களில் தன்னை அஞ்சல் செய்து கொண்டிருக்கிறானே, இவனுக்கு இளையவன், சிறகுக்குள் வந்தொடுங்கும் குஞ்சுப் பறவையின் உள்ளுணர்வுகள் அல்லவா அவன் எண்ணங்களிலும் தலை காட்டுகின்றன!

அவன் உயர்ந்து பரந்த நிழல். இந்த நிழலின் கீழ் ஆறுதல் தேடும் இளைய உறவுகள் பல, ஆனால் இவனுக்கு......?

இவன் ஏகாங்கியாக எங்கெங்கோ சஞ்சாரம் செய்து கொண்டிருக்கின்றான்.

சின்னவன்கள் அறையிலிருந்து விறாந்தைக்கு வருகின்றார்கள். பெரியவளும் அவர்களைத் தொடர்ந்து வருகின்றாள். சின்னவள் சினம் ஆறி வாசற்படியை விட்டெழுகிறாள். எல்லோரும் வந்து இவனைச் சூழ்ந்து அமருகிறார்கள். இங்கு கவிந்திருந்த இறுக்கம் இன்னும் முற்றாகக் கலைந்து போகாத நிலை. சகசமாக இவர்கள் வாயிலிருந்து 'அப்போய்' இன்னும் வந்து விழவில்லை. இவன் எல்லோரையும் பார்த்து மெல்லச் சிரித்த வண்ணம், சின்னவள் முகத்தைக் குறிப்பாக நோக்குகிறான். பெரியவள், தம்பிகள், சின்னவளைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். இவளுக்கும் அடக்க இயலவில்லை. வாய்விட்டுச் சிரிக்கிறாள். அடுத்து வேறென்ன, 'அப்போய்'தான் என்று இவன் மனசு ஆவலுறும் வேளை......

மீண்டும் ஷெல் வந்து விழுகிறது. கண்மூடித்தனமான தாக்குதல், இடையறாது தொடர்ந்து வந்து விழுந்து கொண்டிருக்கிறது. வீட்டிற்கு அண்மையில் வந்து விழுந்து, வெடித்துச் சிதறுகிறது.

எல்லோரும் இவனைச் சுற்றி இருக்கிறார்கள். முன்போல பாதுகாப்புத் தேடி அறைக்குள் ஓடி ஒளிந்து கொள்ள இவர்கள் எண்ணவில்லை. இவனுக்கு அச்சமாக இருக்கிறது.

''பிள்ளையள் அறைக்குள்ளே போய் இருங்கோவன்''

''நாங்கள் போகயில்லை''

''ஏன்....?''

''நீங்கள் கூட இருக்கிறியள், எங்களுக்கென்ன பயம்!''

திரும்பவும் ஷெல்.

''பிள்ளையள், அப்பா வந்திட்டானே?''

''ஓம் பெரியப்பா''

''ஆ, கவனமாக இருங்கோ''

இவன் ஒரு தடவை சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்து உட்காருகின்றான். ✱

*(நன்றி:- சுதந்திர இலங்கையின் தமிழ்ச்சிறுகதைகள்)*

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 51

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | 4 | | 5 |
| 6 | | | 7 | 8 | | | |
| | | 9 | | | | 10 | |
| 11 | 12 | | | | 13 | | |
| | 14 | | | 15 | | | |
| 16 | | | 17 | | | 18 | 19 |
| 20 | | 21 | | | 22 | | |
| | | 23 | | | | | |

அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

I. இது தின்னக் கூலியா?
4. சேறு
6. நட்சத்திரத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படும் ஜோதிடச் சொல்.
7. ஈகையாளன்.
9. எதிர்பாராமல் நடப்பது/ விபத்துப் போன்றது/ அழிவை ஏற்படுத்துவது.
II. பூமி.
I3. தவறு.
I4. குளிரின் தன்மையை இப்படிக் குறிப்பிடுவோம்.
I5. சிறப்பு.
I6. கழித்தல் குறி.
I7. சேவை.
I8. பொருந்தாத/ தகுதியற்ற.
20. கடலை ஊடறுத்துச் செல்லும் பாலப் பாதை.
22. ஊர்வன வகையில் ஒன்று.
23. நோட்டுக்களை மாற்றிப் பெறுவது.

### மேலிருந்து கீழ்

I. வாசனைத் திரவியம்.
2. சுவை.
3. செய்தி/தகவல்.
4. பொறுத்தல்.
5. மீண்டு வா.
8. எவர்?
9. தீ/ஜுவாலை/ நெருப்பு.
I0. மாட்டிக் கொள்ளாமல் பிழைத்தல்.
I2. வசப்படுத்தும் முறை.
I5. மாடுகளின் கழிவு.
I6. சர்ச்சைக்குரிய நாட்டின் தலைவராய் இருந்தவர்.
I7. விடை.
I9. பாதத்தில்.
2I. பேணு/வளர்.
22. தோல் கருவி ஒன்று.

## போட்டி விதிகள்

1. வாசகர் யாரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும்முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 51**

நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,
இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (18.03.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 51 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 22.03.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவைவளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 49 இற்கானசரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1)தசாவதானி (5)ஆசி (7)குடும்பி (8)பிசாசு (9)புத்திரன் (11)தகா (13)தடம் (15)முதல் (17)மாவிலை(19)பாகம் (21)சுமை (22)துன்பதுயரம் (24)திணிவு (25)புசி

மேலிருந்து கீழ்
(1) தகுந்த (2) சாடு (3)வம்பு (4)தாபித்தல் (5)ஆசான் (6)சிசு (8)பிரம்மா (10)திட (12)காமுகன் (14) தலைமை (16) தம்பதி (18)விசும்பு (19)பாதுகை (20)தயவு (23)துணி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:49 இற்கான சரியான விடை களை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம்தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**வ.மன்னர் அன்ரனி,**
இல.26,சென்யேம்ஸ் கிழக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

**3 ஆம் பரிசு**
**வேலும்மயிலும் சுவேக்கா,**
மண்டான் மேற்கு,
கரவெட்டி.

**பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

(1)சா.இசைப்பிரியா,
இணுவில் மத்திய கல்லூரி,
இணுவில்.

(2)செல்வன் செல்வகுமார் ருத்மாங்கன்,
இல.186/2, சேர்.பொன்.இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(3) [illegible],
நடுத்தெரு,
[illegible].

(4)அ.லக்சனா,
கைதடி தெற்கு,
கைதடி.

(5) அருட் சகோதரி மேரி விமலினி,
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர்களும் ஆய்வுகளை நடத்தியே மூலிகைகளை இனங்கண்டனர் அவற்றைப் பேணிப்பாதுகாப்பது காலத்தின் தேவை

சித்தமருத்துவத்தில் பயன்படுத்தப் படும் மருந்துகளில் அதிகளவில் உள்ள டக்கப்பட்டிருப்பவை மூலிகைகளே! மூலிகைகளுடன் உலோகக் கலவை களும் தூய்மை செய்யப்பட்டு கலக்கப்படு கின்றன. பயன்படுத்தப்படும் மூலிகை வகைகள் தரமானவையாக இருந்தால் மட்டுமே அவற்றினது பயன் பாட்டை முழுமையாக நாம் பெற்றுக் கொள்ளலாம். இங்கே மூலிகைகளின் தரமாக அவற்றின் தூய்மை முதன் மைப்படுத்தப்பட்டுள்ளது.

தூய மூலிகைகளில் அவற்றில் செறிந்திருக்கும் எந்தவகை மருத்துவ குணமுள்ள இரசாயன மூலக்கூறும் குறித்த அளவிற்குப் பயன்படுத்தப் பட்டாலன்றி அந்த மூலிகைகளினால் எதுவித பிரயோசனமுமில்லை. தரக் கட்டுப்பாடு முழுமையாக அமுல்படுத் தப்பட்டால் தானே, தயாரிக்கின்ற மருந் தும் முழுமையாக வேலை செய்யும். சிகிச்சை பெற்றவர்களுக்கும் நோய் மாறி, முழுமையான நம்பிக்கை வரும்.

**மூலிகைகளின் தரத்திற்கு என்ன நடந்தது?**

''மூலிகைகள்'' எனப்படுபவை தாவரங்கள் கொண்டிருக்கும் இரசாய னச் சேர்வைகளின் அடிப்படை யிலேயே அவற்றின் மருத்துவக்குணங் களை வெளிப்படுத்துவனவாகும். இவ்வாறாக அநேகமான மூலிகை களிலுள்ள இரசாயனச் சேர்க்கைகள் இனங்காணப்பட்டிருந்தாலும், இன்னும் பலவற்றிற்கு இது என இனங்காணப்படாமல் இருக்கின்றன. எது எப்படி இருப்பினும், இப் பூமியில் வளரும் ஒவ்வொரு தாவரத்திற்கும் இம் மாதிரியான மருத்துவக் குணமுண்டு. அவற்றைச் சரியாக இனங்கண்டு சித்தர்கள் தங்களது மருத்துவமுறைகளின் தேவையின் பொருட்டு சேர்த்திருக்கிறார்கள். குறித்த நோய்க்கு குறிப்பிட்ட சில மூலிகைகளோ அல்லது பல மூலிகை களோ சேர்வையாக்கப்படுகின்ற நிலை யில், அவற்றின் வேலை செய்யும் திறன் அதிகரித்து இருப்பதற்கு அம்மூலிகை கள் தூய்மையானதாகவும் தரமானவை யாகவும் இருக்க வேண்டும்.

இங்கே மூலிகைகளின் தரத்தை நிர்ணயிப்பதில் அவை வளர்ந்துள்ள மண், சூழ்நிலை, பெறப்பட்டுள்ள தாவரத்தின் பகுதி, மூலிகைத் தாவரங் களில் காணப்படும் வேறுபட்ட இனங்கள், அவற்றிலுள்ள இரசாயனப் பொருளினளவு போன்ற அனைத்தும் அடங்கும். இவற்றையெல்லாம் சித்தர்கள் ஆராய்ந்தறிந்து, அனுபவப் பட்டு, திரும்பத் திரும்பப் பரீட்சித்து, அளந்தெழுதி வைத்திருக்கிறார்கள். அன்றைய சித்தர்கள் தாம் செய்த ஆய்வின் முடிவுகளை ஆவணமாக்கி அனைவரும் பயன்பெறும் வகையில் ஏடுகளில் எழுத்தாணி கொண்டு எழுதியும் வைத்திருக்கிறார்கள்.

**சித்தர்களின் ஆய்வுகள் விருதுகளை நோக்கியதல்ல!**

சித்தர்கள் தாம் செய்த ஆய்வு களைத் தமக்குரிய பாணியில் ஏடு களில் எழுதிவைத்ததை, அது ஒழுங்கு முறையாக விஞ்ஞான ரீதியில் செய்யப் படவில்லை என வில்லங்கத்திற்கு வாதிடுபவர்களும் இருக்கிறார்கள். இவ்வித ஆய்வு செய்வதற்கு அது பற்றிய படிப்பு வேண்டும் என்கிறார் கள். இது தலையிடியாக மாறி, இக்காலத் துச் சித்தர்களை ஆய்வு செய்யவிடாது தடுப்பதாகச் சித்தர்கள் மனம் வெதும்பு கிறார்கள். இவர்கள் தமக்கென ஆய்வு செய்யும் வழி தேடி அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

சித்தர்கள் செய்து கண்டதைச் சொல்லி வைத்தது ஏடாக இருப்பினும், அவையனைத்தும் முடிவான முடிவுகள். விஞ்ஞான ரீதியிலான விளக்கமோ அது பற்றிய அலசலோ இல்லாதிருப் பினும், அவர்கள் பெற்ற முடிவுகள் நிரந்தரமானவை; தீர்க்கமானவை; எப்போது திரும்பிச் செய்தாலும் அதே முடிவுகளைத் தருபவை. அதனாலேயே நோயிற்கான மருந்தை எந்தெந்த அளவுகளில் எடுத்து எப்படித் தயார்படுத்தி எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என அடித்துக் கூறியிருக் கிறார்கள். அதை அவர்கள் பாணியில் ''கை கண்டது'' என முடித்திருக்கிறார் கள். எவ்வளவு வருடங்கள் கழிந்தும், அவர்களது முறையைப் பின்பற்றும் போது அதே முடிவை, - பலனை தருகின்றதல்லவா! இதுவன்றோ சிறந்த ஆராய்ச்சி. அவர்கள், நம் முன்னோர் கள், சித்த சீலர்கள், வாழக்கைக்கு வழிகாட்டியானவர்கள்; ஆய்வுக்கும் வழிகாட்டியாகினார்கள். அவர்கள் கைப்படச் செய்யப்பட்ட ஆய்வுகள் எப்போதும் எக்காலத்திலும் தப்பிதமா காது. அவை எப்போதாவது விருதுகளுக் காகச் செய்யப்பட்ட ஆய்வுகளல்ல. மனிதம் வாழ்வதற்காகச் செய்து, சொல் லப்பட்ட ஆய்வுகள். செய்த ஆய்வின் முடிபுகளை ஏட்டில் எழுதிவைத்தார் கள். அவை பின்னர் நூலுருவான போது பரராசசேகரம், செகராசசேகரம் என இன்னும் பலவாக ஆகின.

**மூலிகைகளின் தரத்தில் வேறுபாடு உண்டா?**

நாம் செய்த மூலிகை வைத்தியம் சில வேளைகளில் வேலை செய்ய வில்லையே! தவறு மூலிகை வைத் தியத்தில் அல்ல. ஏனெனில் அதன் விளைவு, பயன்பாடு, நம்பகத்தன்மை என்பன ஏலவே பரீட்சித்து முடிவு காணப்பட்டவை. அப்படியாயின் தவறு மூலிகையில் இருக்குமா? சாத்தி யமிருக்கிறது! நாம் பெற்ற மூலிகை ''மூலிகையாக''இருக்கின்றதா? மூலிகை களுக்குள்ளும் - ஒரே இனத்துக்குள் ளும் வேறுபாடு இருக்கின்றதே! மேலே குறிப்பிட்டதைப் போல, அவை வள ரும் சூழல், மண், நீர் எனப் பலவற் றின் ஆதிக்கம் மூலிகையில் செறிந் திருக்கும் இரசாயனத்தில் (மருந்தில்) இருக்கும்.

நமது முனிவர்கள், சித்தர்கள் அந்நாள்களில் மூலிகைகளைத் தேடி மலையிலேறி அங்கே கற்களுக்கிடை யில் தாமாக வளர்ந்திருப்பதைத் தேடி யெடுத்து வந்து வைத்தியம் பார்ப்பார் கள்.எங்களூர் பரம்பரை வைத்திய ரொருவர் அடிக்கடி கூறியது எனக்கு இப்போதும் ஞாபகத்திலிருக்கிறது. ''கல்லுப் பூமியில் தேடியெடுத்தால் அது மூலிகை, கனகரின் தோட்டத் தில் தட்டியெடுத்தால் அது கத்தரிக் காய்'' என்பார் அவர்.

**மூலிகைகளும் வசதி வாய்ப்பும்**

மூலிகைகள் வசதிவாய்ப்புக் களைப் பெற்று வளரக்கூடாது. அப்படி வளர்ந்தால் அதிலுள்ள மருத் துவக் குணம், இரசாயன சேர்க்கை யினளவு குறைந்துவிடும். அநேக மான மூலிகைகள் அனைத்து மண்ணி லும் வளர்ந்தாலும் குறிப்பிடத்தக்க மூலிகைகளை அதற்கே உரித்தான மண்ணில், இடத்தில் மட்டுமே காணக் கூடியதாயிருக்கும். அந்த ஊரின் பெருமை சொல்வதில் மூலி கைகளும் இருக்கின்றன என்பது உண்மை. இம் மூலிகைகள் பற்றித் தெரிந்தால், அந்த அரிய பொக்கிஷங் களை மேலும் அழியவிடாது பேணிப் பாதுகாப்பதற்காக எங்களுக்கு தெரி வியுங்கள். மூலிகை வங்கியில் அவற்றைச் சேர்த்திடலாம்.

**மூலிகை வைத்தியமும் வசதி வாய்ப்பும்**

மூலிகைகள் வளர்வதற்கு வசதி வாய்ப்புக்கள் தேவையில்லையே தவிர, அந்த மூலிகைகளைப் பயன் படுத்திச் செய்யும் வைத்தியத்திற்கு, கற்றல் செயற்பாட்டுக்கு வசதி வாய்ப்புக்கள் தேவையென்பதைக் கற்றவர்கள் அறிய மறுப்பது விந்தை யிலும் விந்தை. விஞ்ஞானத்தின் கால்களை அசைத்து சுதேச வைத் தியத்தை மேம்படுத்துவதற்கு நாம் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். எமது பகுதிகளில் சுதேச வைத்தியத் துறை விருத்தியடையாததற்கு அதிலுள்ள கரிசனைக் குறைவும் ஒரு காரணம். கவனிப்பற்று ஒதுக்கிவிடும் தன்மை இன்னொரு காரணம். கிடைக் கின்ற மூலிகைகளினளவு குறைவது மூன்றாவது காரணம். இதற்கும் மேலே இந்த வைத்தியத்தைத் தொடருபவர் கள் எண்ணிக்கை குறைவதும், செய்ப வர்களில் நம்பிக்கையீனம் ஏற்படுவ தும் நான்காவது காரணம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள சித்த மருத்து வத்துறை, துறையாகவே நெடுநாளாக இருந்துவருவதும் அதற்கெனவொரு விடிவுகாலம் கனியத் தொடங்கி யிருப்பதும் நல்லதொரு செய்தி.

**ஒற்றுமை வேண்டும்**

பேதங்களை மறந்து, சுயலாபத்தை ஒருபுறம் வைத்து விட்டு, இயற்கை மருத்துவத்தின் தூண்களுக்கு வலுச் சேர்த்து அதனை நேராகக் தூக்கி நிறுத் தும் பொறுப்பு எங்களனைவருக்கும் குறிப்பாக எங்களூர் சித்தர்களுக்கும் உண்டு. நாம் அனைவரும் ஒற்றுமையாகச் சிந்தித்தால், திட்டமிட்டால், செயலாற்றினால் எமது சுதேச வைத்தியத்தின் பயனை அனைவரும் பெறவழி கிடைக்கு மல்லவா?




**ஏட்டில் எழுதிவைத்தவை நூல்களாகின்றன**

சித்த ஆயுர்வேத வைத்திய முறை கள் அனைத்தும் ஏற்கெனவே அவர் கள் எழுதிவைத்து விட்டுச் சென்ற ஏடுகளில் காணலாம். அவற்றில் ஒரு சில, நூல்களாகி பரராசசேகரம், செகராசசேகரம் என வைத்திய நூல் களாகிவிட்டன. தொடர்ந்தும் அன்று ஆய்வு செய்து எழுதிய ஏடுகளில் இன்று ஆய்வு நடக்கின்றது. இன்னமும் நடக்கவிருக்கின்றது.

சித்தர்கள் எழுதிய ஏடுகளைப் படித்தறியும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததுதான், என்னை இத்துறை யின் மீது ஆரம்பத்தில் அதீத நாட்டங் கொள்ள வைத்தது. 1992 ஆம் ஆண்டு விவசாயபீடம் கிளிநொச்சியில் இயங்கியபோது, அப்போதைய விவ சாய உயிரியல்துறைத் தலைவராக இருந்த கலாநிதி பாலசிவகடாட்சம் அவர்கள் தீவகப் பகுதியிலிருந்து கிடைத்த ஏடுகள் பலவற்றைப் பீடத் திற்கு எடுத்து வந்து அதிலுள்ள தகவல் களை நூல்வடிவிலாக்கும் முயற்சியில் இறங்கினார். சிவகடாட்சம் அவர்களது தந்தையார் வேலணையில் ஒரு பெயர் போன பரம்பரை வைத்தியர். தந்தை யிலிருந்து மகனுக்கு மட்டும் தொற்று கின்ற பரம்பரை வைத்திய ''பரம இரகசியம்'' பரிமாறப்பட்டிருப்பதில் சந்தேகம் எழ வாய்ப்பில்லை.

ஏடுகளை ஒவ்வொன்றாகப் பிரித்து அதிலிருந்தவற்றை விளக்கி எழுதி 1992 களில் தமிழ் தட்டச்சு இயந்திரத் தின் மூலமாகத் தட்டச்சுச் செய்தோம். அவ்வளவற்றையும் எழுத்துப் பிழையேதும் இல்லாது தட்டச்சு செய்து கொடுத்தவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அக்காலப்பகுதி யில் சிறந்த பெண் தொழில்நுட்பவிய லாளராக அனைவராலும் அழைக் கப்பட்ட மறைந்த திருமதி தேவகுமாரி சிவபாதம் அவர்கள். விவசாய உயிரி யல்துறையில் பணிபுரிந்தாலும் இந் நூலாக்கலில் முழுமையாகத் தட்டச்சுச் செய்து பணியாற்றிய இவரை 2005 இல் கருவறைப் புற்றுநோய் காவு கொண்டுவிட்டது.

**தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும்**

எழுதிய அனைத்தையும் தான் கனடாவுக்குப் புலம் பெயரும்போது எடுத்துச் சென்றதனால், அங்கிருந்து தொகுத்து இன்னும் பலவற்றை உட் புகுத்தி ''தமிழர் மருத்துவம் - அன்றும் இன்றும்'' என்ற நூலை உருவாக்கி யிருக்கிறார் கலாநிதி பாலசிவகடாட்சம் அவர்கள்.

பரம்பரை வைத்தியத்தைச் செய் பவரல்லர் என்பதால் இந்நூலை ஆய்வு நூலாகக் கொள்ள முடியுமே தவிர, ஒரு வழிகாட்டி நூலாகக் கருத முடியவில்லை என்ற குறையை நூல் பற்றிய ஆய்வில் ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருப்பதும், தமிழ் வணக்கம் சொல்லாது ஆரம்பிக்கின்ற நூலாக இதனைச் சித்த வைத்தியக் கலாநிதியொருவர் குறைபட்டுக் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. ஆயினும், இந்நூலின் மூலம் சுதேச வைத்தியத்தினதும் மேலைத்தேய மருத்துவத்தினதும் தமிழர் பண்பாட்டு டனான தொடர்பை வைத்திய கலா நிதி ஜமுனாநந்தா அவர்கள் சுட்டிக் காட்டிருப்பது வரவேற்புக்குரிய தாகின்றது. தவறுகளைக் கண்டு ஒதுங்கிவிடாது இனிவரும்போது திருத்திக்கொள்வது தானே கற்ற வருக்குப் பெருமை.

''தமிழர் மருத்துவம் அன்றும் இன்றும்'' ஒரு ஆய்வு நூலாக நூலாசிரியரால் இனங்காணப்பட் டிருப்பதுடன், அதில் தமிழர் மருத்துவ வரலாற்றை உலக வரலாற்றுடன் இணைத்து ஒப்பிட்டுப் பார்க்கப்பட் டுள்ளது. அடிப்படையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியலில் பட்டம் பெற்று, பின்னர் தாவர நோயிய லில் (Plant Pathology) கலாநிதிப் பட் டம் பெற்றவர் தான் நூலாசிரியரான பாலசிவகடாட்சம் அவர்கள்.

உலக வரலாற்றில், மருத்துவம் என்னும் தலைப்பின்கீழ் சரித்திரம் படைத்த மருத்துவர்களான, உலகம் அறிந்த முதலாவது மருத்துவர் இம் ஹோரெப் (கி.மு.2630), மேலைத் தேய மருத்துவத்தின் தந்தை ஹிப் போக்கிரட்டீஸ் (கி.மு.460 - 377), கிரேக்கத்தின் புகழ்பெற்ற இரு மருத் துவர்கள் ஹிரோபிலோஸ் மற்றும் ஏராசிஸ்ரரோஸ், ரோமாபுரிப் பேரறி ஞர் கலென் (கி.பி.130-121), சீன நாடி வல்லுநர் வாங் - சூ-ஹோ மற் றும் மருத்துவத்தின் இளவரசன் அவி சென்னா (கி.பி.980 - 270) போன்றோர் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளடக்கப்பட்டிருப்பது இந்நூலுக்குச் சிறப்பைத் தருகின்றது.

மேலும் பௌத்தமும் மருத்துவ மும், தமிழகத்தில் ஆயுள்வேதம், தமி ழகத்தின் சித்தர் மரபு, தமிழில் மருத் துவ நூல்கள், தமிழர் மருத்துவத்தின் தனிச்சிறப்பியல்புகள் என்பன பகுதி 1 இல் நிரற்படுத்தபட்டுள்ளன.

பகுதி 2 இல் உணவே மருந்து என்றும் பகுதி 3 இல் வீட்டு வைத் தியம் என்னும் முக்கிய பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை யனைத்துடன் மூலிகை ஆய்வு பகுதியும் இணைக்கப் பட்டுள் ளமை இந் நூலுக்கு மேலும் மெரு கேற்றுகின்றது.

(வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979, செவ்வாய் 2 இலுள்ள CAT, AAT, IAB(LONDON) படித்த பெண்ணுக்கு கொழும்பில் அல்லது வெளிநாட் டில் தொழில் புரியும் B.Sc/ CIMA படித்த மணமகனும் ,

1979, 1977 செவ்வாய் இல்லாத 60 இற்கு மேல் பாவம் கூடிய தொழில் புரியும் பட்டதாரி பெண்களிற்கு Doctor, Engineer, Accountant, மணமகனும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

*தொடர்பு:* "நாகபூசணி திருமண சேவை"
125, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
E mail: nakapoosany wedding @ gmail.com

## காணி விற்பனைக்கு

1. நீர்வேலி மத்தி அரச கேசரிப்பிள்ளையார் கோயில் அருகில் கிட்டப்பனை வளவு(உடையார் வளவு) 18 பரப்பு
2. நடு ஒழுங்கை நீர்வேலி மத்தி 08 பரப்பும், 07 பரப்பு காணியும்
3. விழாத்தி ஒல்லை தோட்டக்காணி 30 பரப்பும் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:* திருமதி இ.காராளசிங்கம்
15, ஜானகி லேன், பம்பலப்பிட்டி,
கொழும்பு.04
T.P:. 011 2583499


## கண்காட்சியும் விற்பனையும்

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அலங்கரிக்கப்பட்ட சேலைகள், தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் முற்பகல் 10.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கரித்தாஸ்- கியூடெக் நிறுவன வாழ்வாதாரத்திட்ட முகாமையாளர் ந.தவராஜகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் பிரதம விருந்தினராகவும், கரித்தாஸ்- கியூடெக் இயக்குநர் கி.கோ. ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

## என்றும் நினைவில் அழியா நினைவலைகள்

**25ஆம் ஆண்டு** **ஈராண்டு**




**குருநாதர் சின்னத்துரை**
(கிராம அலுவலர், பிரதேச செயலகம் தென்மராட்சி)

**சின்னத்துரை சிவசுதன் B.A. (Hons)**
(ஆசிரிய, வரணி மகாவித்தியாலயம்)

24.11.1933 ⟶ உயிராக ⟶ 10.02.1975
12.01.1984 ⟶ உயிருக்குள் ⟶ 08.03.2007

சிறுவயதில் அரியதாம் தந்தையை இழந்து
திக்குத் தெரியாது தவித்த எம் வாழ்வுப் பயணத்தில்
விடிவெள்ளியாய் நின்று எம்மை ஒளிரச் செய்தவனே!
உயிராக உமை நினைத்துக் கண்ணாக உமைக் காக்க
இடைநடுவில் எமை எல்லாம் மறந்து நீர் மட்டும் ஏன் அணைந்தீர்
தந்தையுடன் நீரும் என்றாவது ஒரு நாள்
மீண்டும் எம்மிடம் வந்திடுவீரென
வரும் வழியை விழி பார்த்து ஏங்கியே நிற்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி. (சி/557427) **குடும்பத்தினர்.**

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

தரம் 10, 11 இற்கான விசேட செயற்திட்ட செயலமர்வு நாளை திங்கட்கிழமை ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடை பெறும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (6-267)


வசீகரத் தோற்றத்திற்கு

**சந்தானலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)



வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பா'தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வளர்ச்சியடைதலைத் தடுக்கும். சர்மத்தை மிருதுவாக்கி ... எழில்மிகு வசீகர முகஅழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமச்சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரஞ்செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேற் விசத்தை நீக்கி, சருமத்தைச் சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

"சிவா நறுமணப் பூங்கா"
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED By: SANJEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO:REG. NO.A/L 250.


## மரண அறிவித்தல்



**தம்பியப்பா சிவசுப்பிரமணியம்**
(முன்னாள் உரிமையாளர், சுப்பையா அன்சன்ஸ் நிறுவனம்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது விக்கினேஸ்வரா வீதி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா சிவசுப்பிரமணியம் நேற்று (06.03.2009) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா- தையல்முத்து தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் திருச்செல்வம் (சுவிஸ்), வசந்தகுமாரி ஆகியோரின் பாமிகு தந்தையும் இரவீந்திரன் (சுவிஸ்), உதயதரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் மாமனும் திருசினி (சுவிஸ்), வேணுஜன் (சுவிஸ்), பவனிதன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), கிருபரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மாயனத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விக்கினேஸ்வராவீதி,
இணுவில் தெற்கு, இணுவில். (83323)

தகவல்:
ந.உதயதரன் (மருமகன்).

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் மாணிக்கம் மனோகரன் (மனோ)**
**(மனோ களஞ்சிய உரிமையாளர்)**

தாயின் மடியில்
28.04.1963

விதியின் பிடியில்
01.03.2007

திதி: திரயோதசி (08.03.2009)

அன்பு எனும் சொல் அதனை
பாசம் எனும் வலை வீசி
உறவு எனும் ஓடம் அதில்
உரிமையுடன் வாழ்ந்து வந்தோம்
விதி எனும் புயல் வீசி திசை மாறியது ஓடம்
அதில் நங்கூரம் என இருந்த உனை
இழந்தோம் நாம்
நடுக்கடலில் தத்தளிக்கும்
ஓடம் என ஆனோம்
எம் அகவிளக்கே உன் நினைவின் ஒளி
அதில் நாம் மெழுகுவர்த்தி!

43/3, வேலப்பர்லேன்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபெற்று வரும் போரில் வெற்றி பெறுவதைவிட இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமானதே!

என்னதான் இழப்புகள் ஏற்பட்ட போதிலும் இப்போது நடைபெறும் போரை முடிவுக்குக் கொண்டுவருவதானால் புலிகளுக்கு எதிராக முழு அளவில் போரிட்டுத்தான் ஆகவேண்டும் என்று பெரும்பாலான இலங்கையர்கள் கருதுகிறார்கள்.

இதை ஒரு கேள்விக்குரியதாக்கும் அரசியல்வாதிகள், புலிகள் தோற்கடிக்கப்பட்டதின் பின்னர் நாட்டில் ஒரு சுபீட்சமான காலம் தோன்றும் என்று நினைப்பவர்களால் புறந்தள்ளப்படுகிறார்கள்.

'கிறிஸ்ரியன் மொனிட்டர்' என்ற சஞ்சிகை இன்றைய நாட்டின் நிலைமை பற்றி எழுதியுள்ள கட்டுரையில் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளது.

யுத்தம் முடிவுக்கு வந்தால் பிளவுபட்டுக் கிடக்கும் இந்நாட்டின் சீர்கேடுகள் இல்லாதுபோய்விடுமா என்ற கேள்விக்குறியுடன் வரையப்பட்டுள்ள அக்கட்டுரை மலையகத்தைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இனசிக்கல்கள் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில் அவைகளை ஒரு முடிவுக்கு கொண்டுவருவதென்பது இராணுவ வெற்றியைவிடக் கடினமாகவே இருக்கும்.

### நம்பக்கூடிய நிலையில் இல்லை

புலிகளின் வன்முறைகளையும் அரசியல் இலட்சியங்களையும் எதிர்ப்பவர்களான தமிழர்களுக்கும் கூட புலிகளின் வீழ்ச்சி மிக அருகிலேயே இருக்கிறது என்பது கசப்பான விடயமாகவே தோன்றுகின்றது. வருடக் கணக்காகப் புறக்கணிப்பை மேற்கொண்டு வந்துள்ள சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கத்தை ஒரு சிலரே நம்பும் நிலையில் இருக்கின்றார்கள்.

'' இது ஒரு ரயில் வண்டி போன்றது. அதில் முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று இருப்பது போல'' என்று கூறினார் ஹட்டனில் தொழிலாளர் நிறுவனங்களின் அமைப்பாளரான ஒடையா ராமையா என்பவர். 1948ஆம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இங்கு இனப்பிரச்சினை நிலவி வருகின்றது.

ஆங்கிலம் பேசும் ஆட்சியாளர்களால் புறக்கணிப்பட்ட நிலையிலிருந்த சிங்கள மொழியானது அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது.

1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதானது தெற்கில் பெரும்பான்மையாக வாழும் சிங்களவர்களுக்கும் வடக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்களுக்கும் இடையில் பெரும் பிளவை ஏற்படுத்தியது. இதன் விளைவாக 1970இல் கூட்டாட்சி கோரி முன்வைக்கப்பட்ட பின்னர் ஆயுதப் போராட்டமாக விரிவு பெற்றது. பின்னர் மொழிக் கொள்கை மாற்றப்பட்டுவிட்டதாக அரச அதிகாரிகள் கூறுகின்றார்கள். தமிழும் அரசகரும மொழியாக்கப்பட்டது. பொதுப் பாடசாலைகள் சிலவற்றில் அம்மொழி கற்பிக்கப்படுகின்றது. தமிழர்கள் தமது இந்துக் கோயில்களில் சுதந்திரமாக வணங்குகின்றார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ கோயில்களை வணங்குகிறார்கள். (சிங்களவர்களில் பெரும்பான்மையும் பௌத்தர்கள்)

## அரசாங்கத்தை நம்பும் தமிழர்கள் மிகச் சிறு வீதத்தினரே..... ர்யில் பயணத்தின் 1ஆம் பெட்டி, 2ஆம் பெட்டி நிலை தொடருமாம்

### கொழும்புக்கு வரும் தமிழர் நிலை

தமிழர்கள் புலிகள் கூறுவது போல் ஒடுக்கப்பட்டவர்களாய் இருந்தாலும் வணிகத் துறையில் தமிழர்கள் சிறப்பாக இருக்கிறார்கள். கொழும்பில் நன்கு வசதியாக வாழ்கின்றார்கள் என்று வாதிக்கப்படு கின்றது.

தமிழர்கள் இனக்கொலை செய்யப்படுகிறார்கள் என்றால் தமிழர்கள் ஏன் கொழும்புக்கு வருகிறார்கள் என்று பாதுகாப்புத்துறைச் செயலாளர் அண்மையில் கேட்டிருந்தார்.

ஆனால் கொழும்புக்கு வந்த நம் தமிழர்கள் சிங்களவர் போலன்றி, பொலிஸில் தம்மைப் பதிவுசெய்யவேண்டும். சோதனைச் சாவடிகளில் சோதனைக்குள்ளாகவேண்டும். அடிக்கடி நடக்கும் ஆள்கடத்தல்களுக்கு தமிழர்களே உள்ளாக்கப்படுகிறார்கள். பாதுகாப்பு இன்மையுடன் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் உள்ளாகிறார்கள்.

இம்மாதிரிச் சம்பவங்கள் கொழும்புக்கு வெகுதூரத்திலுள்ள ஹட்டன் போன்ற தோட்டப்பகுதி நகரங்களில் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அழுக்குப் படிந்த ஆடைகளைக் குறுக்கிக் கட்டிக்கொண்டு தமிழ் தொழிலாளர்கள் மலைச்சரிவுகளில் ஏறி இறங்கி மரங்களைக் கவ்வாத்துச் செய்வதிலும் கரும் பச்சை நிற தேயிலைக் கொழுந்துகளைப் பறித்தெடுப்பதிலும் ஈடுபட்டிப்பதைக் காணலாம். அவை ரஷ்யா, மத்திய கிழக்கு போன்ற நாடுகளின் கொள்முதலாளர்களுக்கு விற்கப்படும்.

நாட்டில் தொடரும் உள்நாட்டுப் போரானது ஒருபோதும் இந்த மலைப்பிரதேச நகர்ப்பகுதிக்கு வரவில்லை. தற்கொலைக் குண்டுத்தாரிகள், இராணுவ அட்டூழியங்கள் எதுவும் இங்கு காணப்படுவதில்லை.

### ஓரங்கட்டுதல் தொடர்கிறது

ஆனால் இலங்கைத் தமிழர்களைப் பல வருடங்களாக வாட்டி வரும், ஓரங்கட்டுதலும் எரிச்சல் மூட்டுதலும் தொடர்ந்து இங்கேயும் புகைந்துகொண்டுதான் இருக்கிறது. ஒவ்வொருநாளும் ஏதாகிலும் சிறு சலசலப்பு: தனி ஆட்சிக் கோரிக்கையல்ல, பொலிஸாரின் புறக்கணிப்பு, அதிகார ஆவணங்கள் சிங்கள மொழியில் மட்டும் வழங்கப்படுவது போன்ற விடயங்கள்.

இம்மாதிரிச் சம்பவங்கள் பிளவுபட்டுள்ள மனப்போக்கினை மேலும் புண்படுத்துவது மட்டுமன்றி குணமாக்க உதவாது என்று கூறுகிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பி.பி.தேவராஜ்.

தமிழர்கள் மத்தியிலும் பிரிவினை உண்டு தெற்கு வடக்கு என்ற வகையில். ஆனால் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையிலான பிளவுதான் நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணம்.

### மலையகத் தமிழர்களிடம் நாட்டுப்பற்று இல்லாமற் போகவில்லை

சிங்களவர்கள் தாம் பெரும்பான்மையினராக இருப்பதால் நாடு தமக்குத்தான் சொந்தம் என்று நினைக்கிறார்கள். இது ஒரு சிங் களவர் நாடு என்பதைத் தமிழர்கள் உணரவேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

மலையகத்தில் தமிழர்களில் ஆண்கள் விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்படும் அபாயத்தை எதிர்நோக்குகிறார்கள். கைதுசெய்யப்பட்டபின் சிங்களத்திலான வாக்குமூலங்களில் கையெழுத்திட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது என்கிறார் பி.மோகன் சுப்பிரமணியம் என்ற சமூக சேவையாளர்.

வரலாற்றினாலும், பூகோள அமைப்பு ரீதியாகவும் வேறுபடுத்தப்பட்டுள்ள இவர்கள் புலிகளின் தனி ஆட்சிக் கோரிக்கையை ஒருபோதும் அரவணைத்தது கிடையாது. தொழிலாளர்களுக்கு அதிக சம்பளம் கோரி அவர்களின் தலைவர்கள் சிங்கள அரசுகளுடன் பேரம் பேசுவார்கள். இருந்தாலும் அவர்களுக்கும் நாட்டுப்பற்று இல்லாமல் போய் விடவில்லை. சிங்களவர்களிடம் கதைக்கும் போது அவர்கள் கூறுவதெல்லாம் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டால் நாங்கள் சுதந்திரமாக இருக்கமுடியும் என்று. ஆனாலும் புலிகள் இருப்பதால்தான் நாங்கள் மதிப்போடு இருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன் என்று கூறினார் சுப்பிரமணியம்.

### சிமோன் மொன்ட்லேக்

1980களில் ஹட்டன் நகரை வன்முறை உலுக்கியது. அது சிங்கள இளைஞர்களின் ஜே.வி.பி. ஆயுதப்புரட்சி. அவர்கள் மலையகத்தில் பல தேயிலைத் தொழிற்சாலைகளைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் இராணுவத்தினால் கொல்லப்பட்டார்கள்.

கித்துல்கல என்ற இடத்தைச் சேர்ந்த ஆனந்த ரட்ணசிறி என்பவர் பின்வருமாறு கூறினார்:

தமிழர்களுக்குச் சம உரிமை உண்டு. அவர்கள் குறைபடுவதற்கு ஒன்றுமிருக்காது. அமைதியும் அதன் பயன்பாடும் விரைந்து வந்துகொண்டிருப்பதாக எல்லாச் சிங்களவர்களையும் போலவே அவர் கருதுகிறார். போரை நிறுத்த விரும்புகிறோம். பயங்கரவாதத்தை ஒழிக்க விரும்புகிறோம். அதன் பின் எல்லோருக்கும் அரச பணிகள் வழங்கப்படும் - என்றார் அவர்.

(நன்றி: கிறிஸ்டியன் மொனிட்டர் கருத்து)

# பாகிஸ்தானில் இயங்கும் தீவிரவாதிகளுக்கு இலங்கை வீரர்கள் மீது என்ன கோபம்?

கிரிக்கெட் விளையாட்டுத்துறை முன் எப்போதுமே கண்டிராத அதிர்ச்சியும் கவலையும் அளிக்கும் நிகழ்வு ஒன்றினை சில தினங்களுக்கு முன் பாகிஸ்தானில் எதிர் கொண்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் போட்டிகளில் கலந்துகொள்ள சென்றிருந்த இலங்கை அணியினரை இலக்கு வைத்து பயங்கரவாதத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் இலங்கை அணியின் தலைவர் மகேல ஜயவர்த்தன உட்பட பலர் காயமடைந்துள்ளார்கள்.

சம்பவம் நடந்த கையோடு இலங்கை வீரர்கள் தமது விளையாட்டுத் திட்டத்தை இரத்துச் செய்து கொண்டு நாடு திரும்பியிருக்கிறார்கள்.

காயமுற்று நாடு திரும்பிய வீரர்களை




விமான நிலையத்தில் வரவேற்கச் சென்ற அவர்களின் குடும்பத்தினர்- மனைவிமார், பெற்றோர் மற்றும் குழந்தைகள் அனைவருமே கதறி அழுது கண்ணீர்விட்டு வரவேற்ற காட்சிகள் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் இடம் பெற்றிருந்தன. அவைகளைப் பார்த்த இரசிகர்களும் கண்ணீர்விட்ட காட்சி நெஞ்சை உருக்குவனவாய் இருந்தன.

குண்டுகளால் தாக்குவதென்பது சாதாரண விடயமல்ல. தாக்குபவர்கள் தமது நோக்கம் நிறைவேறிவிட்டதாக திருப்தியடையலாம். தாக்கப்பட்டவர்கள் இறந்து போகலாம் அல்லது மறந்தும் போகலாம். ஆனால் அவர்களின் நெருங்கிய உறவினர்களின் நெஞ் சங்களில் அவை பசுமரத்து ஆணி போல பதிந்து போய்விடும். அதை அவர்கள் ஒருபோதும் மறந்து போக மாட்டார்கள். எதற் கெடுத்தாலும் குண்டுகளாலேயே தீர்வுகாண முயல்வது இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகிவிட்டது. இதை நினைவில் கொள்வது அவசியம்.

பாகிஸ்தானில் இயங்கும் தீவிரவாதிகளுக்கு இலங்கை வீரர்கள் மீது என்ன கோபம்? அவர்களை பாகிஸ்தானில் விளையாட வேண்டாம் என்று கேட்பதாயின் அதற்கு வேறு எத்தனையோ வழிகள் உண்டு.

அவைகளை விடுத்து பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தவேண்டிய அவசியம் என்ன? இதற்குத் தாக்குதல் நடத்தியவர்களால்தான் பதில் சொல்ல முடியும்.

லாகூரில் உள்ள கடாபி விளையாட்டுத் திடலுக்கு பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது இலங்கை வீரர்கள் இலக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். நல்லவேளை பஸ்ஸின் தளத்தில் விழுந்து படுத்துக் கொண்டதால் சிறு காயங்களுடன் தப்பியிருக்கிறார்கள்.

பஸ்ஸின் ரயர்கள் மீது துப்பாக்கியால் சுட்டு அதனை நிறுத்த முயற்சி நடந்துள்ளது. பஸ் நடத்துநர் அதனை சாதுர்யமாகச் செலுத்தி விளையாட்டுத் திடலுக்குப் பத்திரமாகக் கொண்டு போய் நிறுத்தியுள்ளார். அவரை இலங்கை வீரர்கள் வெகுவாகப் பாராட்டி நன்றி தெரிவித்திருக்கிறார்கள்.

பாகிஸ்தான் பொது மக்களிடமிருந்து எதுவித எதிர்ப்பும் இலங்கை வீரர்களுக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக அன்பும் ஆதரவுமே நிலவியுள்ளது. பஸ் நடத்துநரின் செயற்பாடே இதற்குச் சான்று பகர்கின்றது.

எதுவானாலும், பயங்கரவாதம் கட்டுக்கடங்காமல் நடைபெற்றுக் கொண்டி ருக்கும் ஒரு நாட்டுக்கு நமது கிரிக்கெட் வீரர்களை அந்தரப்பட்டு அனுப்பி வைத்தது புத்திசாதுர்யமானதா-கால சூழ்நிலைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டதா என்றெல்லாம் இப்போது கேள்விகள் எழுப்பப்படுகிறன.

கிரிக்கெட் துறையின் ஆரம்பகாலம் தொட்டு அனுபவமுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தனது அணியை இப்போது பாகிஸ்தானுக்கு அனுப்புவது பொருத்தமில்லையென்று முடிவு செய்திருந்தது.

பக்கத்து நாடான இந்தியாவும் தமது அணியின் பாகிஸ்தான் பயணத்தை இரத்துச் செய்திருந்தது.

மும்பையில் அண்மையில் இடம் பெற்ற பயங்கரவாதத் தாக்குதலையடுத்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நேரடி மோதல் உருவாகக்கூடிய நிலை உருவாகி இப்போது தணிந்துள்ளது. ஆனால் முறுகல் நிலை தொடர்கிறது. எனவே அவர்கள் தமது அணியினரை பாகிஸ்தானுக்கு அனுப்பாமல் தவிர்த்தமை இயற்கைதான். ஆனால் மும்பை சம்பவத்தின் ஈரம் காய்வதற்கு முன்னரே இலங்கை ஏன் முண்டியடித்துக் கொண்டு தனது அணியை அனுப்ப முடிவெடுத்தது.

இலங்கை அரசின் மீது அந்த நாட்டு அரசு நட்புப் பாராட்டுவது புதிய விடய மல்ல. பங்களாதேஷ் பிரச்சினையின் போதே பாகிஸ்தான் படைகள் இலங்கை வழியாகப் போய்வர உதவி செய்த நாடு இலங்கை. அப்போது பதவியிலிருந்த சுதந்திரக்கட்சியின் வழித்தோன்றல்கள் தான் இன்றும் இங்கு பதவியில் இருக்கிறார்கள். ஆகவே பாகிஸ்தான் அரசும் மக்களும் இலங்கை மீது இன்றும் நட்புடன் இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது சரிதான்.

### சிபெரு

ஆனால் அதே நட்பை அந்நாட்டு பயங்கரவாதிகளும் கொண்டிருப்பார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கான ராஜதந்திர முறை களில் விளையாட்டுத் துறையும் ஒன்று என்று கருதப்படுகிறது. அந்தவகைகளில் நாடுகளுக்கிடையில் நட்புறவை வளர்க்கும் ராஜதந்திர தூதுவர்களாக உயர் அந்தஸ்திலுள்ளவர்களாகக் கருதப்படுபவர்கள் கிரிக்கெட் வீரர்கள். சில பலவேளைகளில் உணர்ச்சி வசப்படும் தரம் குறைந்த இரசிகர்கள் கல்வீச்சுப் போன்ற காடைத்தனங்களில் இறங்கினாலும் வீரர்களோ அவர்கள் சார்ந்துள்ள நாடுகளோ அதனைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை.



ஆனால் பயங்கரவாதம் தலைவிரித்து ஆடும் ஒரு நாட்டுக்கு ராஜதந்திரத் தூதுவர்கள் அந்தஸ்தில் வைத்து மதிக்கப்படும் வீரர்களை சாதாரண காலத்தில் போல் அனுப்பிவைக்க முடிவு செய்தது சரிதானா என்று அதிகாரிகள் இப்போது மீள்பரிசீலனை செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

அதேபோல் இன்னொரு நாட்டின் தூதுவர்கள் நிலையில் வருகை தந்த விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்டு விட்ட தொய்வு நிலைகள் பற்றி பாகிஸ்தான் அதிகாரிகளும் ஆராய்ந்து பார்க்கவேண்டிய கால கட்டமும் உருவாகியுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் இந்தியாவை சம்பந்தப்படுத்தவும் தமிழீழ விடுதலைப் புலிகளை சம்பந்தப்படுத்தவும் சில எத்தனங்கள் இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைதாகியுள்ளவர்களிடமிருந்து பல விடயங்கள் வெளிவர இடமுண்டு. இந்நிலையில் அவர் மீதும் இவர் மீதும் பழிகளைப் போடுவதை விடுத்து சம்பவத்தின் உண்மை நிலையைக் கண்டுபிடித்து அதன்மீது நடவடிக் கைகளை மேற்கொள்ள முயல்வதே சிறப்புடையது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குலசிங்கம் தயாராணி



கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலசிங்கம் தயாராணி நேற்று முன்தினம் (06.03.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் குலசிங்கத்தின் (சிமெந்து கூட்டுத்தாபனம்; காங்கேசன்துறை) அன்பு மனைவியும், அகிலனின் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிறிதரன்- பரமேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான கனகசபை-இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், பரமேஸ்வரி, ஜெயந்திகுமார், துஷ்யந்தி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற புஷ்பராணி மற்றும் யோகம், கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற் எடுத்துச் செல்லப்படும்.-

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சர்வானந்தன் ஆனந்தி
(சுவிஸ்).

கட்டுடை, மானிப்பாய். (83332)

## திருமதி இரத்தினம் பவளரத்தினம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பவளரத்தினம் கடந்த 05.03.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்-தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசுவின் அன்புச் சகோதரியும் இரத்தினத்தின் அன்பு மனைவியும், நந்தினி(ஜேர்மன்), சபேசன், நிமலன், கமலன் (பிரான்ஸ்) ஆகியோரின்அருமைத் தாயாரும், கனகராஜா (ஜேர்மனி), உஷாநந்தினி, கோமதி(இந்தியா), பவானி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், நந்தா(ஜேர்மனி), நிசாந்தினி (ஜேர்மனி), நிரோஷன்(ஜேர்மனி) இந்து (இந்தியா), தினேஷ் (இந்தியா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.இரத்தினம் (கணவர்),
சபேசன் (அப்பன்-மகன்).

நீர்வேலி வடக்கு,
பரலோகமாதா வீதி,
நீர்வேலி.

### மணமகள் தேவை

யாழ்.இந்து குடும்பம், 32வயது விசாகநட்சத்திரம் B.Sc. Civil Engineer, USA citizen மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. செவ்வாய் தோஷம் இல்லை. மொத்தக்கிரக பாவம் 29. இது ஒரு திருமண சேவை (www.thaalee.com) profile number 3264 web site இல் ஜாதகம், படம் என்பன உண்டு. T.P.NO: 2523127, 2520619

### மணமகள் தேவை

லண்டனில் வசிக்கும் 35 வயது மதிக்கத்தக்க 40 வயது கத்தோலிக்க உயர் குல மணமகனுக்கு மணமகள் தேவை. விரும்பியோர் விண்ணப்பிக்கவும்.

மே/பா உதயன்
விளம்பர இல:- 3179

### ஐங்கரன் திருமண சேவை

எம்மிடம் UK Citizen 31, 38 வயது கனடா Citizen 40 வயது, ஜேர்மனி Citizen 43 வயது, கொலண்ட் Citizen 36 வயது, பிரான்ஸ் Citizen 27, 30 வயது, சுவிஸ் Citizen 35, 42 வயது மணமகன்மார் உள்ளனர். இவர்கள் விரைவில் கொழும்பு வரவுள்ளனர். மணமகள் அமையும் வரை எவ்வித பதிவுக் கட்டணமும் அறவிடப்படுவதில்லை. 24 மணி நேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு:-
00447535384166, 00447508295863
Fax No:. 00442086810707, 00442086720673

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

மானிப்பாய் வீதியில் ஒரு யூரியா பாக்கில் சைக்கிள் உதிரிப் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகளைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: S.M.றஸ்மி
இல. 29, நாவலர் வீதி, சோனக தெரு யாழ்ப்பாணம்.
T.P:. 0716634763

### தவறிவிட்டது

கடந்த 06.03.2009 வெள்ளிக்கிழமை WP.GS 2644 இலக்க மோட்டார் சைக்கிளின் பதிவுப்புத்தகம், காப்புறுதி மற்றும் வரிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் Dr.K.T.சிவபாதம், 32, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரியிலோ அல்லது 0777 179268 எனும் இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளவும்.

### வீடு வாடகைக்கு

யாழ்.நாவலர் வீதியில் பிறவுண் றோட் சந்திக்கும் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0774528818

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் சபேசன் (மகான்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வவுனியா பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி வல்லிபுரம் அவர்களின் மகன் வல்லிபுரம் சபேசன் நேற்று முன்தினம் (06.03.2009) வெள்ளிக்கிழமை வவுனியா வைத்தியசாலையில் காலமானார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கிரிதரன்.

கரவெட்டி.

## செபஸ்தியாம்பிள்ளை பேணாட் குணசிங்கம்

(இளைப்பாறிய தொழில்நுட்ப நிர்வாக உத்தியோகத்தர்-நில அளவைத் திணைக்களம்)



வல்வெட்டித்துறை, நெடியகாட்டைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை பேணாட் குணசிங்கம் (05.03.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை(பெரியதம்பி- மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், இரட்னேஸ்வரி(செலின்) அவர்களின் அன்புக் கணவரும், செல்வினி(அமெரிக்கா), நிரஞ்சினி (ஆசிரியை மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தன் (அமெரிக்கா), றெஜினோல்ட்(உதவிப் பிரதேச செயலர், காத்தான்குடி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற S.B.குலசிங்கம் (பட்டயக் கணக்காளர்), S.A.இராஜசிங்கம் (இளைப்பாறிய வருமான வரி உத்தியோகத்தர்), S.அன்ரன் இரத்தினசிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்)ஆகியோரின் அன்புச் சகோதரரும், விராஜ், நிரேஷ், றெனிஷ், அபினேஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இருதயபுர திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில் ஆராதனையின் பின் மட்/கல்வி யங்காடு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.அன்ரன் இரத்தினசிங்கம்
மற்றும் குடும்பத்தினர்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை,
தொ.பே: 060 221 4677


# B.Sc. in Computer Science

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இக் கற்கைநெறியானது **North Lanka IIT** இனால் நடாத்தப்பட்டு இதற்கான **Validation & Certificate** இனை வழங்க இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமுடைய**(UGC) Commonwealth** நாடு ஒன்றில் உள்ள **Isles International University** ஆனது **North Lanka IIT** இனை தமது **Partner Institution** ஆகவும் இலங்கைக்கான Representative ஆக North Lanka IIT Director S.A.Balasubramaniam அவர்களையும் நியமித்துள்ளது.

இக் கற்கைநெறியினை Colombo இல் நடாத்துவதற்குரிய அனுமதி
**NOTTINGHAM COLLEGE OF LONDON**
இற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**மேற்படி கற்கைநெறிக்கான New Batch**
**10-03-2009 ஆரம்பம்**

இக் கற்கைநெறியானது,
அரச ஊழியர்கள், வங்கிகளில் பணிபுரிவோர், கல்வியியல் கல்லூரியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு ஏற்றது
குறைந்த கட்டணத்தில் சர்வதேச மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமுடைய சான்றிதழ்

இக் கற்கைநெறியின் போது,
பரீட்சைகள் யாவும் North Lanka IIT இனால் North Lanka IIT இலேயே நடாத்தப்படும்

**வார நாட்களிலும் விரிவுரைகள் ஆரம்பம்**

**North Lanka IIT** தற்போது இணையத்திலும்...............

# North Lanka IIT

**Partner Institution of Isles International University & Representative's Office**

Head Office:-Main Street, Chankanai. Jaffna Office:- #95, Ariyakulam, Jaffna.
Colombo Office:- Nottingham College of London, #36 1/1, Station Road, Wellawatte, Colombo 6.
Phone:- +94(0) 602214305 Web:- www.northlankaiit.com, www.nliit.com e-mail:- rector@northlankaiit.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# குடாநாட்டின் புதுவகை வர்த்தகக் கலாசாரம்

குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை தடைப்பட்ட காலத்தில் இருந்து - 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர்- இப்பிரதேசத்து மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் கிடைப்பதும், அவற்றின் விலை களும் எட்டாக் கொப்பில் நின்றதையும் மறக்க இயலாது. இப்போதும்கூட, பொருள்கள் தாராளமாகக் கிடைப் பதாகவும், சராசரி விலைகளுக்குப் பெறக்கூடியதாக இருப்பதாகவும் கூற முடியாதே!

அத்தியாவசிய உணவுப் பொருள்களும் சரி, ஏனைய பொருள்களும் சரி, கடல்வழியாக அரசாங்க அதிபரூடாகவும், தனியார்துறையினராலும் தருவிக்கப் படுகின்றன. கப்பல் சேவைகளில் தாமதங்கள், தடங் கல்கள் ஏற்படும்போது, உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய பாவனைப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு உண்டாவதும் அவற்றைப் பங்கீட்டுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாவதும் அடிக்கடி நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இது இந்தப் பிரதேசத்தின் மாறாத நோய் என்ற நிலைக்கும் மாறிவிட்டது....!

இத்தகைய சந்தர்ப்பங்களில், பொருள்களின் நியாயமான விலையை அடியோடு மறந்து வாத்தகர்கள் தமது இலாபத்தை மட்டுமே முன்னிலைப்படுத்தி விற்பனை செய்து மக்களைப் பாதிப்புறச் செய்வதும் சர்வசாதாரணமாகிவிட்டது. அதுவே புதிய ''வர்த்தக தர்மம்'' ஆகியும் விட்டது!

மறுபுறத்தில் பொருள்களின் நிறைகளைக் குறைத்து விற்பனை செய்வதும் இப்போது சர்வ சாதாரணம். தட்டிக் கேட்பார் எவருமில்லை என்ற போக்கும் (ஏன் நோக்கும்) தட்டுப்பாடான காலம், தட் டுப்பாடற்ற காலம் என்ற பேத மில்லாமல் மக்களைச் சுரண்டும் அதர்மம் கொடிகட்டிப் பறக்கிறது.

கூட்டு மொத்தமாக, அல்லது நடைமுறை விதியாக மேற்சொன்ன இரண்டு வகைகளும் ஒன்று சேர்ந்ததே - பின்னிப்பிணைந்ததே - குடாநாட்டின் இன்றைய ''வியாபாரக் கலாசாரம்'' எனலாம்.

மேற்சொன்ன வியாபாரக் கலாசாரத்தின் ஓர் அங்கமான நிறை குறைந்த பொருள் விற்பனை பற்றிய செய்தி ஒன்று வெளிவந்திருக்கிறது. கடந்த ஒரு வாரத்தில் மட் டும் பாண் தயாரிப்பதில் ஈடுபடும் எட்டு பேக்கறிகளைப் பாவனையாளர் அலுவல்கள் சபையின் அதிகாரிகள் குழு ஒன்று கண்டுபிடித்திருக்கிறது என்பதே அந்தச் செய்தி. யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் - குடாநாட்டில் பரவலாக - இந்த ''வியாபாரக் கலாசாரம்'' தொற்றிக்கொண்டிருக்கிறது என்பது இதிலிருந்து தெட் டத் தெளிவாகிறது.

சம்பந்தப்பட்ட பேக்கறி உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

மறுபுறத்தில் குடாநாட்டின் உணவகங்களில் தின் பண்டங்கள் அதிகூடிய விலைகளில் விற்பனை செய்யப் படுவது குறித்த மு றைப்பாடுகள் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபைக்குக் கிடைத்திருப்பதாக மற்றொரு தகவல் வெளியாகி உள்ளது.

குடாநாட்டில் சில காலமாக உணவுப் பொருள்களின் விலைகள் எல்லையின்றி, எக்கச்சக்கமாக உயர்ந்து நின்றன என்பது மறுக்க முடியாத அல்லது சளப்பமுடியாத உண்மை. அவ்வேளை உணவகங்களில் தின்பண் டங்களின் விலைகள் உயர்ந்தன. அது தவிர்க்க முடியாத விலை உயர்வு; நியாயமானதும் கூட.

முன்னர் உயர்த்தப்பட்ட விலைகளிலேயே இப்போதும் தின்பண்டங்களை விற்பனை செய்வதை, எந்தவகைக் கணக்குப் போட்டுக் காட்டினாலும் ஏற்றுக்கொள்ள முடியாது. உணவக உரிமையாளர்களுக்கு இலாபம் இன்றி அவற்றை நடத்த இயலாது என்பது யதார்த்தமே ஆனால் தின்பண்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்கள் தட்டுப்பாடின்றியும் குறைந்த விலைகளிலும் கிடைக்கும் இந்தக் காலத்திலும் முந்திய விலைகளில் விற்பனை செய்வது- அதிக லாபம் ஈட்டுவது மாற்று மார்க்கம் இன்றி அங்கு உண்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோரின் வயிற்றில் அடிப்பதாகும்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். மேற்கூறிய இரண்டு வகை வர்த்தகக் குற்றங்களை விட மக்களைப் பாதிக்கும் கலப்படம், காலாவதியான பொருள்களைப் பாவனையாளர்களிடம் கட்டி அடிப்பது போன்ற பல வர்த்தகக் குற்றங்கள் இப் பிரதேசத்தில் மலிந்துள்ளன.

திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்று கூறிக்கொண்டு, அதிகாரிகள் வெறுமனே நிலத்தைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. நெருப்புக் கொளுத்தும் இராசாவுக்குக் கொள்ளி எடுத்துக் கொடுக்கும் மந்திரிகளாக அவர்கள் இருக்கக் கூடாது.

மொத்தத்தில் மக்களுக்கு நியாயமான விலைகளில் பொருள்கள் கிடைப்பதற்கான நீதி செய்யப் படவேண்டும்

# யாழ்.நகரத்தில் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கும் பணிகளை விஸ்தரித்தது 'ரெலிக்கொம்'

யாழ்ப்பாணம், மார்ச் 8

ரெலிக்கொம் நிறுவனம் யாழ்.நக ரப் பகுதியில் தொலைபேசி இணைப் புக்களை வழங்கும் பணியை தற்போது விஸ்தரித்துள்ளது.

நகரில் கஸ்தூரியார் வீதி, ஆஸ் பத்திரி வீதி, கே.கே.எஸ்.வீதி ஆகிய இடங்களில் 'கேபிள்' தொலைபேசி இணைப் புக்களை வழங்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுமக்களின் வீடுகள் போன்றவற்றிற்கு இவ் இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொலைபேசி இணைப்புக்களுக்கு ஏற்கனவே விண்ணபித்தவர்களுக்கும் அதனைவிட புதியதாக விண்ணப்பித்தவர்களுக்கும் உடனடியாக விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (50-224)

# முல்லையில் இருந்து.....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வி.சண்முலிங்கம்(வயது69)-பூநகரி, கே. கிருஷ்ணமூர்த்தி (வயது53)- முள்ளியன்காடு, எஸ்.அங்கம்மா (வயது 76)-மாத்தளன், எஸ்.இராசமணி (வயது 65)-பூநகரி,எஸ்.எ.விமலநதன் (வயது39)-இரணைப்பாலை, எஸ்.செல்வபாக்கியம்(வயது74)-பரந்தன், எஸ்.ரத்தினா (வயது57)-வன்னிக்குளம், எஸ்.தொம்மஸியா(வயது67)-ஆலங்குளம், வி.நாகராஜா(வயது64)-யாழ்ப்பாணம்,எஸ். சுப்பிரமணியம்(வயது70)-யாழ்ப்பாணம், எஸ்.ராஜலக்சுமி(வயது63)-பரந்தன், ரி.றோஸ்(வயது62)-கொய்யாத்தோட்டம், ஆர்.ரவீந்திரன்(வயது42), பொக்கணை, கலையரசி(4 மாதம்)-வட்டக்கச்சி, நாகேஸ் வரி(வயது23), வட்டக்கச்சி, திருபா (வயது2) -வட்டக்கச்சி, எம்.சிந்துஜன (வயது23)-மாத்தளன்-

எம்.தவக்கொழுந்து(வயது62)-முல்லைத்தீவு, எஸ். கனகையா (வயது 72)- வவுனியா, ஆர்.பிரதீப்(வயது13)-பொக்கணை, எம்.மெக்டறி(வயது64)-கொய்யாத்தோட்டம், ஐ.செல்லம்மா (வயது63) -தெல்லிப்பழை, என்.நவமணி (வயது70)-மாத்தளன், ஆர். சிறிரங்கன் (வயது90)-விசுவமடு, ஜே.றோயர்ஸ் (வயது79)-கிளிநொச்சி, பி.சிலியா (வயது65)-கிளிநொச்சி, கி.லக்சுமி (வயது67)-பளை, ரி.திலக்ஷன் (வயது9)-புதுக்குடியிருப்பு, எம்.பத்மாவதி (வயது72)-புதுக்குடியிருப்பு, ஜெ.பிலிப்பையா (வயது69)-கிளிநொச்சி, இருதயம் (வயது80)-அலம்பில், எஸ்.நிருஷா(வயது8)-மாத்தளன், கே.தமயந்தி (வயது29)-பருத்தித்துறை, ஆர்.ஆர்த்திகா(4 நாள்கள்)-பருத்தித்துறை, ஆர்.ஆர்த்தி (4நாள்கள்), கே.ஈஸ்வரதேவி (வயது62)-பருத்தித்துறை, எஸ்.வினோதராஜ் (வயது23)-முள்ளியவளை-

கே.தங்கராணி(வயது52)-மல்லாவி, எஸ்.எம்.சிவகுமார்(வயது45)-கிளிநொச்சி, எஸ்.விதுர்ஷிகா(வயது 6)-கிளிநொச்சி, தெய்வானைப்பிள்ளை(வயது62)-அரியாலை, கே.இராசமணி(வயது75)-உருத்திரபுரம், ஜெ.அருள்மதி(வயது32)-மாத்தளன், எஸ்.ஜெயந்தன்(வயது32)-மாத்தளன், ஜெ.கனிஷ்ரா(வயது10)-மாத்தளன், ஜெ.கனிஷ்ரன்(வயது12)-மாத்தளன், கே.கஜன்(வயது2)-மாத்தளன், எஸ்.ஜெயலக்சுமி(வயது45)-மாத்தளன், எஸ்.விஷ்ணு(வயது05)-மாத்தளன், இ.சிவராஜ்(வயது67)-முள்ளியவளை, ரி.அன்னலக்சுமி(வயது66)-அளவெட்டி, எ.மேரி மெட்ரெண்டா (வயது60)-மன்னார், எஸ்.விஜயந்தி (வயது30)-கிளிநொச்சி, எஸ்.பிரவீன்(வயது2)-கிளிநொச்சி, கே.நாகராஜ்(வயது93)-வட்டக்கச்சி -

ஜனனி(வயது5)-மாத்தளன்,கே.கமலாவதி (வயது52)-இரணைப்பாலை, என்.அருளம்மா(வயது63)-வவுனியா, செல்வராணி(வயது29)-கிளிநொச்சி, வி.தாமோதரம்பிள்ளை(வயது71)-முள்ளியவளை, ஆர்.ராகதீஸ்வரி(வயது32)- காரைநகர், ஆர்.கஸ்மினி(வயது2.5)- காரைநகர், ஆர்.பிரவீன்குமார்(வயது5)- காரைநகர், ரி.சிவபாக்கியம்(வயது68)- முள்ளியவளை, எஸ்.வேலாயுதன்(வயது 69)-மாத்தளன்,யு.ஜெசுதா(வயது 32)-மாத்தளன்,யு.நிலானி(வயது 4)-மாத்தளன்,ஆர்.கிருஸ்ணபிள்ளை(வயது 60)-கிளிநொச்சி, எஸ்.மயில்வாகனம் (வயது70)-முல்லைத்தீவு, எஸ்.விரிச்சிரம்மா(வயது84)-மன்னார், கே.பரமேஸ்வரி(வயது66)-குமுழமுனை, எஸ்.தம்பு(வயது67)-கிளிநொச்சி, எம்.நிசாம்(வயது69)-தெல்லிப்பழை, எஸ்.வீரசிங்கம்(வயது72)-பூநகரி, வி.கந்தையா(வயது70)-முல்லைத்தீவு, டபில்யூ.மனோன்மணி(வயது59)-பூநகரி, கே.நாகராஜா(வயது68), பரந்தன், கே.செல்லையா (வயது70)- முல்லைத்தீவு, கே.சோமசுந்தரம்(வயது71)-மாங்குளம், கே.சேதுப்பிள்ளை(வயது72)-முல்லைத்தீவு, கே.அன்னபூரனேஸ்வரி (வயது 71)- முள்ளியவளை-

எஸ்.கணபதிப்பிள்ளை(வயது76)-முள்ளியவளை, வி.சிவசுப்பிரமணியம் (வயது 72)- முல்லைத்தீவு, ஏ.சீனியன் (வயது78)-பளை, ஏ.சீனியப வளம்(வயது73)- பளை,

கே.கலைவாணி (வயது30)- மாத்தளன், கே.தெய்வானை(வயது69)-மாத்தளன், வி.கணையா(வயது70)-இரணைப்பாலை, ஆர்.பிரணவன்(வயது11)-முல்லைத்தீவு, ஆர்.நவநீதராணி(வயது42)-முல்லைத்தீவு, ஐ.பிரதீசன்(வயது8)-முல்லைத்தீவு,

சறோஜினி (வயது 53) தம்பலகாமம், கே.வீரசிங்கம் (வயது 70) துணுக்காய், கே.மகேஸ்வரி (வயது 71) துணுக்காய், வி.சண்முகராஜா (வயது 69) கிளிநொச்சி, எம்.தம்பிராஜா (வயது 80) டயகம, எஸ்.சுதாகரன் (வயது 7) மாத்தளன், எஸ்.கௌரி (வயது 48), அக்சயா (வயது 6), எஸ்.தேவதாஸ் நவரத்தினம் (வயது59) மாத்தளன், ஏ.சந்திரகுமார் (வயது50) மல்லாவி, எஸ்.சிவராஜா (வயது 55) ஒட்டிசுட்டான், என்.ரத்தினசிங்கம் (வயது 76) முல்லைத்தீவு, கே.ஈஸ்வரி (வயது 65) மந்துவில், கே.கந்தையா (வயது 77) முள்ளியவளை, கே.மலர் (வயது 68) யாழ்ப்பாணம், எப்.ஜெயபாலன (வயது 52) யாழ்ப்பாணம், ஜே.பிரேமா (வயது 48) யாழ்ப்பாணம், எஸ்.சுதர்சன் (வயது 28) யாழ்ப்பாணம், எஸ்.ஜெயந்தினி (வயது 24) ஒட்டிசுட்டான், திருபாகரி (வயது 20) முல்லைத்தீவு, வி.பரமேஸ்வரி (வயது 40) முத்தையன்கட்டு, ஏ.சிவபாக்கியம் (வயது71) புதுக்குடியிருப்பு, ஏ.மீனாட்சி (வயது70) கிளிநொச்சி, கே.சிவஞானம் (வயது52) பூநகரி, எம்.சிவமாவலகு (வயது75) மாத்தளன், என்.பாலசிங்கம் (வயது 67) பொக்கனை, ஜே.செல்லக்கண்மணி (வயது 53) யாழ்ப்பாணம், எஸ்.கந்தையா (வயது 70) மாத்தளன், ஜே.கனகம்மா (வயது 69) மாத்தளன், ஆர்.கிருபாகரன் (வயது 6) மாத்தளன், ஆர்.லக்சிகா (வயது8) மாத்தளன், எம்.நாச்சியார் (வயது 75) கிளிநொச்சி, என்.சுப்பிரமணியம் (வயது65) பரந்தன், எஸ்.தவசிங்கம் (வயது 67) நெடுங்கேணி, ரி.கங்காதேவி (வயது 57) நெடுங்கேணி, பி.வெள் ளைச்சாமி (வயது 64) வவுனியா, எஸ்.தர்சினி (வயது 31) முள்ளிய வளை, வீரசிங்கம் (வயது 70) புதுக்குடி யிருப்பு, எம்.யோகமலர் (வயது 45) முள்ளியவளை, எஸ்.சியாம் (வயது 2) முள்ளியவளை, எஸ்.ரவீந்திரன் (வயது 60) முள்ளியவளை, வி.சோதிலக்சுமி (வயது64) புதுக்குடியிருப்பு, வி.அன்னலக்சுமி (வயது 74) புதுக்குடியிருப்பு, எஸ்.சின்னம்மா (வயது 74) மடுக்கரை, பி.சறோஜா (வயது 52) மன்னார், என்.முனிசாமி (வயது 83) கிளிநொச்சி, பி.புறோஜினி (வயது 17) கிளிநொச்சி, பி.ஜமுனாராணி (வயது 58) கிளிநொச்சி, ஆர்.செல்லம்மா (வயது 63) கந்தபுரம், எஸ்.வள்ளியம்மா (வயது 64) புதுக்குடியிருப்பு, ஏ.கோணேஸ்வரி (வயது 65) கந்தபுரம், ஐ.அருணாசலம் (வயது 72) மாத்தளன், என்.திருநாவுக்கரசு (வயது 70) கிளிநொச்சி, எஸ்.சோமசுந்தரம் (வயது 71) புதுக்குடியிருப்பு, வி.இராஜேந்திரன் (வயது 75) கொக்குவில், ஆர்.இராஜலக்சுமி (வயது 72) கொக்குவில், எஸ்.வெற்றிவேல் (வயது 55) முள்ளியவளை, டி.சரஸ்வதி (வயது 30) மாத்தளன், டி.குயிலினி (வயது 7), பி.டயஸ் (வயது 31) மாத்தளன், பி.கலைவேந்தன் (வயது 4), கே.மணியன் (வயது52) கிளிநொச்சி, ஏ.மங்கையர்க்கரசி (வயது 67) அடம்பன், கே.மாணிக்கம் (வயது 66) யாழ்ப்பாணம், எஸ்.இராமச்சந்தின (வயது 62) யாழ்ப்பாணம், இராசையா (வயது 74) கிளிநொச்சி, கே.சின்னத்துரை (வயது 75) கிளிநொச்சி, டி.தக்சன் (வயது 25) புதுக்குடியிருப்பு, டலியா (வயது 7) மாத்தளன், ரஞ்சிதமலர் (வயது 64) மாங்குளம், கே.கனகரத்தினம் (வயது 54) மாத்தளன், கே.கைலாயபிள்ளை (வயது 61) பூநகரி, கே.தனலக்சுமி (வயது 50) மாங்குளம், ஜே.இந்திராணி (வயது 65) புதுக்குடியிருப்பு, கே.கௌதினி (வயது 33) முள்ளியவளை, கே.நந்துசன் (வயது 1) முள்ளியவளை, கே.ஜெயந்தா (வயது 36) புதுக்குடியிருப்பு, எஸ்.கோபிராஜ் (வயது 7) புதுக்குடியிருப்பு, எம்.குகன் (வயது 30) முல்லைத்தீவு, எஸ்.சிவநேசன் (வயது 43) கிளிநொச்சி, பி.கண்மணிபிள்ளை (வயது 68) மல்லாவி, பி.கேதுசன் (வயது 7) மல்லாவி, கே.புஸ்பராணி (வயது 74) மல்லாவி, எஸ்.நாகரட்ணம் (வயது 86) பொக்கணை, ஜே.டயானா கொலின் (வயது 22) இரணைப்பாலம், வை.சிந்துஜா (வயது 9 மாதம்) இரணைப்பாலை, எஸ்.சுந்தரம் (வயது 72) பரந்தன், கே.ரவி (வயது 15) மலையார்மடு, எஸ்.பரமலிங்கம் (வயது 59) யாழ்ப் பாணம், எஸ்.இராசம்மா (வயது 68) உருத்திரபுரம், எம்.மாணிக்கம் (வயது 68) பொக்கணை, எஸ்.சிதம்பரம் (வயது 75) பொக்கணை, ஏ.குஞ்சியம்மா (வயது 58) கிளிநொச்சி, யு.கறுப்புசாமி (வயது 75) முரசுமோட்டை, எஸ்.இராசமணி (வயது 69) முரசுமோட்டை, கணசோதி (வயது 52) புளியங்குளம், ஆர்.செல்லையா (வயது 68) தர்மபுரம், ஆர்.விக்னராஜா (வயது 69) முள்ளியவளை, என்.செந்தூரன் (வயது 41) முள்ளிய வளை, எல்.சிவனேஸ்வரி அம்மா (வயது 63) காங்கேசன்துறை, ஏ.லோகேஸ்வரன் (வயது 67) காங்கேசன்துறை, கே.அன்ன லக்சுமி (வயது 72) யாழ்ப்பாணம், எம்.கந்தசாமி (வயது 76) காங்கேசன் துறை, ஆர்.சுகந்தினி (வயது 27) அடம் பன், ஆர்.ரேகா (வயது 8) அடம்பன், ஆர்.பிரதீபா (வயது 9) அடம்பன், ஆர். பானுசன் (வயது 4) அடம்பன், கே.தங்கராஜா (வயது 54) பூநகரி, எஸ்.கனகசபை (வயது 62) ணிஆர்.தணிகாசலம் (வயது 70) யாழ்ப்பாணம், மாரியப்பன்(வயது60) கொறேனா, கே.வேலாயுதபிள்ளை (வயது 62) முல்லைத்தீவு, டி.சிரோன் மணி (வயது 23) பேசாலை, டி.சந்தோஷ் (வயது 2) பேசாலை, கே.பூரணதேவி (வயது 39) முல்லைத்தீவு, மீனகாந்தி (வயது 11) முல்லைத்தீவு, புஸ்பராணி (வயது 38) வவுனியா, எஸ்.கலையரசன் (வயது 1) வவுனியா, எஸ்.கலைமாது (வயது 6) வவுனியா, எஸ்.யோகம்மா (வயது 60) கிளிநொச்சி, சி.சாமுவேல் (வயது 78) அடம்பன், சிறிஸ்கந்தராஜா (வயது 69) கிளிநொச்சி, எஸ்.வேலாயுதம் (வயது 60) நீர்வேலி, எஸ்.சவரிமுத்து (வயது 77) வட்டக்கச்சி, எஸ்.இராஜதுரை (வயது 64) கந்தபுரம், எஸ்.ராஜா (வயது 73) உருத்திரபுரம், எஸ்.சண்முகம் (வயது 79) சிவநகர், எஸ்.மல்லிகாதேவி (வயது 71) சிவநகர், எஸ்.புவனேந்திரன் (வயது 38) வட்டக்கச்சி, பி.அரிகா (வயது 2) வட்டக்கச்சி, பி.லோகிகா (வயது 4) வட்டக்கச்சி, பி.பாமினி (வயது 36) கிளிநொச்சி, ரி.சகிலா (வயது 24) பொக்கணை, ஆர்.சரஸ்வதி (வயது 62) பொக்கணை, வேபி சகிலா (வயது 1), ரி.சுயாந்தினி (வயது 26) முள்ளியவளை, ரி.திருத்திகா (வயது 3) குமுளமுனை, ரி.திலக்சன் (வயது 4) குமுளமுனை, ஆர்.தமிழ்வேந்தினி (வயது 20) மயிலிட்டி, ஆர்.ரஜீவன் (வயது 2) மயிலிட்டி, ஆர்.சந்திரரூபகலா (வயது 19) கிளிநொச்சி, ஆர்.இராமானுயம் (வயது 58) கிளிநொச்சி, எஸ்.சவரிமுத்து (வயது 62) மடு, கே.புவனேஸ்வரி (வயது 68) குமுளமுனை, ஜே.ஜெயரூபன் (வயது 30) மல்லாவி, ஆர்.ஜெயகலா (வயது 30) பளை, ஆர்.முகிலன் (வயது 2 மாதம்) பளை, ஆர்.ராகுலன் (வயது 6) பளை, ஆர்.கோகுலன் (வயது 8) பளை, எம்.நீலகாந்தி (வயது 54) கிளிநொச்சி, ஜெயதர்சினி (வயது 28) மல்லாவி, யதுர்சிகா (வயது 2) மல்லாவி, ஏ.சிவானந்தரூபி (வயது 36) பொக்கணை, எஸ்.லோகிதன் (வயது 1) பொக்கணை, கே.செந்தமிழ்ச்செல்வன் (வயது 34) பொக்கணை, எம்.இராவீந்திரன் (வயது 31) பளை, இராமலிங்கம் (வயது 76) வட்டக்கச்சி, ரி.பூமணி (வயது 90) யாழ்ப்பாணம், பரமேஸ்வரி (வயது 75) உடையார்கட்டு, கே.யது (வயது 4) உடையார்கட்டு, கே.சுகந்தினி (வயது 27) மாத்தளன், கே.கோவலன் (வயது 5) மாத்தளன், கே.தமிழ்ச்செல்வி (வயது 2) மாத்தளன், எஸ்.கோணேஸ்வரன் (வயது 35) கைவேலி, கே.ஜெயலக்சுமி (வயது 62) கிளிநொச்சி, கோபாலபிள்ளை (வயது 70) உதயநகர், ஏ.தர்மன் (வயது 53) பூநகரி, ரி.திலகவதி (வயது 66) கண்டாவளை, கே.தோமஸ் (வயது 60) சுன்னவெளி, ஏ.அருணாகலன் (வயது 81) வடமராட்சி, வி.பாக்கியம் (வயது 73) கரியவெளி, எம்.வேலுவிநாயகம் (வயது 77) ஆரியவெளி, எம்.சின்னப்பிள்ளை (வயது 72) வெற்றிலைக்கேணி, கே.ஈஸ்வரன் (வயது 42) கண்டாவளை, எஸ்.சாவித்திரி (வயது 66) மூல்லைத்தீவு, ஏ.தேவகுமார் (வயது 49) யாழ்ப்பாணம், பி.கணபதிப்பிள்ளை (வயது 76) குமுளமுனை, ரி.மயில்வாகனம் (வயது 70) பூநகரி, ஆர்.வள்ளியம்மா (வயது 73) மாத்தளன், அருள்கலாநிதி எஸ்.ஏ.எல்.பிகாரடோ (வயது 32) மன்னார், எஸ்.சத்தியராஜா(வயது34)-மன்னார், ஏ.ஆரோக்கியம் (வயது32)-மன்னார், பி.அருள்நாதன் (வயது61)-மன்னார், எஸ்.ஆறுமுகம்(வயது74)-உடுப்பிட்டி, ஜி.தங்கபதுமை (வயது47)-புதுக்குடியிருப்பு, வி.சண்முகம் (வயது73) - பொக்கணை, ரி.தேவ ராணி (வயது52) -புதுக்குடியிருப்பு, என்.துரைசிங்கம் (வயது62) -புதுக்குடியிருப்பு, பி.முரளி (வயது32)-மாத்தளன், எம்.திலக்சனா (வயது2)-மாத்தளன், ஜே.நிசாந்தன் (வயது12)- மாத்தளன், ஜே.றாஜினி (வயது40)-மாத்தளன், என்.சின்னமமா (வயது77)-மலிக்கைக்காடு, எம். திலக்சி (வயது4)-யாழ்ப்பாணம், எம். சசியா (வயது28)-யாழப்பாணம், எஸ்.மீனாட்சி (வயது76)-கிளிநொச்சி, எஸ்.திருப்பதி (வயது65)-யாழ்ப்பாணம்,

## நாளை

| | |
|---|---|
| மாசி 25 | 09.03.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | திரயோதசி |
| | மு.ப. 11.47 வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | மு.ப.10.19 வரை |
| சுபநேரம்: | 12.23 - 01.53 |
| ராகுகாலம்: | 07.53 - 09.23 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# மகளிர்தின நிகழ்வுகளும் கண்காட்சிகளும் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 8

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டிலான சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள் இன்று காலை 9 மணி முதல் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம் பெற உள்ளன.

நிலையத்தின் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் கலந்துகொள் வார்.

இந்த நிகழ்வில் நடனம், நாடகம், அபிநய நடனம் போன்றன இடம்பெறவுள்ளன.

* * *

வடமராட்சி,மார்ச் 8

மகளிர் தினத்தை முன்னிட்டு 'தேவை நாளும்' மகளிர் அமைப்பு நடத்தும் 'முற்றத்து மல்லிகை' கண்காட்சியும் விற்பனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேவைநாளும் மகளிர் அமைப்பின் இணைப்பாளர் திருமதி கிருபா பத்மதனேஸ்வரன் தலைமையில் பருத்தித்துறை புலோலி மத்தி வின்தீன் பணி மனையில் இடம்பெறும்.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக பருத்தித்துறை பிர தேச செயலர் இரா.வரதீஸ்வரனும் உமா வரதீஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாகத் தும்பளை அஞ்சலியக இயக்குநர் வண.பிதா எல்.டேமியன் அடிகளும், பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபையின் சேகர முகாமைக்குரு என்.அருள்நாதனும் கலந்துகொள்வர்.

(50-6-236)

## இரண்டு பிள்ளைகளின் தாய் வீட்டில் வைத்துக் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, மார்ச் 8

மட்டக்களப்பு காக்காக்காச்சிவெட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் அதே இடத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பேரின்பநாயகி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த வேளை அங்கு வந்த இனந் தெரியாத ஆயுதக் குழுவினர் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ஐ.நா.தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது இறுதிக்கிரியைகள் நேற்று மேற்கு லண்டனில் இடம்பெற்றது. புலம் பெயர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் அதில் கலந்துகொண்டனர்.

இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள் கறுப்பு உடை அணிந்து ரோஜா மலர்களைக் கொண்டு சென்றனர்.

இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்கள் எரிபொருள்'கான்' ஏதாவது எடுத்துச் செல்கிறார்களா என்று பொலிஸார் சோதனை செய்தனர்.

இறுதிக்கிரியைகளை ஒட்டி போக்குவரத்தும் சுரங்க ரயில் சேவையும் குறிப்பிட்ட பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தன.

இறுதிக்கிரியைகளில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நகர தலைவர்கள் பலரும் இரங்கலுரை நிகழ்த்தினர். (அ-1)

## சென்னை உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக, சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் மாலா, தமிழக உள்துறைச் செயலர் மாலதிக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில், சென்னை உயர்நீதிமன்றத்துக்கு போதிய பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

வரும் திங்கட்கிழமை, சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக கோகலே பதவியேற்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, வழக்கறிஞர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே நடந்த மோதல் குறித்து விசாரித்த ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா கமிட்டியின் இடைக்கால அறிக்கையை ஏற்கமுடியாது என்று அறிவித்துள்ள வழக்கறிஞர்கள், தங்கள் போராட்டதைத் தொடர்வது என்று முடிவெடுத்திருக்கிறார்கள்.

ஸ்ரீகிருஷ்ணா கமிட்டி அறிக்கையில், வழக்கறிஞர்களின் செயல்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டிருந்தன. வழக்கறிஞர்கள் வன்முறையாளர்களைப்போல நடந்துகொண்டதாகவும், தாங்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் போல நடந்து கொள்வதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேநேரத்தில், காவல் துறையினரும் எல்லை மீறி நடந்துகொண்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.(அ-சி)

## கப்பல் சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதற்கு அனுமதிச்சீட்டினை பெற்றுக் கொண்டவர்கள் தமது அனுமதிச் சீட்டில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு மறுதினம் தமது பிரயாணத்தை மேற்கொள்ளலாம் எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

(50)

## விடுதலைப்புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் பிரதேசத்தின் உள்ளே தொடர்ந்து முன்னேறிவரும் இராணுவத்தினர், தற்போது விடுதலைப்புலிகளை 45 சதுர கிலோமீற்றர் பிரதேசத்தினுள் முடக்கியிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன், தாமரைக்குளம் ஆகிய இடங்களில் இடம் பெற்ற மோதல்களில் விடுதலைப்புலிகளின் 32 சடலங்களை இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பதாகவும், ஆயுதத் தளபாடங்கள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவித்திருக்கின்றது.

(அ-சி)

## குடாநாட்டுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொறிகள் அத்தியாவசியப் பொருள்களுடன் வடக்கு நோக்கிச் செல்லும்.

இதேவேளை, வடபகுதி விவசாய உற்பத்திப் பொருள்களை கொழும்புக் குக் கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் பொருள்களையும் கொழும்புக்கு எடுத்துவரப்படும் பொருள்களையும் களஞ்சியப்படுத்த வெலிசறையில் உள்ள களஞ்சியம் பயன்படும். அங்கிருந்து எடுத்துச்செல்லப்படும் பொருள்கள் நாவற்குளியில் களஞ்சியப்படுத்தப்படும்.

ஏ-9 வீதியைப் பயன்படுத்துவதன் மூலம் வடக்கில் பொருள்களின் விலையை பெருமளவில் குறைக்க முடியும் அத்துடன் வடக்கில் இருந்து எடுத்துவரப்படும் மரக்கறி, பழவகைகளை கொழும்பில் சந்தைப்படுத்த புறக்கோட்டை வர்த்தகர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். எதிர் காலத்தில் இவ் வீதியூடாக தனியார் வர்த்தகர்களும் பொருள்களை ஏற்றிச் செல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் - என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரத்ன மேலும் தெரிவித்தார். (அ-7)

## ம.தி.மு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், பிரிவினைவாதத்தைத் தூண்டும் வகையிலும் பேசியதாக அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-1)

## பிள்ளையான் அணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையான் அணியைச் சேர்ந்த பெரும் பாலான உறுப்பினர்கள் இராணுவத்தில் இணைந்தனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சரும் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் எட்வின் குணத்திலக, மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த வீரசூரிய, மாநகர முதல்வர் சிவகீத்தா பிரபாகரன் மற்றும் கட்சிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கையளிக்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பான விவரங்கள் வருமாறு:

ரி 56ரக துப்பாக்கிகள் 52 அதற்கான மகசீன் 168 மற்றும் றவைகள் 2106, எஸ்.எம்.ஜி.ரக துப்பாக்கி 01, ரி 81ரக துப்பாக்கி 01, ஏ.கே.எல்.எம்.ஜி.ரக துப்பாக்கிகள் 02, ஆர்.பி.ஜி. உட்பட செல்கள் 46, வெளிச்சக் குண்டுகள் 16, பி.கே. ரவுண்ஸ் 4650, கைக்குண்டுகள் 02, உட்பட பல்வேறு வகையான ஆயுதங் கள் கையளிக்கப்பட்டன.

இதேவேளை-

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை அரசாங்கப் படையினர் வெற்றிகொண்டு விட்டனர். அதனால் எமக்கு இனி[illegible] ஆயுதங்கள் தேவை இல்லை.

தமிழ் மக்கள் விடுதலைலப்புலிகள் கட்சியைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் இலங்கை இராணுவப் படையில் இணைந்துள்ளனர்.

எமது கட்சியிடம் இருந்த ஆயுதங்களை கையளித்துவிட்டோம் எமது உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் இராணுவத்தில் இணையவுள்ளனர், ஏனையோர் சுயதொழில் வாய்ப்பு பெறவுள்ளனர். எமது அங்கத்தவர்கள் பலருக்கும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும் என்று வெபர் அரங்கில் நடைபெற்ற ஆயுதக்கையளிப்பு வைபவத்தில் பேசுகையில் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறினார். (அ-1-7)




IDM EDUCATIONS SERVICES (PVT) LIMITED.
(Member of IDM Group of Companies)
Jaffna Branch
Student Visa - UK
YOUR Trusted Partner in Professional Educational Counseling for 100% VISA Success.
Our Universities - UK
University of Sunderland · University of Worcester · City of London College · University of Wolverhampton · York St John University · Prifysgol Cymru University of Wales · the University of Greenwich · London Metropolitan University
DIRECT TRANSFERS TO UNIVERSITIES AND COLLEGES IN UK
Fast Track Degree Program (Two Years) After G.C.E O/L or A/L
DIRECT ENTRY to the Bsc (Hons) Final Year on Completion of EDEXCEL HND
M.Sc, MIT, MBA, MA Courses
யாழ் நகரில் இருந்தவாறே உங்கள் மேற்படிப்பிற்கான Student Visa ஒழுங்குகளை குறைந்த செலவில் இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்...
IDM Education Services
Head Office: 230, 4th Floor, Galle Road, Colombo 04. Tel No: 0112583338
Jaffna Branch: 114, Navalar Road, Jaffna. Tel No: 021 2224142

Microsoft Certified
Systems Engineer / Administrator
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.03.2009 08.00AM
Become an Engineer
விபரங்கள் நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

மலிவு விலையில்......
திருமண அழைப்பிதழ்கள்
ADORNA CARDS
www.andradesigns.com
விசேட விலைக்கழிவு 10%



புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய
திருமண அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)
# 68, உப்புமடம் சந்தி, கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
இணையத்தள முகவரி : www.andradesigns.com

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... ## பதிவு செய்வோருக்கு கற்கை கட்டண சலுகை
## MS Office ## DTP
* Accounting * English * VB.net
## Hardware * Web Developing
* Video Editing *AutoCAD
International Courses...
## MCP ## MCSE ## MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.03.2009 08.00AM
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2010 A/L
கைத்தொழில் இரசாயனம்
ஆரம்பம் - 08.03.2009
SAT, SUN - 5.15 - 6.15pm
BY - RAJAH

முதலாம் தவணைக்கான வினாத்தாள்
ஐடியல் வெளியீடு
தரம் 6 முதல் O/L வரை
சகல பாடங்களுக்கான வினாத்தாள்கள் தேவைப்படுகின்ற பிரத்தியேக வகுப்புகள், கல்வி நிறுவனங்கள் 09.03.2009க்கு முன் எமது நான்கு நிறுவனங்களிலும் நேரிலோ அல்லது 060 - 221 9377 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொள்ளவும்.
ஐடியல் அக்கடமியின் முதலாம் தவணைப் பரீட்சைகள் 11.03.2009 அன்று ஆரம்பமாகின்றது.
ஐடியல் அக்கடமி
சிரணிச்சந்தி, சண்டிலிப்பாய். | இடைப்பிட்டி, காரைநகர்.
நீராவியடி யாழ்.நகர். | அந்தோனியார் கோயில் அருகில், மானிப்பாய்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org